
# செயல்களின் சீர்திருத்தம்

## தொடர்பான பொன்னான போதனைகள்




அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா...)
அவர்களின் ஜுமுஆ பேருரைகளின் ஒளியில்

**வெளியீடு**

நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்

# செயல்களின் சீர்திருத்தம் பற்றி பொன்னான போதனைகள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
அவர்களின்  ஜுமுஆ பேருரைகளின் ஒளியில்

**வெளியீடு:**
**நஸாரத் நஷ்ரோ இஷாஅத்**
**காதியான்**

**Tamil verson of Islah-e-A'amal**

Book Name : Islah-e-A'amal
Compiled by : Nazarat Islah-o-Irshad, Qadian
Year : 2015
Copies : 1000
Translated by : *O.M. Muzzammil Ahmad*

Published by : Nazarat Nash-o-Isha'at, Qadian
Gurdaspur Distt, Punjab-143 516

For Further information please visit
www.alislam.org
www.mta.in

Noor-ul-Islam Toll Free No : 1800 30 102 131
Tamilnadu Toll Free No : 1800 425 40000

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இறைவணக்கம் என்பதன் உண்மையான கருத்து | 5 |
| 2. | வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மை, நேர்மைக்கான உதாரணங்கள் | 7 |
| 3. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் தியாகங்கள் | 10 |
| 4. | வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோழர்களின் உண்மை நேர்மைக்கான சம்பவங்கள் | 15 |
| 5. | செயல் நிலைமைகளை சீர்திருத்துவதன் அவசியம் | 19 |
| 6. | செயல்களின் சீர்திருத்தத்தில் தடைகளுக்கான காரணங்கள் | 27 |
| 7. | முதல் காரணம், | 29 |
| 8. | இரண்டாவது காரணம் | 30 |
| 9. | மூன்றாவது காரணம்,  நான்காவது காரணம் | 34 |
| 10. | ஐந்தாவது காரணம் | 36 |
| 11. | ஆறாவது காரணம் | 37 |
| 12. | ஏழாவது காரணம் | 38 |
| 13. | எட்டாவது காரணம் | 39 |
| 14. | செயல் அளவிலான சீர்திருத்தத்திற்குத் தேவையான மூன்று விஷயங்கள் | 41 |
| 15. | எண்ணம் அளவிலான ஆற்றல் என்பதன் கருத்து | 47 |
| 16. | அறிவு அளவிலான ஆற்றல் என்பதன் கருத்து | 51 |
| 17. | செயல் அளவிலான ஆற்றல் என்பதன் கருத்து | 51 |
| 18. | ஜமாஅத் முரப்பிகள், அறிவுரை கூறுபவர்களின் கடமைகள் | 53 |
| 19. | செயல் சீர்திருத்தத்திற்குத் தேவையான 4 ஆதரவுகள் | 60 |
| 20. | ஆலிம்கள், முரப்பிகள் உள்ளங்களை  சீர்செய்யுங்கள் | 69 |
| 21. | பெரும் ஆயுதம் துஆ ஆகும் | 70 |
| 22. | செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீ ஹ் (அலை) அவர்களின் அறிவுரைகள் | 71 |

# முன்னுரை

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 29 நவம்பர் 2013 அன்றிலிருந்து 7 பிப்ரவரி 2014 வரையில் வழங்கிய ஜுமுஆ குத்பாக்களில் 9 குத்பாக்கள் செயல்களின் சீர்திருத்தத்தின் தேவை மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவற்றில் ஹுஸூர் அவர்கள் ஜமாஅத் சகோதர்களுக்கும் குறிப்பாக முரப்பிகள், முஅல்லிம்கள், ஜமாஅத் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கும் அவர்களின் கடமைகள் பற்றி தெளிவுபடுத்தினார்கள்.

அந்த குத்பாக்களின் சுருக்கம் மன்சூபா பந்தி கமிட்டி (திட்டக் குழு) சார்பாக தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. எல்லா முரப்பிகளும் பொறுப்பாளர்களும் இதை தாமும் படியுங்கள்; சகோதரர்களுக்கும் படித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். இந்த குத்பாக்களை இணைய தளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கேட்க வைக்க முடியும். இதன் **CD** யை நஷ்ரோ இஷாஅத் அலுவலகத்திலிருந்து வாங்கி ஜமாஅத் சகோதரர்களுக்கு கேட்க வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யுங்கள்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இந்த வழிகாட்டல்களின்படி செயல்படுகின்ற, செயல்பட வைக்கின்ற நல்வாய்ப்பையும், ஜமாஅத்தின் முயற்சியில் வேகத்தைக் கொண்டு வருவதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக. ஆமீன்.

**நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாது**
**காதியான்**

(1)

## குத்பா சுருக்கம் 29 நவம்பர் 2013

### இறை வணக்கம் என்பதன் உண்மையான கருத்து:

தஷஹ்ஹுது, தஅவ்வுது, சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹஸ்ரத் அமீருல் மு்ஃமினீன் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், ***வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்*** (நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்)என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.(51:57) மேலும் மனித வாழ்வின் குறிக்கோள்களைப் பற்றி விளக்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

ஓர் இறை அடியார் எல்லா விவகாரத்திலும் அல்லாஹ்வின் திருப்தியை முன்னிறுத்தி தனது உலக பயன்களுக்கு எவ்வித மதிப்பும் கொடுக்காமல் இருக்கும்போதுதான் உண்மையான இறை அடியார் என அழைக்கப்பட முடியும். இந்தக் கருத்தை நான் பெரும்பாலும் விளக்கியவாறு கவனமூட்டி வந்திருக்கிறேன். இன்று நான் இந்த கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் குத்பாவிலிருந்து பயன் பெற்றவாறு உங்களுக்கு முன்னால் எடுத்துரைப்பேன். சம்பவங்களின் மூலமாக கருத்தை எடுத்து விளக்குவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழக்கமாக இருந்தது. அவற்றின் மூலமாக சில அம்சங்களின் செயல் வடிவம் நமக்கு முன்னால் வந்து விடுகின்றன.

***வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்,*** அதாவது நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக அல்லது என்னுடைய அடியார் ஆகுவதற்காக படைத்திருக்கிறேன் (திருக்குர்ஆன் 51:57) என்ற கருத்தை விளக்கியவாறு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இதுவே மனித படைப்பின் உயர்ந்த குறிக்கோள் ஆகும். ஆனால் மாபெரும் தத்துவவாதிகள், கல்வி அறிவு படைத்தவர்கள், மனிதனுடைய படைப்பின் இந்த நோக்கம் வெற்றி பெற்றதா? எனவும் மேலும் எதை முன்னிறுத்தி இறைவன் மனிதனைப் படைத்தானோ அந்த வேலையை மனித குலத்திடமிருந்து வாங்கினானா? எனவும் கேள்வி எழுப்புகின்றனர். மேலும் உண்மையிலேயே மனிதன் இந்த குறிக்கோளை நிறைவு செய்து கொண்டிருக்கிறானா? மேலும் அவன் இறைவனுடைய அடியார் என அழைக்கப்படத் தகுதி பெரும்

அளவிலான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறானா? எனவும் கேள்வி எழுப்புகின்றனர். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அதற்குரிய பதில் இல்லை என்பதாகும். எனவே அவர்கள், மனிதனைப் படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்றால் அவனுக்கு ஏன் இந்த நோக்கத்தில் வெற்றி கிடைக்கவில்லை என்ற கேள்வியை வைக்கின்றனர்.

இதற்குரிய பதில் என்னவென்றால், இறைவனுடைய நபிமார்கள் இந்த கேள்விக்கான பதிலை தருவதற்காக வருகிறார்கள். மேலும் நன்மையை எந்த அளவுக்கு விரைந்து நடைமுறைப் படுத்துகிறார்கள் என்றால் அதைப் பார்த்து இந்த நோக்கம் நிறைவேறிவிட்டது என்பதை எதிரிகளும் ஒப்புக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த நாளின் வருகைக்காக ஆயிரம் நாட்கள் காத்திருக்க வேண்டியது வந்தாலும் அது கடிமானது அல்ல. அல்லாஹ்வும் நபிமார்களின் காலத்தை ***'லைலதுல் கத்ர்'*** என குறிப்பிடுகிறான். ***லைலத்துல் கத்ரி கைரும் மின் அல்ஃபி ஷஹ்ர்*** எனக் கூறுகிறான். அதாவது அந்த ஓர் இரவு, ஆயிரம் மாதங்களை விட சிறந்தது ஆகும். அதாவது ஒரு நூற்றாண்டிலுள்ள மனிதர்களும் இந்த ஓர் இரவுக்காக தியாகம் செய்யப்பட்டால் அந்த தியாகமும் நபிமார்களின் மூலமாக உலகத்திற்கு கிடைக்கின்ற அருள்களுடன் ஒப்பிடும்போது அது குறைவானது ஆகும்.

**அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:** ''இவ்வாண்டு நான் செயல்களின் சீர்திருத்தங்கள் பற்றி சில குத்பாக்களை கொடுத்திருந்தேன்.''

(இது 1936 ஆம் ஆண்டு நடந்த விஷயமாகும்.)

''அதில் நான் கவனமூட்டியிருந்தது என்னவென்றால், எந்த மகத்தான குறிக்கோளுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தோற்றம் நிகழ்ந்ததோ அதை நிறைவேற்றுவதற்கு நாம் பெரும் தியாகங்களை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.''

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இது அந்த காலத்தின் விஷயம் மட்டுமல்ல. இது தொடரக்கூடிய ஒரு செயலாகும். இன்றும், எதிர் காலத்திலும் அதற்குரிய தேவை இருக்கிறது. இன்னும் இருந்து கொண்டே இருக்கும்.

''கொள்கை அளவில் நாம் உலகத்தில் நம்மை உறுதியாக்கி விட்டோம்; ஆனால் செயலளவில் இஸ்லாத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை இன்னும் எஞ்யிருக்கிறது. ஏனெனில் அது அல்லாமல் எதிரிகளின் மீது உண்மையான தாக்கம் ஏற்பட முடியாது. பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உதாரணம்

குறிப்பிட்டார்கள். இதற்கு செயலளவிலான மிகப் பெரிய உதாரணம், உண்மை என்பதாகும். அதாவது உண்மையை ஓர் உதாரணமாக எடுத்து கூறுகிறேன். இதனை நாம் செயலளவில் பார்த்தால் அது எப்படிப்பட்டது? அதைப் பற்றி கூறுகிறார்கள்: இது எப்படிப்பட்டது என்றால் அதை எதிரியும் உணர்கிறார். உள்ளத்தின் தூய்மையோ ஈமானோ எதிரிக்குத் தென்படுவதில்லை. ஆனால் உண்மையை அவர் கண்டு கொள்ள முடியும்.''

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: உண்மை என்னவென்றால் 'உண்மை' என்பது மிக அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது ஆகும். அந்த காலத்திலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு கவலை இருந்தது. இப்போது இந்த காலத்திலும் எனக்கு மற்றவர்களிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. அவற்றில் அஹ்மதிகள் உண்மையை பேணுவது தொடர்பாக குறிப்பு இருக்கின்றது. இதன் காரணமாக (அஹ்மதியால்லாத) அவர்கள் ஜமாஅத்தையும் பாராட்டுகின்றார்கள். மேலும் எந்த அஹ்மதிகளின் மூலமாக அவர்களுக்கு ஏமாற்றமும் பொய்யும் கிடைத்திருக்கிறதோ அவர்கள், நாங்கள் ஜமாஅத்தின் நல்ல பெயரின் காரணமாக நம்பியிருந்தோம். ஆனால் உங்கள் ஜமாஅத்தின் இன்னின்ன நபர்கள் எங்களை ஏமாற்றி விட்டனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

எனவே அப்படி ஏமாற்றுபவர்கள், வெளிப்படையில் எங்களின் சொந்த விவகாரங்களாகும்; எங்களுடைய வியாபாரமாகும்; எங்களுடைய தொழிலாகும். ஜமாஅத்திற்கும் இதற்கும் என்ன தொடர்பு எனக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் கடைசியில் ஜமாஅத்தின் மீதும் பழி சுமத்துவதற்குக் காரணமாகி விடுகின்றனர்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மை மற்றும் நேர்மையின் உதாரணம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்னுள்ள ஓர் உதாரணத்தைக் குறிப்பிட்டார்கள். ''குடும்ப சொத்து தொடர்பாக ஒரு வழக்கு இருந்தது. வீட்டு வராந்தாவுக்கு முன்னால் ஒரு திண்ணை அமைக்கப்பட்டிருந்தது. அங்கு இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகங்கள் இருந்தன.''

இப்போது காதியானில் சில மாற்றங்கள் வந்து விட்டன. அலுவகங்கள் அங்கிருந்து மாற்றப்பட்டு விட்டன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''அந்த வராந்தாவின் நிலம் உண்மையில் எங்களுடைய குடும்பத்திற்குரியதாக இருந்தது. ஆனால் அதனை ஒட்டிய வீட்டைச் சேர்ந்தவர்களின் கைவசமே அது நீண்ட காலமாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அண்ணன் அதைப் பெறுவதற்காக வழக்கு தொடுத்தார். உலகவாதிகளின் வழிமுறைப்படி எதனை அவர்கள் உரிமை எனக் கருதுகிறார்களோ அது அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அப்படிப்பட்ட வழக்குகளில் பொய்யானதும் உண்மையானதுமான சாட்சிகளையெல்லாம் உருவாக்குகின்றனர். அவர்களின் அண்ணனும் அப்படியே செய்தார். பல சாட்சிகளை கொண்டு வந்தார். வீட்டின் எஜமானர்கள், எங்களுக்கு எந்த சான்றும் தேவையில்லை. அவருடைய தம்பியை அழைத்து சாட்சி கேளுங்கள்; அவர் கூறி விட்டால் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றனர். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறினர். அதன்படி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டார்கள். அவர்களிடம், இந்த மக்கள் அந்த வழியாக வருவதையும், செல்வதையும், அமர்வதையும் நீண்ட காலமாக நீங்கள் பார்த்து வருகிறீர்களா எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், ஆம்; நான் பார்த்து வருகிறேன் என்றார்கள். நீதிமன்றம் எதிர்தரப்பினருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அண்ணன், அவர்கள் மீது கடுமையாக கோபம் கொண்டார். அவர்கள், சம்பவம் இதுதான் என்றால் நான் எப்படி மறுப்பேன் எனக் கூறினார்கள்.''

''அவ்வாறே அவர்கள் தபால் துறையை ஏமாற்றியதாக அவர்கள் மீது ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. ஒருவர் ஒரு பார்சலில் ஏதாவது கடிதத்தை வைக்க வேண்டுமென்றால், அவர் தபால் துறையை ஏமாற்றினார்; பைசாவை மிச்சப்படுத்தினார் எனக் கருதப்பட்டது. மேலும் இது ஒரு இராணுவ குற்றமாக இருந்தது. அதற்குரிய தண்டனை சிறைப்பிடித்தல் என்ற வகையிலும் கொடுக்கப்பட முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு பாக்கெட்டில் ஒரு கட்டுரையை வெளியிடுவதற்காக அச்சகத்திற்கு அனுப்பி யிருந்தார்கள். அதில் ஒரு கடிதத்தையும் வைத்து விட்டார்கள். அது அந்த பிரசுரம் அல்லது கட்டுரை தொடர்பான சில வழிகாட்டல்களாகவே இருந்தன. அவர்கள் அதை அதன் பகுதியாகவே கருதினார்கள்; இழப்பை ஏற்படுத்துவது நோக்கமாக இருக்கவில்லை. அச்சகத்தின் எஜமானர் அநேகமாக அவர் கிறித்தவராக இருந்தார். இதை முறையிட்டார்; மேலும் அவர்கள் மீது வழக்கு

தொடுக்கப்பட்டது. வழக்கு தொடுத்தவர்களின் எதிர்ப்பு மிகத் தெளிவானதாக இருக்கிறது; ஆனால் எந்த உண்மையான சாட்சியுமில்லை. எனவே நான் வைக்கவில்லை என நீங்கள் மறுத்து விடுங்கள்; எதுவும் நடக்காது என வழக்கறிஞர் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் அப்படிச் செய்ய மாட்டேன். எந்த செயலை நான் செய்தேனோ அதை நான் எப்படி மறுக்க முடியும்? நீதிமன்றத்தில் ஆஜரானபோது நீங்கள் அந்தக் கட்டுரையை வைத்தீர்களா எனக் கேட்கப்பட்டது. ஆம்; வைத்தேன்; ஆனால் யாரையும் ஏமாற்றுவதற்காக அல்ல; மாறாக, கடிதத்தை கட்டுரையின் பகுதியாகவே கருதினேன் என பதில் கூறினார்கள். இந்த உண்மையினால் நீதிமன்றத்தில் எத்தகைய தாக்கம் ஏற்பட்டதென்றால், ஒரு தவறான இலக்கணத்தின் அடிப்படையில் செய்த குற்றத்திற்காக உண்மையான, நேர்மையான ஒரு மனிதருக்கு தண்டனை வழங்க முடியாது எனக் கூறி நீதிபதி, அவர்களுக்கு தண்டனை வழங்கவில்லை; விடுதலை செய்து விட்டார்.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நபிமார்கள் உலகத்தில் வந்து நேர்மை மற்றும் உண்மையை நிலைநாட்டுகின்றார்கள். அத்தகைய முன்மாதிரியை எடுத்து வைக்கிறார்கள் என்றால் பார்க்கின்றவர் தாக்கத்திற்குள்ளாகாமல் இருக்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் உலகில் வந்து பீரங்கிகளையும், மெஷிக் கன்களையும் கண்டுபிடிக்கவில்லை. வங்கியை நிலைநாட்டவில்லை; அல்லது தொழிற்சாலைக்கான கருவிகளை உருவாக்கவில்லை. பிறகு அவர்கள் உலகிற்குக் கொடுத்தது என்ன? எதைப் பாதுகாப்பது அவர்களை ஏற்றுக்கொள்பவர்களின் பொறுப்பாக இருந்தது? அது உண்மை எனும் ஆன்மாவும், உயர்ந்த நல்லொழுக்கங்களுமாகும். இது முன்னர் இல்லாமற் போய்விட்டது. அவர்கள் அவற்றை, தாம் முதலில் பெற்றார்கள். பிறகு அந்தக் கருவூலத்தை உலகிற்குக் கொடுத்தார்கள். இதனைப் பாதுகாப்பதே சஹாபாக்கள், பிறகு அவர்களின் சந்ததிகள், பிறகு அவர்களின் சந்ததிகளின் பொறுப்பாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மீது முதல் வஹி இறங்கியபோது உலகம் முழுவதற்கும் இறை தூதை எட்ட வையுங்கள் என்ற கட்டளையைக் கேட்டு கொஞ்சம் பதற்றமடைந்தார்கள். இந்த மகத்தான பொறுப்பை எப்படி நிறைவேற்றுவேன் என நினைத்து பதற்றமடைந்தவாறு வீட்டிற்கு வந்தார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் வந்தபோது மிகவும் உணர்ச்சிவசப்பட்டதன் காரணமாக அவர்கள் குளிரை உணர்ந்தார்கள். வீட்டிற்கு வந்து, என்னைப்

போர்த்துங்கள்; என்னைப் போர்த்துங்கள் என்றார்கள். உங்களுக்கு என்ன துன்பம் ஏற்பட்டது என ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு சம்பவத்தையும் சொன்னார்கள். அப்போது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ***கல்லா. வல்லாஹி லாயுக்ஸீகல்லாஹு அபதா*** எனக் கூறினார்கள் அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக அவன் உங்களை ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் உங்களிடம் இன்னின்ன நன்மைகள் இருக்கின்றன. அந்த நன்மைகளில் ஒன்றாக அவர்கள் கூறியது, எந்த நல்லொழுக்கங்கள் உலகிலிருந்து இல்லாமற் போய்விட்டனவோ அவற்றை நீங்கள் மீண்டும் உலகில் நிலைநாட்டுகிறீர்கள். மனித குலம் இழந்து விட்ட அந்தக் கருவூலத்தை மீண்டும் தேடினீர்கள்.பிறகு அல்லாஹ் உங்களைப் போன்றவரை எப்படி வீணக்குவான்? ஆக, இதுதான் நபிமார்களின் தோற்றத்தின் நோக்கமாகும்; இந்த அமானிதம்தான் நம்பிக்கை கொண்டவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அதைப் பாதுகாப்பது அவர்களுடைய கடமையாகும். அன்பின் காரணமாக நபிமார்கள் நம்பிக்கையாளர்களுக்கு சந்தேகமின்றி, மிகவும் அன்பிற்குரியவர்களாக இருக்கின்றனர். ஆனால் நபிமார்களின் மகத்துவத்திற்குக் காரணம் எந்த ஒளியை உலகில் பரப்புவதற்காக இறைவன் அவர்களை நியமிக்கின்றானோ அதுவேயாகும். அவர்கள் கொண்டு வரும் இறைவனின் தூதுதான் அவர்களை பெரியவர்களாக்குகிறது. எனவே நபிமார்களைப் பின்பற்றுபவர்கள் அந்த நபிமார்களுக்காக தமது உயிரை தியாகம் செய்து விடுகிறார்கள் என்றால் அந்தத் தூதைப் பாதுகாப்பதற்காக அவர்கள் எதைத்தான் செய்யாமல் இருப்பார்கள்?''

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களின் தியாகங்கள்

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக சஹாபாக்கள் தியாகங்கள் செய்தனர். அந்த சம்பவங்களைப் படிக்கும்பொது மெய்சிலிர்த்து விடுகிறது. மேலும் அவர்களின் அன்பைப் பார்த்து இன்றும் உள்ளத்தில் அன்பின் அலை உருவாகிறது. உஹது போரில் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒரு சஹாபி மட்டும்தான் இருந்தார்.மேலும் எதிரிகள் தொடர்ந்து அம்புகளையும் கற்களையும்வீசிக்கொண்டிருந்தனர். அந்த சஹாபி தனது கையை

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முகத்திற்கு முன்னால் நீட்டி தடுத்துக் கொண்டிருந்தார். அவருடைய கையின் மீது எந்த அளவுக்கு அம்புகளும் கற்களும் பட்டனவென்றால் அது நிரந்தரமாக செயலிழந்து விட்டது. ஒருவர் அந்தத் தோழரிடம் உங்களுக்கு இது என்ன நேர்ந்தது எனக் கேட்டார். இவ்வளவு அம்புகளும் கற்களும் அதில் விழுந்திருக்கின்றன; அதனால் அது நிரந்தரமாக செயலற்றுப் போய்விட்டது என்றார். அப்போது அவர் உங்கள் வாயிலிருந்து அந்தோ! என்ற சொல் கூட வெளிவரவில்லையா?எனக் கேட்டார். அதற்கு அந்த சஹாபி, அந்தோ! (என்ற வார்த்தை) வெளிவர விரும்பியது; ஆனால் நான் அதை வெளிவரவிடவில்லை . ஏனெனில் அந்தோ! எனக் கூறி இருந்தால் கை அசைந்திருக்கும். ஏதாவது ஓர் அம்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது விழுந்திருக்கும் என்ற சரியான பதிலை கூறினார்.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நீங்கள் இந்த தியாகத்தை கணித்துப் பாருங்கள்! இன்று ஒருவருக்கு விரலில் ஒரு காயம் ஏற்பட்டால் அவர் எவ்வளவு கூச்சலிடுகிறார் என சிந்தித்துப் பாருங்கள். ஆனால் அந்த நபித்தோழர் தன் கையில் எந்த அளவுக்கு அம்புகளை ஏந்திக் கொண்டார் என்றால் அது நிரந்தரமாக செயலிழந்து விட்டது.

பிறகு இன்னொரு சஹாபிக்கான உதாரணத்தைக் கூறுகிறார்கள். இதுவும் உஹது போரில் உள்ள சம்பவமாகும். அந்தப் போரில் நபித்தோழர்கள் பின் வாங்கிச் செல்லும் கட்டாய நிலைக்குள்ளான பிறகு ஒன்று திரண்டனர். அப்போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், யார் யார் ஷஹீதானார்கள்? யார் யார் காயமடைந்துள்ளார்கள் எனப் பாருங்கள் எனக் கூறினார்கள்: அப்போது சில தோழர்கள் ஆய்வு செய்வதற்காக போர்க் களத்திற்கு சென்றனர். ஓர் அன்ஸாரி சஹாபி போர்க் களத்தில் காயமுற்றுக் கிடப்பதை ஒரு சஹாபி கண்டார். அவருடைய அருகில் சென்றபோது அவரது கையும் காலும் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டார். மேலும் அது அவரது வாழ்வின் கடைசி நொடிப்பொழுதாக இருந்தது. அப்போது அந்த சஹாபி அவர் அருகில் சென்று உங்கள் உறவினர்களுக்கு ஏதாவது தூது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்; நான் அவர்களுக்கு எட்ட வைத்து விடுகிறேன் என்றார். அதற்கு காயமுற்றிருந்த அந்த சஹாபி, என்னைக் கடந்து எவராவது சென்றால் நான் தூது சொல்ல வேண்டும் என்பதற்காகவே காத்திருந்தேன். நீங்கள் எனது உறவினர்களுக்கு, வீட்டினருக்கு, மனைவி மக்களுக்கு, முஹம்மதுர் ரஸூலுலாஹ் (ஸல்) அவர்கள் ஒரு விலைமதிப்புள்ள அமானத் (அமானிதம்) ஆவார்கள்.

நாங்கள் உயிருடன் இருந்த காலம் வரை அவர்களை நாங்கள் உயிரைக் கொடுத்து காப்பாற்றினோம். ஆனால் நாங்கள் விடைபெற்றுச் செல்கின்ற இந்த நேரத்தில் எங்கள் உறவினர்கள் எங்களை விட அதிகமாக தியாகங்கள் செய்து இந்த விலைமதிக்கத்தக்க அமானத்தைப் பாதுகாப்பார்கள் என நான் நம்புகிறேன். இந்த செய்தியை நீங்கள் எனது அன்பிற்குரியவர்களிடமும் எனது குடும்பத்தினரிடமும் மனைவி மக்களிடமும் தெரிவித்து விடுங்கள் எனக் கூறினார்.''

**முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''சிந்தித்துப் பாருங்கள். மரணதருவாயாக இருக்கிறது. மனைவி மக்களுக்கு தூதுச் செய்து கூறுவதற்கு இனி அவருக்கு வேறு எந்த நேரமுமில்லை. அந்த நேரத்தில் மனிதனுக்கு தனது சொத்து பற்றிய சிந்தனை வருகிறது; கொடுக்கல் வாங்கல் பற்றிய சிந்தனை வருகிறது. மக்களுக்கு தனக்குப் பின்னால் விட்டுச் செல்லும் சந்ததிகளைப் பற்றிய கவலை ஏற்படுகிறது. அந்த நேரத்திலும் அந்த சஹாபிக்கு, நான் ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாதுகாக்கும் பணியில் உயிர் துறக்கிறேன். நீங்களும் இந்தப் பணியில் ஈடுபடுவீர்கள் என்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிருக்கு முன்னால் உங்கள் உயிரைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்றும் உங்களிடமும் நான் இந்த நம்பிகையையே வைக்கிறேன் என உறவினர்களிடம் கூறச் சொல்கிறார்.

எனவே எவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக இந்த தியாகத்தை செய்தார்களோ அவர்கள் அன்னார் கொண்டு வந்த தூதை எட்ட வைப்பதற்காக என்னென்ன தியாகங்களை எல்லாம் செய்திருப்பார்கள் !!'' **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அதற்குரிய உதாரணமாக ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் மரணத்தின் சம்பவத்தை நான் எடுத்துக் கூறுகிறேன். பாருங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எவ்வளவு நேசம் இருந்தது? ஆனால் அவர்கள் இறந்து விட்டார்கள் எனத் தெரிந்தபோது தன்னையுமறியாமல் அவர்களின் தூய உடலை முத்தமிட்டார்கள். கண்களில் கண்ணீர் மல்கியது. ஆனால் மறு பக்கம் அவர்கள் கொண்டு வந்த அந்த உண்மையின் மீது எவ்வளவு நேசம் இருந்தது! ஹஸ்ரத் உமர் போன்ற வீரம் மிக்க சஹாபி வாளேந்தியவாறு, எவர் முஹம்மது இறந்து விட்டார் என்று சொல்வாரோ அவரை நான் வாளால் வெட்டி விடுவேன் என்று கூறுகிறார்கள். பல சஹாபிகள் அவருடைய கூற்றுக்கு உடன்பட்டு விட்டனர். ஆனால் அப்படி இருந்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அச்சமின்றி, எவர்

முஹம்மது (ஸல்) உயிருடன் இருக்கிறார் எனக் கூறுகிறாரோ அவர் அன்னாரை இறைவன் எனக் கருதுகிறார். அப்படிப்பட்டவருக்கு நான் கூறுகிறேன்: அவர்கள் இறந்து விட்டார்கள். ஆனால் எந்த இறைவனை வணங்க வைப்பதற்காக அவர்கள் வந்தார்களோ அவன் உயிருடன் இருக்கிறான். வாளேந்தியவாறு நின்ற சஹாபிகள் இந்த விஷயத்தைக் கேட்டதுமே தலைசாய்த்தனர். உண்மைதான். அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொண்டனர். இது முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் உள்ளத்தில் உருவாக்கிய உண்மையின் தாக்கமாகும்.''

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இருந்த நிகரற்ற அன்புக்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள்:

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு முன் சிரியாவிலுள்ள சில எதிரிகளிடம் சென்று அவர்களுக்கு அவர்களின் விஷமத்தனத்தின் காரணமாக தண்டனை வழங்குவதற்காக ஒரு படையை ஆயத்தம் செய்து வைத்திருந்தார்கள். இந்தப் படை செல்வதற்குள் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெரும்பாலான சஹாபிகள் ஒன்றுபட்ட கருத்தாக, இப்போதைக்கு இந்தப் படையை அனுப்புவதை ஒத்திப் போடுங்கள். ஏனெனில் அரபு நாட்டில் நாலாப்புறமிருந்தும் கிளர்ச்சி செய்யும் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன. மேலும் மக்கா, மதீனா மற்றும் இன்னொரு கிராமத்தில் (மட்டும்) ஜமாஅத்தாக தொழுகை நடைபெற்று வந்தது. மக்கள் தொழுவதையும் விட்டு விட்டனர். மேலும் நாங்கள் ஸகாத் கொடுக்க மாட்டோம் எனவும் கூறி விட்டனர். நபித்தோழர்கள் அந்த படையை அனுப்ப வேண்டாம் எனக் கூறித் தடுப்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மூலமாக, அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தூது அனுப்பினர். ஏனெனில் மதீனாவில் வயது முதிர்ந்தவர்களும் சிறுவர்களுமே எஞ்சியிருக்கும் நிலையில் நாம் கிளர்ச்சி செய்யும் படையை எப்படி எதிர்த்துப் போரிட முடியும்? அதாவது மற்ற கிளர்ச்சியாளர்களோடு மதினாவின் இந்த வயது முதிர்ந்தவர்கள் எவ்வாறு போரிட முடியும். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனுப்பிய படையைத் தடுக்கும் ஆற்றல் அபூகஹாஃபாவின் மகனுக்கு இருக்கிறதா என்ன? எனக் கேட்டார்கள். இறைவன் மீது ஆணையாக! கிளர்ச்சியாளர்கள் மதீனாவிற்குள் நுழைந்தாலும், நமது பெண்களின் சடலங்களை

நாய்கள் இழுத்துச் சென்றாலும் அந்தப் படை கண்டிப்பாக செல்லும் எனக் கூறினார்கள்.''

இதிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்தது எனத் தெரிகிறது. அவர்கள் சித்தீகிய்யத் என்ற அந்தஸ்தில் இருந்ததனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனைக்கு அதை விட அதிக மகத்துவம் இருக்கிறது என்பதை அறிந்திருந்தார்கள். எனவே அந்த மக்கள் இறைவனால் அனுப்பப்பட்ட போதனையை ஏற்றுக் கொண்டு அதை நிலைநாட்டினர். எந்த அளவுக்கென்றால் அது மாற்றப்படவில்லை என எதிரிகளும் ஒப்புக் கொள்கின்றனர். திருக்குர்ஆனின் ஒரு புள்ளி கூட மாற்றப்படவில்லை என்று கிறித்தவர்கள், இந்துக்கள், யூதர்கள் மற்றும் அனைத்து சமுதாயங்களும் ஒப்புக்கொள்கின்றன.''

**அடுத்து முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காலத்திலும் அப்படிப்பட்ட ஒரு ஜமாஅத் இருந்தது. ஆனால் வருங்கால தலைமுறையிடமும் இந்த உணர்வு இருந்ததா? என்பது கேள்வியாகும். ஒரு நல்ல பொருள் தனக்குக் கிடைத்து, அது தனது சந்ததிக்குக் கிடைக்க வேண்டாம் என எந்த அறிவுள்ளவராவது விரும்புவரா? அவருடைய நிலம், வீடு ஆகிய சொத்துகள் வாரிசுக்குக் கிடைக்க வேண்டும் என விரும்பும் நிலையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின் மதிப்பைப் பற்றி அறிந்த ஒருவர் தனது வாரிசுகள் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என விரும்புவார் என நீங்கள் எப்படி கருதுவீர்கள்?''

**முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அல்லாஹ் மார்க்கத்தை அருள் எனக் கூறியிருக்கிறான். ஆனால் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழக்குவேன் என வாதம் புரியும் ஜமாஅத்தில் தமது சந்ததிகளை முதலில் மார்க்கத்திலிருந்து விலக்கி வைப்பவர்கள் இருக்கின்றனர். பிறகு அவர்கள் விஷமத்தனம் செய்யும்போது அதற்கு உதவி செய்கின்றனர். ஆனால் அவர்கள் செய்யும் சில குற்றங்களைக் கேட்டு நேர்மையும், மனிதத்துவமும் அதிர்ச்சிக் குரல் கொடுக்கின்றது. அஹ்மதிய்யத் மற்றும் ஈமான் என்பது அதற்குப் பிறகுள்ள விஷயமாகும். ஆனால் அப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களின் பெற்றோர்கள் சகோதரர்கள், உறவினர்கள் ஏன் நண்பர்கள் கூட அவர்களுக்கு உதவி செய்கின்றனர். அப்படிச் செய்வதால் ஈமான் எப்படி எஞ்சியிருக்க முடியும் என்பதைப் பற்றி சிந்திப்பதில்லை. அப்படிப்பட்டவரின் மார்க்கம் வானத்தில் பறந்து

சென்று விடுகிறது.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

''ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாருங்கள். ஒருமுறை சில சஹாபிகள் அன்னாரிடம் ஒரு குற்றவாளிக்கு பரிந்துரை செய்தார்கள். அப்போது அவர்கள், இறைவன் மீது ஆணையாக! எனது மகள் ஃபாத்திமா திருடியிருந்தாலும் அவளும் தண்டனையிலிருந்து தப்பித்திருக்க முடியாது எனக் கூறினார்கள். ஆக, இறையச்சம், தூய்மை என்பது எத்தகைய அருட்கொடை என்றால், அதைப் பெறுவதற்காக மனிதன் எந்த தியாகம் செய்வதிலிருந்தும் விலகக் கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த செல்வம் உயர்ந்த நல்லொழுக்கங்களேயாகும். மேலும் நமது சந்ததிகளை அவற்றிற்கு வாரிசாக்குவது நமது கடமையாகும். கவனக்குறைவின் காரணமாக ஏதாவது குறைபாடு ஏற்பட்டு விட்டால், ஒரு நம்பிக்கையாளரின் கடமை என்னவென்றால் குற்றத்திற்கு துணைபோகாமல் குற்றமிழைத்தவரை விட்டு அந்த நேரத்திலேயே விலகி விட வேண்டும். அப்படிச் செய்வது சாத்தியமற்றது என எவராலும் கூற முடியாத அளவுக்கு அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடமிருந்து அதற்குரிய உதாரணத்தை நமக்குக் காட்டியிருக்கிறான்.''

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்களின் உண்மை, நேர்மைக்கான உதாரணங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சஹாபி இருந்தார். அவருடைய உதாரணத்தைக் கூறியவாறு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி)அவர்கள் கூறுகிறார்கள்:**

''சய்யிது ஹாமிது அலி சாஹிப் அவர்கள் மிகவும் தூய மனம் கொண்ட ஒரு சஹாபி ஆவார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரை தமது 12 சஹாபிகளில் ஒருவராகக் குறிப்பிட்டார்கள். எனக்கு (அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு) முன்னாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சஹாபிகளின் பெயரை கணக்கிடும்போது அவருடைய பெயரையும் குறிப்பிட்டார்கள். பிறகு அவருடைய நல்ல முடிவு அவருடைய உயர்ந்த பதவிக்கு முத்திரை பதித்து விட்டது. ஒருமுறை அவருடைய மகனின் கையினால் ஒருவர் கொலையுண்டார். ஆனால் இந்தக் கொலை எப்படிப்பட்ட நிலையில் ஏற்பட்டதென்றால், பொது மக்களின் அநுதாபம் அவருடைய மகனுக்கு சாதகமாக இருந்தது.

சான்றோரான இந்த சாஹாபி ஹாமிது அலி சாஹிபின் மகனால் ஒருவர் கொலையுண்டார். ஆனால் நிலைமை எப்படி இருந்ததென்றால், அந்தக் கொலை நடந்தும் பொதுமக்கள் ஹாமிது அலி சாஹிப் அவர்களின் மகனுக்கே சாதகமாக இருந்தனர்.

ஏனெனில் கொலையுண்டவர் செய்த கொடுமையினால் சண்டை ஏற்பட்டது. அவருடன் சண்டையிட்டதால் அவர் குத்தினார். சண்டையிட்டவர் இறந்து விட்டார். ஆக, இது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் நடந்தது போன்றே நடந்தது. ஆங்கிலேயராக இருந்த சியால்கோட்டின் டிபுடி கமிஷனர் குற்றம் நிரூபணமானாலும், நிரூபணமாகாவிட்டாலும் கண்டிப்பாக தண்டனை கொடுக்க விரும்பும் அதிகாரிகளைச் சேர்ந்தவராக இருந்தார். தன்னைப் பற்றிய திகில் உணர்வு இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்து வந்தார். அவர், மீர் ஹாமிது அலி சாஹிப் எனது அலுவலகத்தின் சூபிரண்டன்டு ஆவார். அவருடைய மகனுக்கு நான் தண்டனை வழங்கினால் எனது நீதி பற்றிய புகழ் பரவி விடும் எனக் கருதினார். எனவே ஹாமிது அலி சாஹிபை அழைத்து, உங்கள் பையன் உண்மையிலேயே கொலை செய்தானா? எனக் கேட்டார். அதற்கு அவர்கள், அப்போது நான் அங்கு இருக்கவில்லை; ஆனால் செய்தான் எனக் கேள்விப்பட்டேன் எனக் கூறினார்கள். அப்போது அவர், பிறகு நாங்கள் யாரையும் பொருட்படுத்துவதில்லை என்பது மக்களுக்குத் தெரியும் பொருட்டு உங்கள் மகனை அழைத்து அதை ஒப்புக்கொள்ள வையுங்கள் என்றார். ஹாமிது அலி சாஹிப் அவர்கள் தமது மகனை அழைத்து நீ அந்த மனிதரைக் கொன்றாயா? எனக் கேட்டார்கள். அவர் ஆம்; நான் கொன்றேன் என்றார். அப்போது உண்மையான விஷயத்தை ஒப்புக்கொள் என்று அவர்கள் கூறினார்கள். நீங்கள் ஏன் உங்கள் இளமைப் பருவத்திலுள்ள உங்கள் மகனுக்கு தூக்குத் தண்டனை வழங்கிக் கொடுக்க விரும்புகிறீர்கள்? என மக்கள் கேட்டனர். ஆனால் அவர்கள், **இந்த உலகத்தின் தண்டனையை விட மறு உலகத்தின் தண்டனை கடுமையானதாகும் என்று கூறினார்கள்.** மேலும் தன் மகனிடம் குற்றத்தை ஒப்புக்கொள் எனக் கூறினார்கள். ஆனால் இறைவனின் வல்லமையைப் பாருங்கள்! அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டார். ஆனால் அந்தப் பையன் கிரிகெட் விளையாட்டு வீரராவார். வழக்கு யாரிடம் சென்றதோ அந்த மாஜிஸ்ட்ரேடும் கிரிகெட் விளையாடுபவராக இருந்தார். அவருக்கு கிரிகெட் கிளப்பில், இந்த விஷயம் பற்றிய உண்மைநிலை தெரிய வந்தது. மாஜிஸ்டிரேட்டுக்கு ஒரு விஷயம் பற்றி உறுதி ஏற்பட்டு விட்டால், குற்றவாளியிடம் எதுவும் விசாரிக்க வேண்டிய தேவையில்லை. எனவே அவர் காவல்துறையின்

சாட்சியத்துடன் அந்த பையன் விடுவிக்கப்படும் அளவுக்கு ஏற்பாடு செய்து விட்டார். எனவே அவர் விசாரிக்கப்படாமலேயே விடுவிக்கப்பட்டார். ஆக, உண்மையின் காரணமாக அவர் தண்டனையிலிருந்தும் தப்பித்து விட்டார்.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இதே மாதிரியான ஒரு வழக்கு சென்ற நாட்களில் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் (இளைய) சகோதரர் மீது தொடுக்கப்பட்டது. சவுத்ரி சாஹிப் அப்போது இலண்டனில் இருந்தார்கள். அவர்கள் தமது சகோதரருக்கு, இது ஈமானின் சோதனைக்கான நேரமாகும்; உங்களிடமிருந்து குற்றம் ஏற்பட்டது என்றால் உங்களின் அண்ணன் என்ற முறையில் நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன்: இவ்வுலக தண்டனையை விட மறுமையின் தண்டனை அதிக கடுமையானது. எனவே இதனை தாங்கிக் கொள்ளுங்கள். உண்மையான விஷயத்தைக் கூறுங்கள் என எழுதினார்கள்.

பிறகு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''சியால்கோட்டில் வாழும் நமது ஒரு நண்பர் இருக்கிறார். அவர் இன்றும் உயிருடன் இருக்கிறார். **அஹ்மதியான பிறகு, இலஞ்சம் வாங்குவது இஸ்லாமிய போதனைக்கு எதிரானது என அவருக்கு தெரிய வந்தபோது, அவர் யாரிடமிருந்தெல்லாம் இலஞ்சம் வாங்கினாரோ அவர்களின் வீடுகளுக்குச் சென்று திருப்பிக் கொடுத்தார்.** அதனால் அவர் கடன் சுமைக்கும் உட்பட்டார். ஆனால் அவர் அதை ஒன்றும் பொருட்படுத்தவில்லை.

ஆக, **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நமது ஜமாஅத்தில் அப்படிப்பட்ட எல்லா வகையான செயல்களுக்கான முன்மாதிரிகளும் கிடைக்கின்றன. அவற்றைப் பற்றி அவை சஹாபாக்களின் முன்மாதிரிகள் எனக் கூறப்பட முடியும். ஆனால் **நாம் அதில் மகிழ்ச்சியடைந்து விடக் கூடாது. மாறாக, முழு ஜமாஅத்தும் அப்படி ஆக வேண்டும் என முயற்சி செய்ய வேண்டும்.''**

எனவே கவனமூட்டும்போது அதை கவனமாகக் கேட்க வேண்டும். பிறகு அதை செயல் அளவிலான வாழ்க்கையின் பகுதியாக மாற்ற வேண்டும். மேலும் இதுவே ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் இரகசியமாகும். மேலும் இதுதான் மனிதனை சரியான அப்து (இறையடியார்) ஆக மாற்றுகிறது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி அல்லாஹ் தங்கள் மீது மிகப் பெரிய பொறுப்பை சுமத்தியுள்ளான் என்பதை ஜமாஅத் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. மனிதனிடம் பலவீனங்கள் மலையளவுக்கு இருந்தாலும் அவற்றை விட்டு விடுவதற்கு அவர் எண்ணம் கொண்டால் எந்தக் கஷ்டமும் இல்லை.''

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் கூற விரும்புவது என்னவென்றால், நண்பர்கள் தத்தமது சந்ததிகளை, ஜமாஅத்தின் மற்ற இளைஞர்களை சீர்திருத்துங்கள். உங்களை சீர்திருத்துங்கள். பொய், திருட்டு, ஏமாற்று, வஞ்சனை, தீயதாக நடந்து கொள்ளுதல், புறம்பேசுதல் ஆகிய தீய பழக்கங்களை விட்டு விடுங்கள். எதுவரை என்றால் அவருடன் பழகுகின்றவர்கள் இவர்கள் மிக நல்லவர்கள் என உணர வேண்டும். மேலும் இந்த அருட்கொடைகள் திரும்பக் கிடைப்பதற்கு 1300 ஆண்டுகள் ஆயின. அவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நமக்குக் கிடைத்துள்ளன என்பதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். நாம் இதற்கு மதிப்பளிக்கவில்லை என்றால், 1300 ஆண்டுகளுக்குப் பின்னால் நாம் சென்று விட்டோம் என்றால், அதுவரை வருகின்ற எல்லா தலைமுறைகளின் சாபங்கள் நம் மீது விழுந்து கொண்டே இருக்கும். எனவே உங்கள் எல்லா நன்மைகளையும் உங்கள் சந்ததிகளுக்கு கொடுக்க முயற்சி செய்யுங்கள்; அவர்கள் அதை அடுத்து கொடுக்க வேண்டும்; பிறகு அவர்கள் அடுத்து அதை தமது சந்ததிகளுக்குக் கொடுக்க வேண்டும். இந்த அமானத் ஒரு நீண்ட காலத்திற்கு பாதுகாப்பாக இருக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதற்கான நற்கூலி நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். ஏனெனில் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நன்மை ஒருவர் மூலமாக நிலை பெறுகிறதோ அது உலகில் நிலை பெறுகிறதென்றால்,எத்தனை மக்கள் அதை மேற்கொண்டு செல்கின்றனரோ அவர்களுக்கான நற்கூலி அவருடைய பெயரில் எழுதப்படுகிறது. எனவே என்ன நற்கூலி கிடைக்கிறதோ அதுவும் பெரியது; அமானத்தும் மிகப் பெரியதாகும். இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

***(அல் ஃபஸ்ல் 26, ஆகஸ்டு 1936 குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் ; 547 559)***

## (2)

## குத்பா சுருக்கம் 6 டிசம்பர் 2013

### செயல் அளவிலான நிலைமைகளை சீர்திருத்துவதன் அவசியம்:

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் என்ன செயல் அளவிலான மாற்றத்தை உருவாக்க விரும்பினார்களோ அதன் நிலை என்ன என்ற கோணத்தில் நாம் பார்க்கும்போது, கவலை ஏற்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் சமூகத்தின் ஒவ்வொரு தீமையையும் எதிர்த்து நின்று அதை தோல்வியுறச் செய்கிறாரா? நம்மில் ஒவ்வொருவருடைய செயலையும் பார்த்து அவருடன் தொடர்புடையவர்கள் அவருடைய அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அதனால் தாக்கத்திற்குள்ளாகின்றாரா? அல்லது நாமே சுற்றுப்புறத்தின் தாக்கத்திற்குள்ளாகி நமது போதனைகளை, நமது மரபுகளை மறந்து கொண்டு செல்கிறோமா? அல்லது நம்மில் ஒவ்வொருவரும் முழுமையாக முயற்சி செய்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு போதனை வழங்கியபடி செயல் அளவிலான சீர்திருத்தம் செய்கிறாரா? பொய்யும் ஏமாற்றமும் நமக்கு அருகில் கூட வராத அளவுக்கு நாம் உண்மையின் அந்தத் தகுதியை நிலைநாட்டி விட்டோமா? நாம் நமது உலக விவகாரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் மறுமையின் மீதும் பார்வை வைத்துள்ளோமா? நாம் உண்மையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாக இருக்கின்றோமா? நாம் ஒவ்வொரு தீமையிலிருந்தும், தீயவற்றிலிருந்தும் எச்சரிக்கையாக இருந்து, தப்பித்துக் கொள்ள முயற்சி செய்பவர்களாக இருக்கின்றோமா?

நாம் பிறருடைய உரிமையைப் பறிப்பதிலிருந்து விலகி இருக்கின்றோமா? மேலும் தகாத அதிகாரத்திலிருந்து தப்பிப்பவர்களாக இருக்கின்றோமா? நாம் ஐவேளை தொழுகைகளை தொடர்ந்து தொழுபவர்களாக இருக்கின்றோமா? நாம் எப்பொழுதும் துஆ செய்பவர்களாக இருக்கின்றோமா? இறைவனை பணிவுடன் நினைவுகூரக் கூடியவர்களாக இருக்கிறோமா? நம் மீது தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தீய நண்பரை, தோழரை விட்டு விடுபவர்களாக இருக்கின்றோமா? நாம் நமது பெற்றோருக்கு தொண்டு

செய்பவர்களாகவும் அவர்களுக்கு கண்ணியமளிப்பவர்களாகவும், நன்மையான செயல்களில் அவர்களின் பேச்சுக்கு கட்டுப்படக் கூடியவர்களாக இருக்கின்றோமா? நாம் நமது மனைவி மற்றும் அவர்களின் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்களாக இருக்கின்றோமா? நாம் நமது அண்டை அயலாரை சின்னச் சின்ன நன்மைகளிலிருந்து விலக்கி வைக்கவில்லையே? நாம் நம் மீது அநீதியிழைத்தவர்களின் பாவத்தை மன்னிக்கக் கூடியவர்களாக இருக்கின்றோமா? நமது உள்ளம் மற்றவர்களுக்காக எல்லா விதமான பொறாமை, வெறுப்பிலிருந்து தூயதாக இருக்கின்றதா? நாம் பைஅத் உடன்படிக்கையை முன்னிறுத்தியவாறு நமது நிலைமைகளைப் பார்ப்பவர்களாக இருக்கின்றோமா? நமது பெரும்பாலான கூட்டங்கள் அல்லாஹ் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூரக்கூடியவையாக இருக்கின்றனவா?

இவற்றிற்கான பதில் எதிர்மறையாக இருக்குமென்றால் (அதாவது இல்லை என இருக்குமென்றால்) நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளிலிருந்து விலகி இருக்கின்றோம். மேலும் நாம் நமது செயல் அளவிலான நிலைமைகள் பற்றிக் கவலைப்பட வேண்டும். இதற்கான பதில் ‘ஆம்’ என்றிருக்குமென்றால் நம்மில் அத்தகையவர் நற்பேறு பெற்றவராவார். நாம் நமது செயல் அளவிலான நிலைமைகளின் பக்கம் கவனம் செலுத்தி பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றுபவர்கள் ஆவோம்.

ஆனால் உண்மையின் கண் கொண்டு நாம் பார்த்தால், நமக்கு கிடைக்கும் பதில் என்னவெனில், சில நேரங்களில் சமூகத்தின் தாக்கத்திற்குள்ளாகி நாம் இந்த விஷயங்களை அல்லது இவற்றில் பல விஷயங்களை கவனத்தில் கொள்வதில்லை; மேலும் சமூகத்தின் தவறுகள் மீண்டும் மீண்டும் நமக்குள் நுழைவதற்கு முயற்சி செய்கின்றன. மேலும் நமக்கு பெரும்பாலான நேரங்களில் ஆற்றல் இல்லாமல் போய்விடுகிறது. நாங்கள் கொள்கையளவில் உறுதியானவர்கள்; எவரும் எங்களை இந்தக் கொள்கையிலிருந்து வீழ்ச்சியடையச் செய்ய முடியாது; விலக்கி விட முடியாது என நம்மில் 99.99 சதவீத மக்கள் வாதிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் செயல் அளவிலான பலவீனங்கள் சமூகத்தின் வலுவான தாக்குதல்களில் இழுத்துச் செல்லும்போது கொள்கையின் வேர்களையும் அசைக்க ஆரம்பித்து விடுகின்றன. ஷய்த்தான் படிப்படியாக தாக்குகின்றான். ஜமாஅத்தின் அமைப்பிலிருந்து தூர விலகுவது ஆரம்பமாகி விடுகிறது. பிறகு ஓர் அடி எடுத்து

வைக்கும்போது அடுத்து கிலாஃபத்தை விட்டும் தூர விலக ஆரம்பித்து விடுகிறார்.

எனவே ஒரு பலவீனம் இன்னொரு பலவீனத்தை உருவாக்குகிறது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். பிறகு கடைசியில் எல்லாம் நாசமாகி விடுகிறது. **அஹ்மதிய்யத்தின் அழகு என்பது ஜமாஅத்தின் அமைப்பு மற்றும் கிலாஃபத்தின் அமைப்பு என்ற சரடில் கோர்ப்பதாகும் என்பதை நாம் அறிவோம்.** மேலும் இதுவே நமது கொள்கை அளவிலான ஆற்றலாகும்; செயல் அளவிலான ஆற்றலுமாகும். எனவே எப்பொழுதும் காலத்தின் கலீஃபாக்களின் சார்பாக பலவீனங்கள் சுட்டிக்காட்டப்பட்டு ஜமாஅத்திற்கு கவனமூட்டப் பட்டுக் கொண்டிருக்கிறது. திரும்பி வரும் வழி கிடைப்பது கடினமாகி விடும் அளவுக்கு ஓர் அஹ்மதி தூர விலகி விடக் கூடாது என்பதற்காகவும், அவர் இஸ்திக்ஃபார் செய்தவாறு, தமது செயல் அளவிலான பலவீனங்களை கவனத்தில் கொண்டு அவற்றை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் அவர் மீது செய்த அருள்களை நினைவு கூர வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு கவனமூட்டப்படுகிறது.

கிழக்கத்திய நாடுகளில் எனது சமீபத்திய சுற்றுப் பயணத்திற்கிடையில் இந்தோனேஷியாவின் அஹ்மதியல்லாத சில கல்வியறிவு படைத்தவர்கள் மற்றும் அறிஞர்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. சிங்கப்பூரில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் அவர்கள் வந்திருந்தனர். அவர்களில் பலர், அவர்களின் ஆலிம்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய விஷயங்களைக் கேட்க வேண்டும் என்ற விஷயத்தை வெளிப்படுத்தினர். ஆக, எப்படி இருந்தபோதிலும் நான் அவர்களிடம் கூறியதெல்லாம், இன்று பூமியில் நாடு தழுவிய அளவில் மட்டுமல்லாமல், முழு உலகிலும் ஒரு ஜமாஅத் என்ற பெயரால் அறியப்படும் ஒரே ஜமாஅத் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தான் என்று கூறினேன். அதில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அதில் ஓர் அமைப்பு இருக்கிறது. ஓர் இமாமுடம் இணைந்திருக்கின்றது. உலகின் ஒவ்வொரு சமுதாயத்தின் சந்ததிகளின் நபர்கள் இதில் இணைந்துள்ளனர். எனவே இது, முஸ்லிம் உம்மத்தில் ஒரு ஜமாஅத் அப்படி இருக்கும்; ஒரு ஜமாஅத் சரியான வழியில் செல்லக் கூடியதாக இருக்கும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கும் முன்னறிவிப்பிற்கும் ஒரு மிகப் பெரிய சான்றாகும். ***(சுனன் திர்மிதி கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண்:2641)***

ஆக, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான தொண்டரின் உண்மைக்கான சான்றாகும்.

அறிவுள்ளவர்களும் நல்ல இயல்புள்ள எதிரிகளும் இதைக் கேட்டு மவுனமாகி விடுகின்றனர்; மேலும் சிந்திக்கின்றனர். ஆனால் இந்த சான்றை எப்போதும் நிலைநாட்டுவதற்காக நாம் நமது ஒவ்வொரு செயல் அளவிலான நிலைமையின் பக்கம் எல்லா நேரமும் கவனம் வைக்க வேண்டும். ஏனெனில் இந்தக் காலத்தில் ஷைத்தான் முன்னரை விட அதிகமாக வாயைத் திறந்துள்ளான்.

இன்று இருக்கின்ற செயல் அளவிலான அபாயம் என்பது சமூகத்தின் தீமைகள் எனும் கடிவாளமற்ற நிலையும், பரவுவதுமாகும். அதில் கூடுதல் என்னவென்றால் கருத்து சுதந்திரம், சொற்பொழிவு சுதந்திரம் என்ற பெயரில் சில தீமைகளுக்கு சட்டப்பூர்வமாக பாதுகாப்பு வழங்கப்படுவதாகும். இந்தக் காலத்திற்கு முன்னர் தீமைகள் எல்லைக்குட்பட்டவையாக இருந்தன. அதாவது சுற்றுவட்டாரத்திலுள்ள தீமை சுற்றுவட்டாரத்திலும், நகரத்திலுள்ள தீமை நகரத்திலும், நாட்டின் தீமை நாட்டிலுமேயே இருந்தன. அல்லது அதிகப்படியாக அண்டை அயலார் அதனால் பாதிப்புக்குள்ளானார்கள். ஆனால் இன்று பயணங்களின் வசதிகள் தொலைக்காட்சி, இணையதளம் மற்றும் பல்வேறுபட்ட தொலைத் தொடர்புகள் ஒவ்வொரு தனி நபரின் உள்ளூரின் தீமையை அனைத்து நாடுகளின் தீமையாக ஆக்கி விட்டன. இணையதளம் மூலமாக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுடன் தொடர்புகொண்டு வெட்கங்கெட்ட விஷயங்கள், தீமைகள் பரப்பப்படுகின்றன. இள வயது பெண்களை ஏமாற்றி அவர்களின் செயல் அளவிலான பலவீனங்கள் ஒருபுறமிருக்கட்டும்; மார்க்கத்தை விட்டும் அவர்கள் அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

சென்ற நாட்களில் எனக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. பாகிஸ்தானில் மற்ற நாடுகளிலும் வந்த செய்தி என்னவெனில், இள வயது பெண்களை திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றி அவர்களை பிறகு முற்றிலும் விலைமாதர்களாக ஆக்கி விடுகின்றனர். தற்காலிகமாக திருமணம் செய்யப்படுகிறது. பிறகு விலைமாதர்களாக ஆகிவிடுகின்றனர். இந்த வேலையைச் செய்பவர்கள் உலக அளவில் இருக்கின்றனர். நிச்சயமாக இந்த அச்சத்திற்குரிய நிலைமை மெய்சிலிர்க்க வைக்கிறது. அவ்வாறே வாலிபர்களை பலவழிமுறைகளில் செயல் அளவில் மட்டுமல்லாமல் கொள்கை அளவிலும் முற்றிலும் செயலிழந்தவர்களாக்கப்படுகிறது.

எனவே அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் இந்த அசுத்தங்களிலிருந்து காப்பாற்றுவானாக என்று துஆ செய்கின்ற அதே நேரத்தில், ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்விடம் உதவி

வேண்டியவாறு இந்த அசுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்கு கடும் முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. காலத்தின் கண்டுபிடிப்புகள், வசதிகள் ஆகியவற்றிலிருந்து பயன்பெறுவது தவறில்லை; ஆனால் ஓர் அஹ்மதி காலத்தின் வசதிகளிலிருந்து பயன்பெற்றவாறு நேர்வழியைப் பரப்புவதை முழுமைப்படுத்துவதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவியாளராக மாற வேண்டும்; அவ்வாறல்லாமல் வெட்கங்கெட்ட நிலை, மார்க்கத்திற்கு புறம்பான நிலை, நம்பிக்கைக்குப் புறம்பான நிலை ஆகியவற்றின் தாக்கத்திற்குள்ளாகி தன்னைத்தானே எதிரிகளிடம் ஒப்படைப்பதல்ல என்பதை ஓர் அஹ்மதி எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்

எனவே இது ஒவ்வோர் அஹ்மதிக்கும் சிந்திக்கக் கூடிய, கவனிக்கக்கூடிய இடமாகும். வரக் கூடிய தலைமுறைகள் இந்தக் குழப்பம் மற்றும் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக பெரியவர்களும் தமது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டியது வரும். இளைஞர்களும் முழுமையான முயற்சியுடன் அல்லாஹ்விடம் உதவி வேண்டியவாறு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தம்மைத்தாமே காத்துக் கொள்ள வேண்டியது வரும். அந்த எதிரி (நாம்) உணராத வகையில் நம் மீது தாக்குதல் செய்கின்றான்; கேளிக்கை, நேரத்தை கழித்தல் என்ற சாக்கில் நமது வீடுகளுக்குள் நுழைந்து நமது ஜமாஅத்தின் இளைஞர்களிடம், பலவீனமான இயல்பு கொண்டவர்களிடம் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டும், அவர்களிடம் குறைபாடுகளை உருவாக்க முயற்சி செய்து கொண்டும் இருக்கின்றான்.

நான் கூறியது போன்று, அஹ்மதிய்யத்தின் முந்தைய கலீஃபாக்கள் செயல் அளவிலான சீர்திருத்தத்தின் பக்கம் உங்களுக்கு கவனமூட்டிக் கொண்டிருந்தார்கள். நானும் குத்பாக்கள் மூலமாக இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு கவனமூட்டிக் கொண்டு இருக்கிறேன். மேலும் அந்த வழிகாட்டல்களின்படி எல்லா வகையானவர்களையும் எல்லா வயதுள்ளவர்களையும் இந்தத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்வதற்காக கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றனர். ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் செயல்களை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்தாதவரை, மார்க்கத்தின் எதிரிகளின் தாக்குதல்களை தோல்வியுறச் செய்வதற்காக எழுந்து நிற்காதவரை தற்காப்பு மட்டும் செய்யக் கூடாது; மாறாக, தாக்குதல் செய்து அவற்றை சீர்திருத்தமும் செய்ய வேண்டும். மேலும் இந்த

நோக்கத்தைப் பெறுவதற்காக இறைவனிடம் நாம் ஒரு குறிப்பிட்ட தொடர்பையும் உருவாக்கினால் நாம் மார்க்கத்தின் எதிரிகளுடைய தாக்குதல்களை தோல்வியுறச் செய்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல் அவர்களை சீர்திருத்தி அவர்களின் உலகையும் மறுமையையும் சீரமைப்பவர்களாவோம். இன்னும் கூறுவதென்றால், நமது புதிய தலைமுறைகளை தமது தீய தாக்கங்களின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும் அந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வருபவர்களாவோம். இவ்வாறு நாம் நமது புதிய தலைமுறையை காப்பாற்றுபவர்களாவோம். நாம் நம்மில் பலவீனமானவர்களாக இருப்பவர்களின் ஈமானையும் பாதுகாப்பவர்களாவோம். பிறகு செயல் சீர்திருத்தத்தின் இந்த விழிப்புணர்வு ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு சென்று கொண்டேயிருக்கும். மேலும் இது மறுமை வரை தொடரும். நமது செயல் அளவிலான சீர்திருத்தத்தினால் தப்லீகிற்கான வழிகள் மேலும் அதிகமாக திறந்து கொண்டே செல்லும். புதிய கண்டுபிடிப்புகள் தீமைகளைப் பரபுவதற்கு பதிலாக ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வோர் ஊரிலும் இறைவனுடைய பெயரைப் பரப்புவதற்குக் காரணமாக அமைந்து விடும்.

உண்மையை விட்டும் நாம் ஒருபோதும் பார்வைகளைத் திருப்ப முடியாது என்பதை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். ஏனெனில் முன்னேற்றம் அடையும் சமுதாயங்கள், உலகில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய சமுதாயங்கள், உலகில் புரட்சியைக் கொண்டு வரக் கூடிய சமுதாயங்கள் தமது பலவீனங்களை கவனத்திற் கொள்கின்றன. 50% சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டது அல்லது இவ்வளவு சதவீதம் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டது என்பதில் நாம் மகிழ்ச்சி கொண்டு விட முடியாது. மாறாக, நாம் உலகில் புரட்சியைக் கொண்டு வர வேண்டுமென்றால் நூறு சதவீதம் இலக்கு வைக்க வேண்டியது வரும்.

நான் இன்னொன்றையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். செயல் அளவிலான சீர்திருத்தத்தில் நாம் நூறு சதவீதம் வெற்றியடைந்து விட்டால் நமது சண்டை, சச்சரவுகள், வழக்குகள், ஒருவர் மற்றவருக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படுத்த முயற்சிகள் செய்வது,செல்வம் பற்றிய பேராசை, தொலைக்காட்சி மற்றும் பிற சாதனங்கள் மூலமாக வெட்கங்கெட்டவற்றைப் பார்ப்பது, ஒருவர் மற்றவருக்கு மதிப்பளிப்பதில் குறைவு காட்டுவது, ஒருவர் மற்றவரை குறைத்துக் காட்ட முயற்சி செய்வது ஆகிய இந்த எல்லா தீமைகளும் முடிவுக்கு வந்து விடும். இந்த உலகிலும் சுவர்க்கத்தைக் காட்டக் கூடிய அன்பு, நேசம், சகோதரத்துவம் எனும் சூழ்நிலை உருவாகி விடும். இவை செயல் அளவில் முன்னால் வந்து கொண்டிருக்கின்ற தீமைகள் ஆகும்.

ஜமாஅத்திற்குள்ளும் அப்படிப்பட்ட விவகாரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவேதான் நான் அதை எடுத்துக் கூறியிருக்கிறேன். **நமது பொறுப்புகளைப் பற்றிய உணர்வு நமக்கு ஏற்பட்டு விட்டால், மார்க்கத் தொண்டை நாம் இறையருளாகக் கருதி செய்பவர்களாகி விடுவோம்.** நாங்கள் மார்க்கத் தொண்டை இறையருள் எனக் கருதித்தானே செய்கிறோம் என எனது இந்த விஷயத்தைக் கேட்டு விட்டு எவராவது கேட்கலாம். ஆனால் நூற்றுக்கு நூறு சதவீத பொறுப்பாளர்கள் அதற்கு முழுமையாகப் பொருந்துவதில்லை. என்னிடத்தில் சில விவகாரங்கள் வருகின்றன. அவற்றிலிருந்து **பொறுப்பாளர்களிடம் தைரிய மனப்பான்மை, சகிக்கும் தன்மை இல்லை எனத் தெரிய வருகிறது. எவராவது உரத்த குரலில் எதையாவது கூறி விட்டால் (பொறுப்பாளருக்கு) 'தான்' என்ற அகந்தை தடையாக வந்து நிற்கின்றது. சில நேரத்தில் பொய்யான தன்மானம் என்ற ஆடையை அணிந்திருக்கின்றனர்.** எனவே ஒரு வேலையை இறையருளாகக் கருதி செய்பவர் இறைவனுக்காக எல்லா விஷயங்களையும் சகித்துக் கொள்கிறார். தனது கண்ணியத்திற்கு பதிலாக ***அல் இஸ்ஸத்து லில்லாஹ்*** (உண்மையான கண்ணியம் அல்லாஹ்விற்கே உரியது) என்ற சொற்கள் பணிவையும் தன்னடக்கத்தையும் மேற்கொள்ள அவரைக் கட்டாயப்படுத்துகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறியது, நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை புத்துயிர் அளிப்பதற்காக வந்துள்ளேன் என்பதாகும். ***(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 490 ரப்வா வெளியீடு 2013)***

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையும் நமக்கு முன்னால் இந்த முன்மாதிரியை எடுத்து வைக்கிறது: அதாவது, அவர்கள் என்னிடம் ஒருபோதும் கடினமான சொல்லைக் கூறியதில்லை; ஒருபோதும் கடினமாகப் பேசியதில்லை என அவர்களின் அடிமையும் கூறுகிறார். பிறகு அன்னாரின் மீது கொண்ட திகில் உணர்வினால் ஒருவருக்கு நடுக்கம் ஏற்பட்டபோது, அச்சப்படாதீர்; நான் கொடுங்கோல் மன்னன் அல்லன்; நான் காய்ந்த இறைச்சியை சாப்பிட்டு வந்த ஒரு பெண்ணின் மகனாவேன் எனக் கூறினார்கள். ***(சுனன் இப்னி மாஜா ஹதீஸ் எண்: 3312)***

ஆக, இது எத்தகைய செயல் என்றால், ஒவ்வொரு பொறுப்பாளரும் செயல் அளவிலான தனது வாழ்க்கையில், செயல் அளவில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஜமாஅத்தின் ஒவ்வொரு பணியாளரும் தனது செயல் அளவிலான வாழ்வில் செய்து காட்ட வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் தனது செயல் அளவிலான

வாழ்வில் செய்து காட்ட வேண்டும். எனவே ஏதாவது பொறுப்பு கிடைக்கிறதென்றால், ஏதாவது தொண்டு கிடைக்கிறதென்றால் 'நான் ஏழையாகவும், சக்தியற்றவனாகவும், பெயர் அறியப்படாதவனாகவும், திறமையற்றவனாகவும் இருந்தேன்' என்ற முஹம்மதிய்ய மஸீஹின் கூற்றை கண்முன் நிறுத்த வேண்டும்.'' ***(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 20)***

எனவே நாம் நமது செயல்களில் ஏழ்மை, திறமையின்மை, சக்தியின்மை ஆகிய தன்னடக்க பண்புகளை வெளிப்படுத்தினால்தான் இந்தத் தொண்டுகளை நிறைவேற்ற முடியும். இதனால் ஒருவேளை இறைசந்திப்பு என்ற சுவர்க்கத்தில் நுழைய முடியும் என்ற வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையில் குறிப்பிட்ட நிலைக்குரியவர்களாகும் நம்பிக்கையை வைக்க முடியும். ***(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 18)***

இது இல்லை என்றால் நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டோம் என்பது வாதத்தின் எல்லைக்குட்பட்ட வகையில் சந்தேகமின்றி சரிதான். ஆனால் உண்மையில், நிலைமை என்ற நாவினால் அந்த வாதத்தை நாம் ஏளனம் செய்பவர்களாக இருப்போம். எதிரியின் எதிர்ப்பு நமக்கு நஷ்டத்தை தராது; மாறாக, நமது நஃப்ஸின் ஏமாற்றுதலும், இரட்டை வேடமும் நம்மை அவமதித்துக் கொண்டிருக்கும். அதிகப்படியாக அதில் அல்லாஹ்வின் கோபமும் இருக்கும்.

எனவே குறிப்பாக ஜமாஅத்தின் தொண்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் தன்னைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. மேலும் பொதுவாக ஒவ்வோர் அஹ்மதியும் தன்னைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. ஏனெனில் பைஅத்தின் உரிமை என்பது நாவின் வாதங்களினால், ஒப்புக்கொள்வதால் மட்டும் நிறைவேறி விடாது. மாறாக, செயலின் ஆற்றல் ஒளிமிக்கதாக இல்லையென்றால் எந்தப் பயனுமில்லை. ✸

(**3**)

## குத்பா சுருக்கம் 13 டிசம்பர் 2013

### செயல்களின் சீர்திருத்தத்தில் தடைகளுக்கான காரணிகள்:

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஒரு செயலின் குறைபாட்டின் காரணங்கள் தெரியும்போதுதான், அதன் காரணிகள் தெரியும்போதுதான் அதன் சீர்திருத்தம் ஏற்பட முடியும். அந்தக் காரணங்களை அறிந்து அவற்றை நீக்க வேண்டும். காரணி நிலைத்திருந்தால் தற்காலிகமான சீர்திருத்தத்திற்குப் பிறகு தீமை மீண்டும் திரும்பி வந்து விடும். இது தொடர்பாக நான் சிந்தித்தபோது அதிகமாகப் படித்தபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஓர் ஆய்வு எனக்குக் கிடைத்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்பொழிவுகள், எழுத்துக்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால் அவர்கள் சாத்தியமான கேள்விகளையும் கேட்டு அதற்கான தீர்வையும் உதாரணங்கள் மூலமாக எடுத்துக் கூறுகிறார்கள். திருக்குர் ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் ஆகியவற்றின் ஒளியில் எவ்வாறு அவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கூறியிருக்கிறார்களோ அவ்வாறு வேறு எங்கும் நமக்குப் பார்க்க முடிவதில்லை. இந்த காரணத்தினால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குத்பாக்களிலிருந்தே பயன்பெற்றவாறு அதன் ஒளியில் அவற்றிக்கான காரணங்களையும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''செயல்களை சீர்திருத்துவதில் மக்களுக்குத் தடையாக இருப்பதில் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதில் முதலாவது விஷயம், சில பாவங்கள் பெரியவை; சில பாவங்கள் சிறியவை என்ற மக்களின் உணர்வாகும். அதாவது மக்கள் தாமாகவே அல்லது சில ஆலிம்களின் விஷயங்களைக் கேட்டு அவர்களின் தாக்கத்தினால், சில பாவங்கள் சிறியவை; சில பாவங்கள் பெரியவை என்று தீர்மானித்து விட்டனர். இதுதான் செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தடையாக இருக்கின்றன. இதனால் மனிதனிடம் பாவம் செய்யும் தைரியம் உருவாகி விடுகிறது; துணிச்சல் உருவாகி விடுகிறது. தீமைகள் மற்றும் பாவங்கள் பற்றி பொருட்படுத்துவதில்லை. மேலும் சிறிய பாவங்களை செய்வதில் எந்தக் குற்றமுமில்லை; அதற்கு அவ்வளவு பெரிய தண்டனையும் இருப்பதில்லை என்று கருதிக் கொள்கின்றனர்.''

***(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 339 குத்பா 29.5.1936)***

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘ஒருவர் நோயுற்றால் அந்த நோய் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் அதற்கு மருந்து எடுக்கா விட்டால், மருத்துவத்திற்காக துக்கத்தை மேற்கொள்ளா விட்டால், நோயாளி நலமடைய முடியாது. முகத்தில் ஒரு சின்ன கரும் புள்ளி தோன்றி, இது பெரிதாகி முழு முகத்தையும் கருப்பாக்கி விடக் கூடாதே என்ற கவலையை உருவாக்கி விடுகிறது. அவ்வாறே பாவத்திற்கும் ஒரு கரும் புள்ளி உள்ளத்தில் உருவாகிறது. சிறிய பாவங்கள் பெரியதாகி பெரிய பாவங்களாக மாறுகின்றன. சிறிய பாவம் என்பது முகத்தைக் கரியாக்கத் தோன்றும் அந்த சிறிய புள்ளிதான்.’’ ***(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 7 ரப்வா 2013 வெளியீடு)***

எனவே எந்த ஒரு பாவத்தையும் மனிதன் சிறியதாக கருதக்கூடாது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது சாதாரண பாவம் என்ற சிந்தனை உருவாகிவிட்டால் பின்னர் நோயினுடைய விதை வீணாகி விடுவதில்லை. மேலும் நிலைமைகளுக்கேற்ப இந்த சின்ன பாவமும் பெரிய பாவங்களாக மாறிவிடுகின்றன. எனவே அல்லாஹ் ஒவ்வொரு சிறிய பாவத்தையும் பெரிய பாவத்தையும் கணக்கெடுப்பான்; அதற்கு தண்டனை வழங்குவான் என்பதை நாம் அனைவரும் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

பாருங்கள். தவறான வேலைகளினால் பணத்தை கொள்ளையடிப்பது ஒரு தீமையாகும். அது தடுக்கப்பட்டிருக்கின்றது. இன்றைய காலத்தில் சூதாட்டத்திற்கான மிஷின்களும் இருக்கின்றன. பல்வேறு விதமான சூதாட்டங்களும் இருக்கின்றன. பலர் லாட்டரிகளிலும் வீழ்ந்து கிடக்கின்றனர். சூதாட்ட மிஷின்களின் பக்கம் செல்கின்றனர். அப்படியே சூதாட்டத்திலும் ஈடுபடுகின்றனர். ஆனால் அவர்கள் பொது வாழ்க்கையில் பொய் கூறுவதில்லை. பொது மக்களிடம் அநீதி இழைப்பதில்லை. கொலை செய்வதில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட மக்கள் அந்தப் பாவங்களை பெரிய பாவங்கள் எனக் கருதுகின்றனர். ஆனால் சூதாட்டத்தையும் தவறான வேலைகளில் பணத்தை கொள்ளை அடிப்பதையும் வீணாக்குவதையும் இவர்கள் தீயதாகக் கருதுவதில்லை. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு தவறான வழியில் பணத்தைக் கொள்ளையடிப்பது பெரும் பாவம் ஆகும். ஏனெனில் மற்ற பாவங்களை ஏற்கனவே அவர்கள் பாவமாகத்தான் கருதுகிறார்கள்.

பிறகு நாம் பார்க்கிறோம். ஒரு பெண் தனது ஆடையை வெட்கத்திற்குட்பட்டதாகக் கருதுவதில்லை. வெளியே செல்லும்போது பர்தாவை கவனத்தில் கொள்வதில்லை. அஹ்மதி முஸ்லிம்களாக இருந்தும் அல்லது அழைக்கப்பட்டும் தலையில் ஆடையின்றி, பர்தா இல்லாமல், ஸ்கார்ஃப் இல்லாமல் அல்லது

போர்த்தும் துணியின்றி திரிந்து கொண்டிருக்கின்றனர். ஆடையும், உடலையும் அது வெளியே காட்டக்கூடியதாக இருக்கிறது. ஆனால் பொருள் தியாகத்தைப் பற்றி (அந்தப் பெண்ணிடம்) எடுத்துக் கூறினால் திறந்த மனதுடன் எடுத்து வைக்கிறார். அல்லது பொய்யை அதிகமாக வெறுக்கிறார். எவராவது அவருக்கு முன்னால் பொய் கூறுவதை அவரால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. எனவே அப்படிப்பட்டவருக்கு பெரும் நன்மை என்பது சந்தாக்களில் முன்னேறுவதோ அல்லது பொய்யை வெறுப்பதோ அல்ல. மாறாக பெரும் நன்மை என்பது, தனது ஆடையை வெட்கத்திற்குட்பட்டதாகவும் பர்தாவை கவனத்தில் வைப்பதும் ஆகும். அதனை அவர் சிறிய நன்மை எனக் கருதி கவனம் செலுத்தாமல் இருக்கிறார். அதுவே ஒரு நேரத்தில் அவரை பெரும் தீமையின் பக்கம் இழுத்துச் சென்றுவிடும். **சுருக்கமாக, ஒவ்வொரு நன்மை தீமையின் அளவுகோல் ஒவ்வொருவருடைய நிலைமையைப் பொருத்தது ஆகும்.** பல்வேறு நிலைமைகளில் பல்வேறு மக்களின் செயல், நன்மை தீமை என்பதற்கான இலக்கணத்தை மாற்றி அமைக்கிறது.

**எனவே இந்தத் தீமை பெரியது; இந்தத் தீமை சிறியது. அவ்வாறே இந்த நன்மை பெரியது; இந்த நன்மை சிறியது என்ற எண்ணம் இருக்கும் வரை மனிதன் தீமைகளிலிருந்தும் தப்பிக்க முடியது; நன்மைகளை செய்யும் நல்வாய்ப்பும் கிடைக்க முடியாது.** எந்த தீமைகளை விடுவது மனிதனுக்கு முடியாதிருக்கிறதோ மனிதனுடைய பழக்கத்தில் நுழைந்துவிட்டதோ அவையே பெரும் தீமையாகும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் எதனை செய்வது மனிதனுக்கு கடினமாக இருக்கிறதோ அதுவே பெரும் நன்மை ஆகும். அதாவது பல தீமைகள் ஒருவருக்கு பெரியவையாக இருக்கின்றன. மற்றவருக்கு சிறியவையாக இருக்கின்றன. அவ்வாறே பல நன்மைகள் ஒருவருக்கு பெரியவையாக இருக்கின்றன. மற்றவருக்கு சிறியவையாக இருக்கின்றன.

**முதல் காரணம்:**

எனவே நாம் நமது செயலளவிலான சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றால் முதலில் இந்த சிந்தனையை உள்ளத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். உதாரணமாக, விபச்சாரம் ஒரு பெரிய பாவம் ஆகும். கொலை ஒரு பெரிய பாவம் ஆகும். திருட்டு ஒரு பெரிய பாவம் ஆகும். புறம் பேசுதல் ஒரு பெரும் பாவம் ஆகும். இவை தவிர எத்தனை பாவங்கள் இருக்கின்றனவோ அவை சிறிய பாவங்கள் ஆகும். எனவே இந்த சிந்தனையை உள்ளத்திலிருந்து நீக்கிவிடுவது அவசியம் ஆகும். அவ்வாறே நோன்பு பெரிய நன்மையாகும்; ஸக்காத்து பெரிய நன்மை ஆகும்; ஹஜ் பெரிய நன்மையாகும். இதை தவிர எத்தனை நன்மைகள்

இருக்கின்றனவோ அவை சிறிய நன்மைகளாகும் என்ற சிந்தனையையும் உள்ளத்திலிருந்து நீக்கி விட வேண்டியது வரும். பொதுவான முஸ்லிம்களிடம் இவ்வாறு கற்பனை காணப்படுகிறது. இந்த சிந்தனையை உள்ளத்திலிருந்து நீக்கவில்லை என்றால் நம்முடைய செயலளவிலான பங்கு பலவீனமாக இருக்கும். திருக்குர்ஆனின் 700 கட்டளைகளின்படி செயல்படாதவர் ஈடேற்றத்தின் வாசலை தன் கைகளாலேயே தன் மீது அடைத்துக் கொள்கிறார் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விஷயத்தை முன்னிறுத்த வேண்டியது வரும். அப்போதுதான் செயலளவிலான உறுதி ஏற்படும். எனவே நாம் மற்றவர்களைப் போன்று சில நன்மைகள் பெரியவை; சில நன்மைகள் சிறியவை எனக் கருதக்கூடாது. இந்த விஷயங்களில் மற்ற முஸ்லிம்கள் அளவு கடந்து சென்றுவிட்டனர். எதுவரை என்றால் நோன்பை அவர்கள் எல்லாவற்றையும் விட மிகப் பெரும் நன்மையாகக் கருதுகின்றனர். ஆனால் ஜமாஅத்தாகத் தொழுவதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. அதே நேரத்தில் நோன்பு மிக அவசியமானது; எனவே அதனை அதிகமாக பேணுகின்றனர். எவருக்கு ஸக்காத் கடமையோ அவர் ஸக்காத் தொகையை மிச்சப்படுத்துவதற்கு முயற்சி செய்வார். ஆனால் நோன்பு கண்டிப்பாக வைப்பார். ஏனெனில் நோன்பு வைக்காவிட்டால் அவருடைய பார்வையில் அது பெரும் குற்றமாகும்.

எனவே நாம் நம்மை சீர்திருத்த வேண்டும் என்றால், ஒவ்வொரு நன்மையை மேற்கொள்ளவும் ஒவ்வொரு தீமையிலிருந்து தப்பிக்கவும் முயற்சி செய்ய வேண்டும் என்பதை எப்போதும் நாம் முன்னிறுத்த வேண்டும்.

## இரண்டாவது காரணம்:

பிறகு செயல்களின் சீர்திருத்தத்திற்கு தடையாக இருப்பதன் இரண்டாவது காரணம், சுற்றுப்புறச் சூழ்நிலையாகும் அல்லது பிறரைப் பார்த்து செய்யும் தன்மையும் ஆகும். அல்லாஹ் மனிதனுடைய இயல்பில் பிறரைப் பார்த்து செய்யும் தன்மையை வைத்துள்ளான். அது குழந்தைப் பருவத்திலிருந்தே வெளிப்படுகிறது. ஏனெனில் அது இயல்பிலேயே இருக்கிறது. எனவே குழந்தையின் இயல்பிலும் இந்தப் பண்பு காணப்படுகிறது. இந்தப் பண்பு நிச்சயமாக நமது பயனுக்காக இருக்கிறது. ஆனால் அதனை தவறாக பயன்படுத்துவது மனிதனை நாசமாக்கிவிடுகிறது அல்லது நாசத்தின் பக்கம் கொண்டு செல்கிறது. மனிதன் பெற்றோரிடமிருந்து மொழியை கற்றுக் கொள்கிறான் அல்லது மற்ற வேலைகளை கற்றுக் கொள்கிறான். நல்ல விஷயங்களை கற்றுக் கொள்கிறான். மேலும் நல்ல விஷயங்களை கற்று குழந்தை உயர்ந்த

நல்லொழுக்கம் கொண்டதாக மாறுகிறது. இது பிறரைப் பார்த்து செய்யும் தன்மை மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையின் தாக்கமே ஆகும்.

தாய் தந்தையர் நல்லவர்கள் என்றால் தொழுகையாளிகள் என்றால், திருக்குர்ஆன் ஓதுபவர்களாக இருக்கிறார்கள் என்றால், ஒருவருக்கொருவர் அன்புடனும் நேசத்துடனும் இருக்கிறார்கள் என்றால், பொய்யை வெறுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்றால் குழந்தைகளும் அவர்களின் தாக்கத்திற்குட்பட்டு அந்த நன்மைகளை மேற்கொள்பவர்களாக இருப்பார்கள். ஆனால் பொய், சண்டை சச்சரவு, வீட்டில் ஒருவர் மற்றவரை ஏளனம் செய்யும் விஷயங்கள், ஜமாஅத்தின் கண்ணியத்தை பொருட்படுத்தாதிருப்பது ஆகிய இந்த விதமான தீமைகளை குழந்தை பார்க்கும்போது பிறரை பார்த்து செய்யும் தன்மை அல்லது சுற்றுப்புறச் சூழ்நிலையின் தாக்கத்தின் காரணமாக அதுவும் இதே தீமைகளைக் கற்றுக் கொள்கிறது. வெளியே செல்லும்போதும் சுற்றுப்புறச் சூழ்நிலையில், நண்பர்களுக்கு மத்தியில் அவன் எதை பார்க்கின்றானோ அதை கற்றுக் கொள்ள முயற்சி செய்கிறான். எனவே நான் மீண்டும் மீண்டும் பெற்றோர்களுக்கு கவனமூட்டுவது என்னவென்றால், உங்களுடைய குழந்தைகளின் வெளிப்புறத்திலுள்ள சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளுங்கள். வீட்டிலும் குழந்தைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அல்லது இணையதளம் ஆகியவற்றை பயன்படுத்தும்போது அவர்களை கண்காணியுங்கள்.

பிறகு இன்னொன்றும் கவனிக்கத் தக்கதாகும் அதாவது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கான வயது ஆரம்ப கால குழந்தைப் பருவத்திலிருந்தே துவங்குகிறது. இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். குழந்தை பெரியவன் ஆனதும், பிறகு தர்பிய்யத் ஆரம்பமாகும் என்ற சிந்தனை வர வேண்டாம். **நான் கூறியது போன்று, மூன்று வயது நான்கு வயதும் தர்பிய்யத்திற்கான வயதே ஆகும்.** குழந்தை வீட்டில் தாய் தந்தையிடமிருந்து, பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொள்கின்றது. அது அவர்களைப் பார்த்து அதன்படி செயல்படுகிறது. **குழந்தை சிறியவன்தானே! அவனுக்கு என்ன தெரியப் போகிறது என்ற சிந்தனை ஒரு போதும் வரக் கூடாது. அவனுக்கு எல்லா விஷயங்களும் தெரிகிறது.** பெற்றோரின் ஒவ்வொரு செயலையும் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்; அது அவனையும் அறியாமல் அவனுடைய மூளையில் பதிந்து கொண்டிருக்கிறது. ஒரு நேரம் வரும் போது பிறகு அவன் அதை வெளிப்படுத்தத் துவங்கி விடுகிறான். சிறுமிகள் தாய்மார்களை பின்பற்றியவாறு தமது விளையாட்டுகளிலும் தங்களுடைய தாய்மார்களைப் போன்ற ஆடையை அணிய முயற்சி செய்கின்றனர். அவர்களைப் பார்த்து கற்றுக் கொள்கின்றனர்.

சிறுவர்கள் தன் தந்தையரைப் பார்த்துக் கற்றுக் கொள்கின்றனர். தாய் தந்தையர்களிடம் என்ன நன்மைகள், தீமைகள் இருக்கின்றனவோ அவற்றை பார்த்து கற்றுக் கொள்வர்.

உதாரணமாக, அவர்கள் பெரியவர்களாக ஆகும்போது இவை தீமைகளாகும்; இவை நன்மைகளாகும் என அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படும். உதாரணமாக, பொய் கூறுவது தீமையாகும்; வாக்குறுதியை நிறைவேற்றுவது நன்மையாகும் எனக் கற்றுக் கொடுக்கப்படும். ஆனால் தனது தாய் தந்தையரின் உண்மையின் உயர்ந்த தகுதியை பார்க்காத ஒரு குழந்தை, தாய் தந்தையர் வீட்டிலுள்ள பெரியவருடன் செய்த உடன்படிக்கையை சில நேரத்தில் நிறைவேற்றுவதை காணாத போது, போதனையை பொருத்த வரையில் பொய் பேசுவது தீமை என்பதையும், வாக்குறுதியை நிறைவேற்றுவது நன்மை என்பதையும் சந்தேகமின்றி புரிந்து கொள்வர். ஆனால் செயலளவில் அவர்கள் அவ்வாறு பார்க்க மாட்டார்கள். ஏனெனில் தமது வீட்டில் அதற்கு எதிரான செயலை அவர்கள் காண்கின்றனர்.

குழந்தைகளின் பழக்கங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே உறுதியாகி விடுகின்றன. எனவே பெரியவர்களான பிறகு மற்றவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தாய் தொழுகையில் சோம்பேறியாக இருக்கிறார் என்றும், தந்தை அவரிடம் தொழுதாயா? எனக் கேட்கும் போது இன்னும் தொழவில்லை; தொழுது விடுவேன் என தாய் கூறும்போது இது ஒரு நல்ல பதில் அல்லவா என பையன் கருதுவான். மேலும் என்னிடமும் எவராவது தொழுது விட்டாயா? எனக் கேட்டால் இன்னும் தொழவில்லை; தொழுதுவிடுவேன் என்ற இதே பதிலை நானும் கூறிவிடுவேன். அல்லது நான் மறந்துவிட்டேன் என்ற தாயின் பதிலை அவன் கேட்கிறான் அல்லது தொழுதுவிட்டேன் என்ற பதிலை கேட்கிறான். ஆக, பையன் நாள் முழுவதும் தாயுடன் இருக்கிறான். தாய் தொழவில்லை என்பது அவனுக்கு தெரியும். இவ்வாறு அவனுக்கு அந்த பதில் மூளையில் பதிந்துவிடுகிறது.

அவ்வாறே தந்தையின் தவறான விஷயங்கள் பையனின் மூளையில் பதிந்து விடுகின்றன. தாய் தந்தை என்ன தவறான பதிலைக் கூறினாலும் பையனுடைய மூளையில் அது பதியத் தொடங்கி விடுகிறது. தாயும் தந்தையும் குழந்தையின் தர்பிய்யத்தைப் பொருத்தவரை, தவறான தர்பிய்யத் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அல்லது தவறான செயல்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அவனை தவறான வழியில் கொண்டு செல்கின்றனர். மேலும் தனது செயலினால் அவனுக்குத் தவறான போதனையைக் கொடுத்து கொண்டிருக்கின்றனர். பையன் பின்னர் பெரியவன் ஆன பிறகு அதையே செய்கின்றான். செயலளவில் இதே

பதிலை தருகிறான்.

அவ்வாறே அண்டை அயலார், தாய் தந்தையருடைய நண்பர்கள் ஆகியோரின் தவறான செயல்களும் குழந்தைகள் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே உங்கள் தலைமுறைக்கு உங்கள் குழந்தைகளுக்கு உண்மையான செயல் அளவிலான சீர்திருத்தத்தை செய்ய வேண்டும். அப்போதுதான் இனி வரும் காலத்தில் செயலளவிலான சீர்திருத்தத்தின் தகுதி உயரும். அதற்கு தாய் தந்தையர் தமது நிலைமைகளின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டியது வரும். மேலும் செயல் அளவில் நல்லவர்களாக இருக்கும் நண்பர்களை உருவாக்க வேண்டியது வரும். ✸

## (4)

## குத்பா சுருக்கம் 20 டிசம்பர் 2013

**மூன்றாவது காரணம்:**

செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தடையாக இருப்பதற்கான மூன்றாவது காரணம் அவசரமான அல்லது அண்மையில் உள்ள விவகாரங்களை கவனத்தில் கொள்வதாகும். கொள்கையளவிலான விவகாரங்கள் வெகு தொலைவிலுள்ள விவகாரங்களாகும். அந்த விவகாரங்கள் பின்னுள்ள வாழ்வுடன் தொடர்புடையவையாகும். நான் கூறியது போன்று செயல் அளவிலான நிலைமைகளின் விவகாரங்கள் உடனே செய்ய வேண்டிய வகையைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. சில நேரத்தில் இதற்கு கொள்கைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை என மனிதன் வெளிப்படையில் நினைக்கிறான். நான் ஏதாவதொரு தவறான வேலையை செய்தால் அதனால் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீதுள்ள கொள்கை பாதிப்புக்குள்ளாகாது. உதாரணமாக, பொற்கொல்லார் நான் தங்கத்தில் கலப்படம் செய்து விட்டால் அதனால் எனது ஓரிறை கொள்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை; ஆனால் எனது வருவாய் அதிகமாகி விடும்; சீக்கிரம் அல்லது அதிகமாக செல்வந்தனாகி விடுவேன் எனக் கருதுகிறார்.

**நான்காவது காரணம்:**

செயல் அளவிலான பலவீனத்திற்கு நான்காவது காரணம், செயலுக்கான தொடர்பு பழக்கத்தின் அடிப்படையில் இருக்கிறது. மேலும் பழக்கத்தின் காரணமாக பலவீனங்கள் உருவாகின்றன. குறிப்பாக மார்க்கத்துடன் ஆட்சி இல்லாத நேரத்தில் அப்படி நடக்கின்றன. அதாவது, ஆட்சியின் சட்டங்களின் காரணமாக சில செயல் அளவிலான சீர்திருத்தங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இஸ்லாத்தில் எந்த விஷயங்கள் ஒழுக்க சீர்கேடுகள் எனக் கூறப்படுகின்றனவோ எவற்றை சீர்செய்வதன் பக்கம் கவனமூட்டுகிறதோ அவற்றில் (ஒன்று) நீதி ஆகும். துரதிஷ்டவசமாக இது இல்லாமற்போனதன் காரணமாக, இரண்டு செயல்கள் காரணமாக இஸ்லாமிய ஆட்சியாக இருந்தும் இஸ்லாமிய நாடுகளிலும் செயல் அளவிலான நிலை கவலைக்குரியாத இருக்கிறது. மேலும் சீர்திருத்தம் செய்ய வேண்டிய சில விஷயங்களை இஸ்லாம் அல்லாத நாடுகள் தீய செயல்களாக அல்லது ஒழுக்க சீர்கேடுகளாகக் கருதுவதில்லை. எனவே (முஸ்லிம் நாடுகளிலும்) சில விஷயங்களில் செயல்

அளவிலான சீர்திருத்தம் ஏற்பட முடிவதில்லை.

எனவே செயல் அளவிலான சீர்திருத்தத்தில் அரசாங்கத்தின் பங்கும் இருக்கிறது. எங்கு செயல் அளவிலான சீர்திருத்தம் என்பதற்கு மார்க்கத்திலும் அரசாங்கத்திலும் ஒரே இலக்கணம் இருக்குமோ அங்கு (தீய) பழக்கங்களை சட்டங்களின் காரணமாக முடிவுக்குக் கொண்டு வரலாம். ஆனால் எங்கு செயல் அளவிலான சீர்திருத்தத்தில் அரசாங்கத்தின் சட்டம் உதவியாக இல்லையோ அங்கு பழக்கங்களை மாற்ற முடியாது. மேலும் செயல் அளவிலான பலவீனங்கள் சமூகத்திற்கு புற்று நோயாகி விடுகின்றது. உதாரணமாக, சுதந்திரம் என்ற பெயரில் முன்னேற்றமடைந்த நாடுகளில் நாம் பல செயல் அளவிலான பலவீனங்களை உலகில் எல்லாம் பார்க்கிறோம். மேலும் தற்போது எலக்ட்ரானிக் மீடியாக்கள் மூலமாக செயல் அளவிலான பலவீனங்கள் உலகில் எல்லா இடங்களிலும் பரப்பப்படுகின்றன. அப்படிப்பட்ட சுற்றுப்புறச் சூழ்நிலையில் இருப்பவர்கள், சுற்றுப்புறச் சூழ்நிலையில் பங்கு பெறுவதன் காரணமாக நிரந்தரமாக அவற்றைப் பார்த்து பழக்கத்தின் அடிப்படையில் சில பலவீனங்களை மேற்கொண்டு விட்டனர். உணர்வில்லாத நிலையிலும், எண்ணம் கொள்ளாத நிலையிலும் இளைஞர்களிடமும், இளம் பெண்களிடமும் அவை இடம்பிடித்துக் கொண்டிருக்கின்றன. பழக்கம் உறுதியாவி விட்டால் பிறகு அதை விடுவது கடினமாகி விடுகிறது.

உதாரணமாக,போதை இருக்கிறது. அதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டால் பிறகு அதை விடுவது கடினமாகும். ஒருவர் முக்கடவுட் கொள்கையை விட்டு விட்டு ஓரிறை கொள்கையை ஏற்றுக் கொள்ளும் தியாகத்தை செய்து விடும்போது அடுத்த நாளில் அவருக்கு ஓரிறைவனைப் பற்றிய சிந்தனைக்குப் பதில் முக்கடவுள் சிந்தனை ஒருபோதும் வர முடியாது. ஆனால் போதையை பயன்படுத்துபவருக்கு போதை கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை கண்டிப்பாகத் தோன்றும். வாழ்நாள் முழுவதுமான ஒரு கொள்கையை ஒருவரால் விட்டு விட முடியும். ஆனால் சில மாதங்கள் அல்லது சில ஆண்டுகளுக்கான பழக்கமாகிய போதையில் கொஞ்சம் குறைவு ஏற்பட்டு விட்டாலும் அது அவரை நிம்மதியிழக்கச் செய்து விடுகிறது. புகைப்பிடிப்பவர்களும் அப்படித்தான். அவர்கள் தம் குடும்பங்களை விட்டு விட்டு, தமது சகோதரர்களை விட்டு விட்டு தமது தாய் தந்தையரை விட்டு விட்டு, தமது மனைவி மக்களை விட்டு விட்டு ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். அவர்கள் இந்த வகையில் தியாகம் செய்து அஹ்மதியாகியுள்ளனர். **ஆனால் புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டு விடுமாறு கூறுங்கள். அப்போது அவர்கள் நூறு சாக்குப்**

**போக்குகளைத் தேடுவர்.** சிகரெட்டை விட்டு விடுவதனால் சிலருக்கு வயிறு பெரிதாகி விடுகிறது. சிலருக்கு மது அருந்தாததனால் தூக்கம் வருவதில்லை. சிலருக்கு அவர்களின் சிந்தனைகளில் சிந்திக்கின்ற, புரிகின்ற திறமைகள் முடிந்துவிடுகிறது. அதற்காக அவர்கள் பிறகு நிம்மதியிழந்து விடுகின்றனர். அவ்வாறே இது அஹ்மதிய்யத்தில் இணைபவர்களுக்கு மட்டுமன்று; அனைவருக்கும் ஆகும். சின்ன பழக்கத்தை விட்டு விட முடிவதில்லை.

**ஐந்தாவது காரணம்:**

செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தடையாக இருப்பதற்கு ஐந்தாவது காரணம், மனைவி மக்களுமாவர். இவர்கள் செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தடையாக இருக்கின்றனர். ***(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 375 குத்பா 12.6.1936)***

சில நேரங்களில் மனைவி மக்களின் துன்பங்கள் மனிதனை செயல் அளவில் சோதனைக்குள்ளாக்கி விடுகின்றன. உதாரணமாக, எவருடைய செல்வத்தையும் அபகரிக்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் போதனையாகும். இப்போது ஒருவர் இன்னொருவரிடம் ஏதாவது தொகையை அமானிதமாக வைத்திருக்கிறார்; ஆனால் அதற்கு எந்த சாட்சியும் இல்லை; எந்த சான்றும் இல்லை. எவரிடம் அமானிதம் வைக்கப்பட்டுள்ளதோ அவருடைய நிய்யத்தில் சில நேரத்தில் தனது மனைவி மக்களின் தேவைகளின் காரணமாக குறைபாடு ஏற்பட்டு விடுகிறது; நிய்யத் தீயதாகி விடுகிறது. எனது மனைவி என்னிடம் கொஞ்சம் பணம் கேட்டார். அப்போது என்னிடம் பணம் இருக்கவில்லை. நான் அவளுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. அல்லது எனது பிள்ளைகள் என்னிடம் இந்த நேரத்தில் பணம் கேட்டனர். நான் அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை. இப்போது நல்ல சந்தர்ப்பமாகும். இந்தத் தொகையை நான் எடுத்து எனது மனைவி மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியும் என்றோ அல்லது குழந்தைகளின் நோயின் காரணமாக சிகிச்சைக்காக பணத்திற்கான தேவை இருக்கிறது. ஆனால் பணம் இல்லை. இந்த அமானிதத்திலிருந்து பயன்பெற்றவாறு இந்த தொகையிலிருந்து எடுத்து அதற்கான சிகிச்சைக்காக செலவு செய்து கொள்கிறேன். பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமா கொடுக்க வேண்டாமா என்பதைப் பற்றி பின்னர் பார்த்துக் கொள்வோம் என்றோ அல்லது மனைவி மக்களின் வேறு ஏதாவது நோக்கத்திற்காக மனிதன் மற்றவரின் பணத்தை கொள்ளையடித்து விடுகிறான்.

பிறகு பணம் விஷயம் மட்டுமல்ல; இந்த உதாரணங்கள் மட்டுமல்ல. சுதந்திரமான, முன்னேற்றத்தை விரும்பக்கூடிய

சமூகத்தில் சில பெற்றோர்கள் குறிப்பாகவும், பொதுவாகவும் இந்த விஷயத்தைக் கூறுகின்றனர். ஆனால் சில ஏழை நாடுகளிலும் இந்த விஷயங்கள் வெளிவருகின்றன. அதாவது **அதிக செல்லம் கொடுப்பதன் காரணமாக குழந்தைகளுக்கு இஸ்லாமிய போதனைகளைக் கடைபிடிக்க வைக்க முயற்சி செய்யப்படுவதில்லை.** நான் கூறுகின்ற இந்த விஷயத்தை வருத்தத்துடன் கூறுகின்றேன். இது நமது அஹ்மதி சமூகத்திலும் காணப்படுகிறது. அவ்வப்போது தென்படுகிறது. ஒருவர் இன்னொருவரின் அமானிதத்தை விழுங்கி விட்டார். இன்னொருவர் மற்றவருக்கு ஏதாவதொரு வகையில் பொருளாதார நஷ்டமிழைத்து விட்டார். ஒருவர் அநாதையின் செல்வத்தை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு முழுமையாக நிறைவேற்றவில்லை. கஸாவிடம் அப்படிப்பட்ட சில விவகாரங்கள் வருகின்றன. அல்லது முறையீடு வருகிறது. அதாவது, செல்வச் செழிப்புள்ள நாட்டிலுள்ள ஒருவர் தனது மகளை பாகிஸ்தானில் திருமணம் செய்து கொடுக்கின்றார். **முதல் நாளிலேயே மருமகனிடம் அவர், நான் என் மகளை மிகவும் செல்லமாக வளர்த்திருக்கிறேன். அவளுக்கு எல்லா விதமான சுதந்திரமும் உண்டு. அவள் மீது எந்த கட்டுப்பாடும் விதிக்கக் கூடாதுஎனக் கூறுகிறார்.** மகளின் மூளை தந்தையின் கற்பனைக்கேற்ப உயர்ந்த அரியணையை எட்டியிருக்கிறது. பிறகு அவள் தன் கணவனை அறவே மதிப்பதில்லை. ஆனால் மனைவி கணவனின் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும்; தனது வீட்டின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது இஸ்லாமிய போதனையாகும்; அது அவளுடைய கடமைகளில் அடங்கும். சில நேரத்தில் ஆண்கள் பாகிஸ்தானிலிருந்து பெண்ணை திருமணம் செய்து இங்கு (இங்கிலாந்திற்கு) அழைத்து வருகிறார்கள். மாப்பிள்ளையின் பெற்றோர் பெண்ணை அநீதி எனும் ஆட்டுக் கல்லில் அரைத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள், பெண் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். இவ்வாறு பிள்ளைகளின் மீதுள்ள செல்லம் பெற்றோர்களின் செயல் நிலைமைகளை மோசமாக்கிக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் வீடுகளையும் நாசமாக்கிக் கொண்டிருக்கிறது.

**ஆறாவது காரணம்:**

செயல் அளவிலான சீர்திருத்தத்தில் ஆறாவது தடை என்னவென்றால், மனிதன் தனது எதிர் காலத்தைப் பற்றி கண்காணித்து வருவதில்லை. அதாவது செயலை எல்லா நேரமும் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் செயல் அளவிலான சீர்திருத்தம் ஏற்பட முடியும். ***(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 380***

*ஜுமுஆ குத்பா 12.6.1936)*

ஒவ்வொரு வேலையை செய்யும்போதும், இதன் விளைவு நல்லதா இல்லையா? இந்த வேலையை செய்வதற்கான அனுமதி எனக்கு இருக்கிறதா இல்லையா? திருக்குர்ஆனின் 700 கட்டளைகளின்படி செயல்பட வேண்டும் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக் கிணங்க நான் செயல்படுகிறேனா இல்லையா? அதிலிருந்து நான் விலகிச் சென்று விட வில்லையே என சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது.

உதாரணமாக நேர்மையுடன் செயல்பட வேண்டும் என்பது ஒரு முக்கியமான கட்டளையாகும். ஒரு கடைக்காரருக்கும் இந்தக் கட்டளை இருக்கிறது. ஒரு கூலித் தொழிலாளிக்கும் இந்தக் கட்டளை இருக்கிறது. நேர்மையாளராக மாறுங்கள் என்பது ஒவ்வொருவருக்கும் தத்தமது வட்டத்தில் இந்தக் கட்டளை இருக்கிறது.ஒரு கடைக்காரருக்கு முன்னால் நேர்மையுடன் செயல்படுங்கள் என்ற கட்டளை பலமுறை வருகிறது. ஓர் அப்பாவி வருகிறார். அவர் அவருக்கு தரம் குறைந்த பொருளைக் கொடுக்கின்றார்; அல்லது அதிகமான விலையை வாங்கிக் கொள்கிறார். அல்லது நியமிக்கப்பட்ட விலையில் தரம் குறைந்த பொருளைக் கொடுக்கிறார். **ஓர் அஹ்மதியின் கடை நல்ல தரம் கொண்டதாக இருக்க வேண்டும்.** அவர் நிறுத்துக் கொடுப்பது நன்றாக இருக்க வேண்டும்.ஏதாவது ஒரு பொருளில் குறைபாடு இருக்குமென்றால் வாங்குபவருக்கு அது பற்றிக் கூற வேண்டும். **இலாபம் பொருத்தமானதாகவும், குறைவானதாகவும் இருக்க வேண்டும்.** இதனால் இன்ஷா அல்லாஹ் வியாபாரத்தில் பரக்கத் அதிகமாகிறது; குறைவதில்லை.

**ஏழாவது காரணம்:**

செயல்களின் சீர்திருத்தத்தில் தடையாக இருப்பதற்கான ஏழாவது காரணம், மனிதனுடைய தொடர்புகள், நடைமுறைகள் சூழ்ந்து கொள்கின்றன. மேலும் அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் குறைந்து விடுகிறது. ***(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 383*** ***ஜுமுஆ குத்பா 12.6.1936)***

சில நேரங்களில் பேராசை, நண்பர்களின் உறவுகள், உறவினர்களின் தொடர்புகள், சண்டை, வெறுப்பு, பகைமை ஆகியவை செயல்களின் நல்ல பகுதியை வெளிவர விடுவதில்லை. நேர்மையை நான் உதாரணமாகக் கூறியிருந்தேன்; திரும்பக் கூறுகிறேன். இறைவன் நேர்மைக்கான கட்டளை இட்டிருக்கிறான் என்ற கோணத்தில் மனிதன் பார்ப்பதில்லை. மாறாக குறிப்பிட்ட அந்த சந்தர்ப்பங்களில் நேர்மையினால் தன் நண்பர்களின் மீது அல்லது

எதிரிகளின் மீது என்ன விளைவு ஏற்படப் போகிறது எனப் பார்க்கிறான். அவ்வாறே அவர் உண்மை பேசுவதை, இறைவன் அதற்கான கட்டளை இட்டிருக்கிறான் என்ற கோணத்தில் பார்ப்பதில்லை; மாறாக, அந்த உண்மையைக் கூறுவதனால் தனக்கு அல்லது தனது நண்பர்களுக்கு அல்லது நெருங்கியவர்களுக்கு நஷ்டம் ஏதும் ஏற்படவில்லையே என்ற கோணத்தில் பார்க்கிறார். இவர் இந்த நேரத்தில் எனக்கு நஷ்டமிழைத்தார் என்பதற்காக ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எதிராக சாட்சி கூறி விடுகிறான். எனவே நானும் பழிவாங்குவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவருக்கு எதிராக சாட்சி கூறி விடவேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கிறார். ஆக, அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் எனும் இடம் வெற்றிடமாக இருப்பதன் காரணத்தினால் செயல்களில் பலவீனம் வந்து விடுகிறது.

**எட்டாவது காரணம்:**

செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தடையாக இருக்கும் எட்டாவது காரணம், குடும்பங்கள் சீர்திருந்தாதவரை செயல்கள் சீர்திருந்துவது கடினமாகும். ***(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 384 ஜும்முஆ குத்பா 12.6.1936)***

உதாரணமாக, மனைவி மக்களும் முழுமையான முறையில் ஒத்துழைப்பு தராதவரை நேர்மை முழுமை பெற முடியாது அல்லது நேர்மையின் தரம் நிலைபெற முடியாது.குடும்பத் தலைவர் எவ்வளவுதான் ஆகுமான வழியில் சம்பாதிப்பவரக இருந்தாலும் அவருடைய மனைவி எந்த வகையிலாவது தனது அண்டை வீட்டினரிடம் கொள்ளையடிக்கிறார் என்றால், அல்லது வேறு ஏதாவது வகையில் நஷ்டமிழைக்கிறார் என்றால், பணத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார் என்றால், அல்லது அவளுடைய மகன் இலஞ்சமாக ஈட்டிய பணத்தை வீட்டிற்குக் கொண்டு வருகிறான் என்றால் அந்த வீட்டின் உணவு ஆகுமானதாக இருக்க முடியாது. குறிப்பாக எங்கு எல்லா வீட்டிலுள்ளவர்களும் ஒட்டு மொத்தமாக ஜாயின்டு ஃபேமிலியாக இருக்கிறார்களோ அவர்களின் வீடு ஒட்டு மொத்தமாக நடக்கிறது. அப்போது அவ்வாறு சம்பாதித்தது ஆகுமானதாக இருக்க முடியாது. அவ்வாறே மற்ற செயல்களுமாகும். வீட்டிலுள்ள அனைவருடைய செயல்களில் சீர்திருத்தத்தை உருவாக்க முயற்சி செய்யாவிட்டால் ஏதாவது ஒரு நேரத்தில் ஒருவர் மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடுவார். மனைவி நல்லவராக இருக்கிறார். கணவர் ஆகுமான வழியில் சம்பாதிக்காவிட்டாலும் வீடு பாதிப்பிற்குள்ளாகும். தொழுகையின் பக்கம் தந்தைக்கு கவனம் இருக்கிறது; ஆனால் பிள்ளைகளுக்கு கவனமூட்டவில்லை என்றால் அல்லது தந்தை கூறுகிறார்; ஆனால் தாய் கவனம் செலுத்துவதில்லை என்றால் அல்லது தாய் கவனமூட்டுகிறார்; ஆனால் தந்தை தொழாதவராக இருக்கிறார்

என்றால், பிள்ளைகள் அவரைப் பின்பற்றுவார்கள். சென்ற குத்பாவிலுல் நான் இந்த உதாரணத்தைக் கூறியிருந்தேன். ***கூ அன்ஃபுஸக்கும் வஅஹ்லீக்கும் நாரா*** என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். (66:7) அதாவது உங்களை மட்டும் நெருப்பிலிருந்து காப்பாற்றாதீர்கள்; உங்கள் மனைவி மக்களையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள். உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவது மட்டும் போதாது. மாறாக, மற்றவர்களையும் காப்பாற்றுவது கடமையாகும். மற்றவர்களை நீங்கள் காப்பாற்றாவிட்டால் அவர்கள் ஒருநாள் உங்களையும் சேர்த்துக் கொண்டு மூழ்குவார்கள்.

இந்த எட்டு விஷயங்கள் இன்றியும் சில காரணங்கள் செயல் அளவிலான சீர்திருத்தத்திற்குத் தடையாக இருக்க முடியும். நான் தற்போது கூறியது போன்று இவை சில முக்கியமான விஷயங்களாகும். ஆனால் இவற்றைப் பற்றி சிந்தித்தால் அநேகமாக எல்லா விஷயங்களும் இந்த எட்டு விஷயங்களுக்குள் வந்து விடுகின்றன. ✸

## (5)

# குத்பா சுருக்கம் 10 ஜனவரி 2014

**செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு மூன்று விஷயங்கள் அவசியமானவையாகும்**

1. **எண்ணம் அளவிலான ஆற்றல்**
2. **அறிவு அளவிலான ஆற்றல்**
3. **செயல் அளவிலான ஆற்றல்**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிக அருமையான முறையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். செயலளவிலான சீர்திருத்தத்திற்கு இந்த விஷயங்கள் உருவாகி விட்டாலும் வெற்றி கிடைத்து விடலாம். அவை இந்த மூன்று விஷயங்களாகும். ஒன்று எண்ணம் அளவிலான ஆற்றல். இரண்டாவது சரியான முழுமையயான அறிவு. மூன்றாவது செயல் அளவிலான ஆற்றல். ஆனால் உண்மையான, அடிப்படையான ஆற்றல்கள் இரண்டாகும். எண்ணம் அளவிலான ஆற்றல். செயல் அளவிலான ஆற்றல். இவ்விரண்டிற்கும் இடையில் வைக்கப்பட்டிருப்பதுதான் சரியான முழுமையான அறிவு இருப்பது என்பதாகும். அது இவ்விரண்டு அடிப்படையான ஆற்றல்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சரியான அறிவு இருப்பது செயல் அளவிலான ஆற்றலின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது; எண்ணம் அளவிலான ஆற்றல் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எப்படி இருந்தாலும், செயல் அளவிலான சீர்திருத்தத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது எண்ணம் அளவிலான ஆற்றலும் செயல் அளவிலான ஆற்றலும் ஆகிய இவ்விரண்டும்தான் அடிப்படையாகும் என்பதை சிந்தனையில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே நாம் எண்ணம் அளவிலான ஆற்றலை அதிகமாக உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. ஒரு தீமையைத் தடுப்பதற்கு நமது எண்ணம் உறுதியாக இருந்தால்தான், அந்தத் தீமைகள் முடிவுக்கு வர முடியும். நாம் செயலின் பலவீனத்தை நீக்கும்போது அதன் குறைபாடுகளை நீக்கும்போதுதான் எண்ணத்தின் உறுதித்தன்மை நமக்கு பயன்படும். அது இல்லாமல் சீர்திருத்தம் ஏற்பட முடியாது.

இந்தக் கோணத்தில், நமது எண்ணத்தின் உறுதித்தன்மை எப்படி இருக்கின்றது என நாம் ஆய்வு செய்யும்போது எண்ணத்தைப் பொருத்தவரை அதில் மிகக் குறைந்த குறைபாடே இருக்கின்து என

நமக்குத் தெரிய வருகிறது. ஏனெனில் எண்ணத்தைப் பொருத்தவரை ஜமாஅத்தின் எல்லா மக்களும் அல்லது பெரும்பாலான நபர்கள் தம்மிடம் இறையச்சம், தூய்மை உருவாக வேண்டும் என்றும் அவர்கள் இஸ்லாமிய கட்டளைகளை பரப்ப வேண்டும் என்றும் விரும்புகின்றனர். அல்லாஹ்வின் அன்பையும் அவனது நெருக்கத்தையும் பெற வேண்டும் எனவும் விரும்புகின்றனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதற்கு இவ்வாறு விளக்கமளித்துள்ளார்கள்:**

நமது எண்ணம் அளவிலான ஆற்றல் உறுதியானது, வலுவானது எனவும் அப்படி இருந்தும் சரியான விளைவு ஏற்படவில்லை என்றால் பிறகு இரண்டு விஷயங்களில் ஒன்று உறுதியானது என்பதை இவை நிரூபிக்கின்றது. ஒன்று, நமது செயலுக்கு உண்மையான எண்ணம் அளவிலான ஆற்றல் எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு நம்மிடம் இல்லை. ஆனால் கொள்கை அளவிலான சீர்திருத்தத்திற்கு எப்படிப்பட்ட எண்ணம் அளவிலான ஆற்றல் தேவையிருக்க வேண்டுமோ அது நம்மிடம் இருந்தது. எனவே கொள்கையளவிலான சீர்திருத்தம் நம்மிடம் ஏற்பட்டு விட்டது. ஆனால் செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு எண்ணம் அளவிலான ஆற்றல் தேவையிருந்தது. அது நம்மிடம் இல்லாதிருந்தது. எனவே நாம் செயல்களை சீர்திருத்துவதில் வெற்றி பெற முடியவில்லை. பிறகு நமது உபூதிய்யத் (இறைவனுக்கு முற்றிலுமாக அடிமையாகி விடும் தன்மையி)லும் குறைபாடு இருந்தது எனவும் நம்ப வேண்டியது வரும். மேலும் அதன் காரணமாக செயல் அளவிலான ஆற்றல் சீர்குலைந்து விட்டது. மேலும் அது எண்ணம் அடிப்படையிலான ஆற்றலின் தாக்கத்தை ஒப்புக்கொள்வதில்லை.

உதாரணமாக, ஒரு மாணவர் இருக்கின்றார். அவர் தனது பாடத்தை மனனம் செய்கிறார். ஆனால் நினைவில் வைக்க முடிவதில்லை.அவருடைய மூளையை சரி செய்யாதவரை அவருக்கு எத்தனை பாடம் கொடுக்கப்பட்டாலும், எத்தனை முறை அவருக்கு நினைவூட்டப்பட்டாலும், அல்லது நினைவூட்டப்படுவதற்கு எவ்வளவு முறை முயற்சி செய்யப்பட்டாலும் அவர் அதை நினைவில் வைக்க முடியாது. எனவே நாம் நமது செயல் அளவிலான சீர்திருத்தத்தின் நிலைமைகளின் பக்கம் பார்க்க வேண்டியது வரும். நன்மை செய்யும் நமது எண்ணத்தினால், மூளையின் எந்தப் பகுதியில் தாக்கம் ஏற்படுவதன் விளைவாக செயல் அளவிலான சீர்திருத்தம் ஆரம்பமாகி விடுகிறதோ அந்தத் தாக்கம் ஏன் ஏற்படுவதில்லை என நாம் பார்க்க வேண்டும். மேலும் இந்த வழியில் இருக்கின்ற

தடைகளை நாம் நீக்க முயற்சி செய்ய வேண்டும். பிறகு நமது உபூதிய்யத்தின் தகுதி என்ன என்று பார்க்க வேண்டியது வரும். நமது செயல் அளவிலான முயற்சியில் நல்ல எண்ணம், கலப்படமற்ற தன்மை, நன்றியுடைமை ஆகியவை எவ்வளவு இருக்கின்றன எனப் பார்க்க வேண்டும்.

ஆக, செயல் அளவிலான சீர்திருத்தத்தில் இரு விதமான தடைகள் குறுக்கே இருக்கின்றன. ஒன்று, எண்ணம் அளவிலான ஆற்றலில் பலவீனம்; இரண்டாவது செயல் அளவிலான ஆற்றலின் பலவீனம். ஆனால் ஏற்கனவே கூறியது போன்று இவ்விரண்டிற்கும் இடையில் செயல் அளவிலான பலவீனம் இன்னொரு நிலையிலும் இருக்கிறது. அது அறிவு அளவிலான பலவீனம் ஆகும். இது இரு புறத்திலும் தனது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எண்ணமும் அறிவுக்கு ஏற்ப செல்கிறது. செயலும் அறிவுக்கேற்றபடி செல்கிறது என்பதை நாம் அறிவு அளவிலான வாழ்க்கையில் பார்க்கிறோம். அதற்குரிய உதாரணம், ஆயிரம் பேர் கொண்ட ஒரு படை தனது வீட்டைச் சுற்றித் தாக்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறது என்பது ஒருவருக்குத் தெரியாமல் இருந்தால், மாறாக, எவரோ ஒன்றிடண்டு பேர் தாக்க இருக்கிறார் அல்லது தாக்க முடியும் என்று மட்டுமே அவருக்குத் தெரிகிறதென்றால் அதற்கேற்பவே அவர் ஆயத்தம் செய்கிறார். ஆனால் தாக்குதல் செய்பவர்கள் ஆயிரம் பேர் என்பது அவருக்குத் தெரிந்தால் அவருடைய ஆயத்தம் வேறுபட்டதாக இருக்கிறது. ஆக, அறிவு குறைவாக இருப்பதன் காரணமாக குறைபாடு ஏற்படுகிறது. மேலும் சரியான அறிவு எண்ணம் அளவிலான ஆற்றலை அதிகமாக்கி விடுகிறது.

அவ்வாறே ஒரு மனிதன் ஒரு பொருளை தூக்குவதற்கு முயற்சி செய்கின்றான். மேலும் அதை இலேசானதாகக் கருதுகிறான். ஆனால் அது அதிக எடை கொண்டதாக இருக்கிறது. அப்போது அவரால் அதை தூக்க முடியாது. ஆயினும் அது எடை மிக்கது என்பதை அவர் ஒருமுறை கணித்து விட்டால் பிறகு அதிக ஆற்றலை செலவு செய்கின்றார். அதிக ஆற்றலை பயன்படுத்துகிறார். தூக்கும் முறையை மாற்றுகிறார். பிறகு அதை அவர் தூக்கியும் விடுகிறார். ஆக, இரண்டாம் முறை அவரிடம் அதிக ஆற்றல் ஒன்றும் வந்து விடவில்லை. மாறாக, அறிவு வந்ததன் காரணமாக சரியான அறிவு வந்ததன் காரணமாக அவர் சரியான வழிமுறையில் ஆற்றலை பயன்படுத்தியதனால் அதில் அவர் வெற்றி பெற்று விட்டார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்னொரு விஷயத்தையும் கூறினார்கள்:**

அல்லாஹ் ஒவ்வொரு மனிதனிடமும் ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றலை வைத்திருக்கிறான். அதன் மூலமாக அவன் இரண்டு பொருள்களுக்கு மத்தியில் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். இன்ன வேலை செய்வதற்கு இவ்வளவு ஆற்றல் தேவை என்பதை அது தீர்மானிக்கிறது. ஏனெனில் எல்லா ஆற்றல்களும் மனிதனுடைய கையில் இருப்பதில்லை; மாறாக, மூளையில் பாதுகாப்பாக இருக்கிறது. எனவே சுமையை தூக்குவதற்கான உதாரணம் கூறப்பட்டது போன்று, முதல் முறை ஒரு வேலை முடியாமற் போய்விட்டால் சுமையை தூக்க முடியாவிட்டால் மனிதன் அதிகமாக ஆற்றலை அனுப்புமாறு மூளைக்கு கூறுகிறான். மேலும் அந்த ஆற்றல் வந்து விடும்போது எளிதாகி விடுகிறது. மேலும் ஒப்பிட்டுப்பார்க்கும் இந்த ஆற்றலும் அறிவின் மூலமாகக் கிடைக்கிறது. அது உட்புறமான அறிவாக இருந்தாலும் சரி; வெளிப்புறமான அறிவாக இருந்தாலும் சரி. உட்புறமான அறிவு என்பதன் கருத்து, காணுதல் மற்றும் அநுபவமாகும். மேலும் வெளிப்புறமான அறிவு என்பதன் கருத்து, காதில் விழும் வெளியிலுள்ள ஓசையாகும். வெளியிலுள்ள தாக்குதல் பற்றிய உதாரணம் கூறப்பட்டது போன்று, வெளிப்புறத்திலுள்ள தாக்குதலைப் பற்றி எச்சரிப்பதற்காக வெளிப்புறத்திலுள்ள ஓசை மனிதனை எச்சரிக்கின்றது. ஆனால் சுமையை தூக்குவதற்கான உதாரணம் கூறப்பட்டிருந்தது. அதற்கு ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றல் தீர்மானிக்க வேண்டும். அதாவது, முதலில் இந்த சுமை தூக்க முடியாமல் இருந்தது. ஏனெனில் அதை நீங்கள் குறைந்த சுமையாகக் கருதினீர்கள். உதாரணமாக, பத்து கிலோவாக இருந்ததென்றால் நீங்கள் அதை ஐந்து கிலோ எனக் கருதினீர்கள். எனவே கொஞ்சம் ஆற்றலைத்தான் பயன்படுத்தினீர்கள். இப்போது நீங்கள் பத்து கிலோவுக்கான ஆற்றலை பயன்படுத்தினால் தூக்கி விடுவீர்கள்.

இந்த கோட்பாடு முன்னிறுத்தப்பட்டால் மனிதன் இந்த செயல்முறைத் திட்டத்திற்காக நிற்கும்போது எனது முயற்சிக்காக எனக்கு எவ்வளவு ஆற்றல் தேவைப்படும் என ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றல் தீர்மானிக்கிறது. சில நேரத்தில் சரியான அறிவு இல்லாததன் காரணமாக, மனிதன் செயல்களில் சீர்திருத்தம் செய்ய முடியாது. மேலும் அறிவு இல்லாததன் காரணமாக, அவருடைய செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு எந்த அளவுக்கு ஆற்றல் தேவை என்பதைப் பற்றிய சரியான செய்தியை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றல் அவருக்கு வழங்குவதில்லை. எனவே ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றல் மனிதனை எச்சரிக்கின்றது. இதுவே அறிவின்மை காரணமாக அவனை கவனமற்றவனாகவும் ஆக்குகிறது.

ஆக, செயல்களின் சீர்திருத்தத்திற்கு மூன்று விஷயங்கள் உறுதியாக இருப்பது அவசியமாகும். **ஒன்று** எண்ணம் அளவிலான உறுதி இருப்பது அவசியமானதாகும். **இன்னொன்று,** அறிவு அதிகமாக இருக்க வேண்டியது அவசியமாகும். **பிறிதொன்று** செயல் அளவிலான ஆற்றலை உருவாக்குவதாகும். இதுவும் அவசியமானதாகும். அறிவு அதிகமாவது என்பது உண்மையில் எண்ணம் அளவிலான ஆற்றலின் பகுதியாகும். ஏனெனில் அறிவு அதிகமாவதுடன் எண்ணத்தின் ஆற்றல் அதிகமாகிறது. அல்லது செயலைச் செய்வதற்கு ஆயத்தமாகி விடுகிறது எனக் கூறலாம்.

இந்த அனைத்து விஷயங்களின் சுருக்கம் என்னவென்றால், செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு நமக்கு மூன்று விஷயங்கள் தேவை. ஒன்று, எண்ணம் அளவிலான ஆற்றல். அது மாபெரும் வேலை செய்வதற்கு தகுதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். அடுத்து அறிவு அதிகமாக இருப்பது. நமது எண்ணம் அளவிலான ஆற்றல் எது சரியானது? எது தவறானது? என்ற நமது பொறுப்புகளை உணர வேண்டும்.மேலும் சரியானவற்றிக்கு ஆதரவளிக்க வேண்டும். பிறகு அதன்படி செயல்படுவதற்கு முழுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும். கவனமின்மையில் இருந்தவாறு மனிதன் சந்தர்ப்பங்களை வீணாக்கி விடக் கூடாது. மூன்றாவது, செயல் அளவிலான ஆற்றலின் வல்லமை. அதாவது, நமது உறுப்புகள் நமது தீய எண்ணங்களுக்கேற்ப அல்லாமல் நல்ல எண்ணத்திற்கேற்ப செயல்பட வேண்டும். மேலும் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலான கட்டளையை ஏற்க மறுக்கக் கூடாது.

இந்த விஷயங்கள் பாவங்களிலிருந்து வெளிவருவதற்கும் செயல்களின் சீர்திருத்தத்திற்கும் அடிப்படையான காரணிகளாகும். நாம் நமது எண்ணம் அளவிலான ஆற்றலை, தனது கட்டளையை தனது ஆற்றல், வல்லமை, சட்டங்கள் ஆகியவற்றிக்கேற்ப பணிய வைக்கின்றவரும், எந்தச் சாக்கையும் தன் மீது மேலோங்க விடாதவரும் ஆகிய ஒரு வல்லமை மிக்க மேலதிகாரியைப் போன்று ஆக்க வேண்டியது வரும். **நாம் பெரிய பாவம் சிறிய பாவம் என சுய இலக்கணங்கள் கொடுத்து அவை தன் மீது மேலோங்குவதிலிருந்தும் தடுக்க வேண்டியது வரும்.**

எனவே நாம் நமது செயல் அளவிலான சீர்திருத்ததிற்கு இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இந்த விஷயங்களை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. நமது எண்ணம் அளவிலான ஆற்றலை உறுதிமிக்கதாக ஆக்க வேண்டிய தேவை இருக்கிறது. செயல் அளவிலான ஆற்றலை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அப்போதுதான் நாம் ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக முடியும்; நமது தகுதிகள், அல்லாஹ் நமக்கு வழங்கிய ஆற்றல்கள் ஆகியவை துருப்பிடிப்பதனால் நாசமாகி விடாதிருக்க முடியும்.✸

## (6)

## குத்பா சுருக்கம் 17 ஜனவரி 2014

**எண்ணம் அளவிலான ஆற்றல் என்பதன் பொருள்:**
**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

செயல் அளவிலான சீர்திருத்தத்திற்குத் தேவையான விஷயங்களில் முதலாவது, எண்ணம் அளவிலான ஆற்றலாகும் என்பதை நாம் கண்டோம். இந்த எண்ணம் அளவிலான ஆற்றல் என்பது என்ன? எண்ணம் அளவிலான ஆற்றலைப் பற்றி இது என்ன எனக் கேட்கப்படுகிறது என்பது நம்மில் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். எண்ணம் அளவிலான ஆற்றல் என்ற சொற்களிலிருந்தே, இது ஒரு வேலையைச் செய்வதற்கான உறுதியான எண்ணம் கொள்ளுதல், அதை நிறைவேற்றுதல், அதை நிறைவேற்றும் ஆற்றல் கொண்டிருத்தல் என்பது தெளிவாகிறதே! இங்கு எண்ணம் அளவிலான ஆற்றல் என்ற கேள்வி எழுப்ப வேண்டிய தேவை என்ன? என பெரும்பாலானவர்கள் கூறுவர். இது தொடர்பாக தெரிய வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிக அருமையாக இதைப் பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார்கள். எண்ணத்தின் ஆற்றல் என்பதன் கருத்து செயலைப் பொருத்தவரை எல்லா நேரத்திலும் மாறிவிடுகிறது. எனவே இந்த அடிப்படையான விஷயத்தை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் முன்னால் வைத்தால் மட்டுமே, மார்க்க விஷயங்களில் எண்ணம் அளவிலான ஆற்றல் என்பது என்ன என்பதை இந்த கோணத்தில் சிந்திக்க முடியும்.

எனவே, மார்க்க விவகாரத்தில் எண்ணம் அளவிலான ஆற்றல் என்பது ஈமானின் பெயராகும். நாம் இந்த கோணத்தில் பார்க்கும்போது ஈமான் அதிகமாவதால் செயல் அளவிலான ஆற்றல் அதிகமாகிறது என்பது தெரிய வருகிறது. உறுதியான ஈமான் என்றால், அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கிறதென்றால் பிறகு மனிதனுடைய வேலைகள் தானாகவே நடக்கின்றன. ஒவ்வொரு கடினமும் அல்லாஹ்வின் உதவியினாலும் ஆதரவினாலும் எளிமையாகி விடுகின்றன. செயல் அளவிலான கஷ்டங்கள் அந்த ஈமானின் காரணமாக காற்றில் பறந்து விடுகின்றன. மேலும் மனிதன் எளிதாக அவற்றின் மீது வெற்றி கொண்டு விடுகிறான். மேலும் இது வெறும் கற்பனை விஷயமன்று. மாறாக, அதற்கான செயல் வடிவிலான

முன்மாதிரிகளை நாம் பார்க்கின்றோம். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தைப் பார்க்கும்போது ஈமானுக்கு முன்னுள்ள செயல்களின் நிலைமைகள் மற்றும் ஈமானுக்குப் பின்னுள்ள நிலைமைகள் ஆகியவற்றில் எப்படிப்பட்ட முன்மாதிரி காணப்படுகிறதென்றால் அதைப் பார்த்து வியப்பு ஏற்படுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள்? அவர்களின் செயல்களுடைய நிலைமை எப்படி இருந்தது? வரலாறு இது பற்றி என்ன கூறுகிறது? ஈமான் கொண்ட அவர்களில் திருடர்களும் இருந்தனர்; அவர்களில் வழிப்பறிக் கொள்ளையர்களும் இருந்தனர்; அவர்களில் தீயவர்களும் நடத்தை கெட்டவர்களும் இருந்தனர். அவர்கள் தாயுடன் திருமணம் செய்து வந்தனர். தாயை சொத்தில் பங்கு பிரித்து கொடுப்பவர்களாக இருந்தனர். தனது மகள்களை கொன்று வந்தனர். அவர்களில் எல்லா நேரமும் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த சூதாட்டக் காரர்களும் இருந்தனர். அவர்களில் மது அருந்துபவர்களும் இருந்தனர். மதுவை எந்த அளவுக்கு விரும்பினர் என்றால் அந்த விஷயத்தில் யாரும் அவர்களுக்குப் போட்டி போட முடியாது. மது அருந்துவதையே கண்ணியமாகக் கருதினர். ஒருவர் மற்றவரை விட மது அருந்துவதில் பெருமை கொண்டனர். நான் இவ்வளவு மது அருந்தினேன்; அல்லது என்னால் இவ்வளவு மது அருந்த முடியும் எனப் பெருமை கொண்டனர். ஒரு கவிஞர், நான் இரவு நேரங்களில் எழுந்து எழுந்து மதுவைக் குடித்துக் கொண்டிருக்கிறேன். தண்ணீரை கையில் கூட எடுப்பதில்லை என தனது கவிதையில் பெருமையாகக் குறிப்பிடுகிறார். சூதாட்டக்காரர் தனது சூதாட்டத்தில் பெருமைப்பட்டவாறு, நான் எனது எல்லா செல்வத்தையும் சூதாட்டத்தில் இட்டு விடுகிறேன். பிறகு செல்வம் வரும்போது அதையும் சூதாட்டத்திலேயே இட்டு விடுகிறேன் எனக் கூறுகிறார். அநேகமாக இன்று மிகப் பெரிய சூதாட்டக் காரர் கூட பகிரங்கமான முறையில் இப்படி அறிவிப்பு செய்ய மாட்டார்.

ஆக, அந்தக் காலத்தில் அவர்களின் நிலை இப்படி இருந்தது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அந்த மக்கள் ஈமான் கொண்டபோது அவர்களின் நிலைமை எப்படி மாறியது! அவர்களிடம் எப்படிப்பட்ட புரட்சி உருவானது!! அந்த ஈமான் எப்படிப்பட்ட எண்ணம் அளவிலான ஆற்றலை அவர்களிடம் உருவாக்கியது!!! எவ்வாறு இவ்வளவு சீக்கிரம் அவர்களிடம் மகத்தான புரட்சி ஏற்பட்டது என்பதைப் பார்க்கும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது. ஈமான் கொண்டதுமே இனி மார்க்கத்தின் போதனைப்படி

செயல்படுவதற்காக நாம் நமது உள்ளத்தை உறுதியாகவும் வலுவாகவும் ஆக்க வேண்டும் என அவர்கள் தீர்மானித்து விட்டனர்; இறைவனுடைய கட்டளைகளுக்கு எதிராக இனி நாம் காலெடுத்து வைக்கக் கூடாது என அவர்கள் தீர்மானித்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு கட்டளையும் இனி நமக்கு கடைசி கூற்றாகும். (அதற்கு மறு பேச்சில்லை) எனத் தீர்மானித்து விட்டனர். அவர்களின் இந்தத் தீர்மானம் எந்த அளவுக்கு உறுதியானதாக இருந்ததென்றால், வல்லமை மிக்கதாக இருந்ததென்றால் அவர்களுடைய செயல்களின் பலவீனங்கள் இந்த தீர்மானத்திற்கு முன்னால் ஒரு நொடிப்பொழுதுக்காகக் கூட எதிரில் நிற்க முடியவில்லை. அவர்களின் நிலைமை எப்படி மாறியதென்றால் அபாயத்திலும் அபாயமான துன்பத்தை அவர்கள் தம் மீது தாங்கிக் கொள்ள ஆயத்தமாகி விட்டனர். தாங்கியது மட்டுமல்லாமல், அவர்கள் தங்களிடத்தில் உருவாக்கிய எண்ணம் அளவிலான ஆற்றல் அவர்களின் செயல் அளவிலான பலவீனங்களை கடும் புயற் காற்று ஒரு துரும்பை தூக்கி எறிந்து விடுவது போன்று வெகு தூரம் தூக்கி எறிந்து விட்டது.

ஆக, இவ்விதமான எண்ணம் அளவிலான ஆற்றல் உருவாகி விட்டால் மக்கள் செயல்களை சீர்திருத்துவதற்கு வேறு எந்த வழிமுறையையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை. ஈமானின் ஆற்றலின் காரணமாக சீர்திருத்தத்தின் எத்தகைய புரட்சியை 1400 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வந்ததோ அதற்குரிய உதாரணத்தை அந்த அளவுக்கு பரந்த அளவில் உலகில் வேறு எங்கும் காண முடிவதில்லை. எவ்வாறு வியக்கத்தக் அளவில் உலகில் புரட்சி ஏற்பட்டது! ஆனால் இதற்கு ஒப்புமையுள்ள சில உதாரணங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான தொண்டர் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடமும் நமக்குத் தென்படுகின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புகையிலை பயன்படுத்துவதை ஹராம் எனக் குறிப்பிடவில்லை என்றாலும் இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இருந்திருந்தால் இதை அவர்கள் ஹராமாக்கி இருப்பார்கள் என ஓரிடத்தில் கூறியிருக்கிறார்கள். ஒரு பயணத்தின்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹுக்காவை விரும்பாதபோது ஹுக்கா குடிக்கும் பழக்கம் கொண்ட அவருடைய ஒரு சஹாபி ஹுக்காவை உடைத்து விட்டார். புகையிலை பயன்படுத்துவதன் அருகில் கூட செல்லவில்லை.

ஆகவே இந்த முன்மாதிரிகளை நாம் நிலைநாட்ட வேண்டிய

தேவை நமக்கு இருக்கிறது. ஏதாவது சட்டத்திற்கு பயந்து அல்லது சமூகத்திற்கு பயந்து தீமைகளை விடாதீர்கள்; பெற்றோரைப் பற்றிய அச்சம் அல்லது சமூகத்தைப் பற்றிய அச்சம் என்பதனால் அதிலிருந்து விலகக் கூடாது. இந்த சிந்தனை இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வும் அவனது தூதரும் நம்மை இதிலிருந்து தடுத்துள்ளார்கள்; அல்லது இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மைத் தடுத்துள்ளார்கள்; எனவே நாம் இந்தத் தீமையிலிருந்து விலக வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும்.

முஸ்லிம் நாடுகளில் மது பொதுவாக கிடைக்கவில்லை என்றால் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் - இப்போது சட்டம் அதற்கு அனுமதி அளிப்பதில்லை - அப்படிப்பட்ட நிலையில் மறைமுகமாக நாட்டு மது தயாரிக்கப்படுகிறது. அதைக் குடிக்கவும் செய்கிறார்கள். அது அதிக போதை கொண்டதாகவும் இருக்கிறது. செல்வந்தர்கள் இன்னும் பல சாக்குப்போக்குகளினால் உயர்தரமான மதுவையும் வரவழைத்து விடுகின்றனர். சில மாணவர்களை கல்லூரி மாணவர்களை நான் பார்த்திருக்கிறேன். சாதாரணமாக மாணவர்களைப் பார்க்கவில்லை; கல்லூரி மாணவர்கள் ஆல்கஹால் கலந்த மருந்துகளை, **Syrup** (சிரப்) களை குறிப்பாக இருமல் **Syrup** (சிரப்) ஆக இருக்கின்றன. அதை போதைக்காக பயன்படுத்துகின்றனர். பிறகு அதற்கு நஷ்டமும் ஏற்படுகிறது. ஏனெனில் அவற்றில் மற்ற மருந்துகளும் கலந்திருக்கின்றன.

எனவே அப்படிப்பட்ட சமூகத்திலிருந்து தப்பிப்பது அவசியமானதாகும். இன்றைய காலத்தில் இங்கு ஐரோப்பாவிலும் அதிக அபாயகரமானவையாக இருக்கின்ற போதைகள் மட்டுமின்றி, ஷீஷே என்ற பெயரிலும் ரெஸ்டாரண்டுகளில் குறிப்பாக முஸ்லிம் ரெஸ்ராரண்டுகளில் கிடைக்கின்றன. அவ்வாறே அமெரிக்காவில் ஹுக்கா என்ற பெயரில் போதை பயன்படுத்தப்படுகிறது. அது ஒரு தனி வகையான ஹுக்கா ஆகும். அதை என்ன சொல்கிறார்கள்? இங்கு நமது இளைஞர்களும், இள வயது பெண்களும் ஷீஷா என்ற போதைப் பொருளை பயன்படுத்துகின்றனர். மேலும் இதில் போதை இல்லை; அல்லது எப்போதாவது பயன்படுத்தினால் ஒன்றுமில்லை; எந்தக் குற்றமுமில்லை எனக் கூறுகின்றனர்.

எப்போதாவது பயன்படுத்துவதில்தான் மனிதன் பெரும் போதைகளுக்கு உள்ளாகிறான். பிறகு அதிலிருந்து விலகுவது கடினமாகி விடுகிறது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

எனவே இப்போதிருந்தே எண்ணம் அளவிலான ஆற்றலை பயன்படுத்த வேண்டியது வரும். மேலும் இந்தத் தீமையிலிருந்து

விடுதலை பெற வேண்டியது வரும். மேலும் இதற்காக உங்கள் ஈமானைப் பாருங்கள். ஈமான் சூடுபிடிக்கும்போதுதான் அது எண்ணம் அளவிலான ஆற்றலை உருவாக்க முடியும். நபித்தோழர்களின் முன்மாதிரியில் நாம் கண்ட அந்த பெரிய தீர்மானத்தை உடனே எடுக்க முடியும்.

## அறிவு அளவிலான ஆற்றல் என்பதன் பொருள்:

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இத்துடனேயே செயல் அளவிலான ஆற்றல் இருக்கிறது. ஒருவரிடம் செயல் அளவிலான ஆற்றல் இருந்தால் அறிவின் காரணமாக ஏற்படுகின்ற செயலின் பலவீனம் நீங்கி விடுகிறது. அதற்கு பொதுவான உலக உதாரணம், குழந்தைப் பருவத்தின் சில பழக்க வழக்கங்கள் குழந்தைகளிடம் இருக்கின்றன. சிலருக்கு மண்ணைத் தின்னும் பழக்கம் இருக்கிறது. அதன் நஷ்டம் பற்றி அதற்குத் தெரிய வரும்போது அது முயற்சி செய்து அதைத் தடுக்கிறது. இவ்வாறு பல பழக்கங்கள் இருக்கின்றன. உதாரணமாக எனக்குத் தெரியும். ஒரு பெண் குழந்தை இரவில் தூங்கும்போது தனது முடியை இழுத்து காயப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது அவள் பெரியவளாகிக் கொண்டிருக்கிறாள். எனவே படிப்படியாக உணரத் தொடங்கி விட்டாள். முயற்சி செய்து அதிலிருந்து விடுதலை பெற்று வருகிறாள். ஆக, இந்தப் பழக்கம் அறிவு வருவதால் மறைந்து விடும்.

இவ்வாறே எவருக்கு இறைவனைப் பற்றிய அச்சம் இருக்கிறதோ அவருக்கு பாவத்தைப் பற்றியும் இறைவனுடைய கோபத்தைப் பற்றியும் சரியாக உணர்வூட்டப்பட்டால், பாவத்தால் அல்லாஹ் எந்த அளவுக்கு கோபப்படுகிறான் என்ற விஷயத்தில் அவரை உறுதிப்படுத்தி விட்டால் பிறகு அவர் பாவத்திலிருந்து தப்பித்து விடுகிறார்.

## செயல் அளவிலான ஆற்றல் என்பதன் பொருள்:

செயல் அளவிலான பலவீனம் ஏற்படுவதற்கு மூன்றாவது காரணம், செயல் அளவிலான ஆற்றல் இல்லாமையாகும். ஆக இந்த மூன்று விதமான மக்கள் உலகில் இருக்கின்றனர். மேலும் உலகில் இந்த நோய்களும் இருக்கின்றன. சிலர் இருக்கின்றனர். அவர்களுடைய ஈமான் முழுமையடையாமல் இருப்பதனால் செயல்களில் பலவீனம் காணப்படுகிறது. சிலரிடம் செயல்களில் பலவீனம் இருப்பதற்குக் காரணம், அவர்களுடைய அறிவு முழுமையாக இல்லாததாகும். சிலரிடம் ஈமானும் அறிவும் இருக்கிறது; ஆனால் மற்ற வகைகளில்

அவற்றில் எந்த அளவுக்கு துருப்பிடித்துள்ளது என்றால், இரண்டு சிகிச்சையும் அவர்களுக்கு போதுமானதாக இருப்பதில்லை; மாறாக, வெளிப்புறத்திலிருந்து சிகிச்சை தேவைப்படுகிறது. ஒருவருடைய துணை தேவைப்படுகிறது. உதாரணமாக ஒருவருடைய எலும்பு முறிந்து விட்டால் பிளாஸ்திரி போட்டுவெளியிலிருந்து தாங்கல் கொடுக்கப் படுகிறது. சில நேரத்தில் எலும்பை ஒட்டச் செய்வதற்காகவும் உறுதிப்படுத்துவதற்காகவும் அறுவை சிகிச்சை செய்து பிளாட்டீன் போடப்படுகிறது. பிறகு படிப்படியாக எலும்பு சேர்ந்து விடுகிறது. பிறகு அந்த கைத்தாங்கல் அகற்றப்படுகின்றன. அவ்வாறே சில மனிதர்களுக்கு சிறிது காலத்திற்கு துணை தேவைப்படுகிறது. படிப்படியாக அந்தத் துணை அவர்களிடம் உறுதித்தன்மையை ஏற்படுத்தி விடுகிறது. அவர் சுறுசுறுப்பானவராகி விடுகிறார்; மேலும் செயல் அளவிலான பலவீனங்கள் நீங்கி விடுகின்றன. எனவே நான் சென்ற குத்பாக்களிலும் கூறியது போன்று நமது ஜமாஅத் அமைப்பு, நமது பொறுப்பாளர்கள், நமது கிளை அமைப்புகள் இந்த செயல் அளவிலான பலவீனங்களை நீக்குவதற்குக் காரணிகளாக ஆக வேண்டும். ஆனால் பொறுப்பாளர்களாகிய இவர்களிடமே எண்ணம் அளவிலான பலவீனம் இருந்தால், அறிவில் குறைவு இருந்தால், செயலில் குறைவு இருந்தால் அவர்கள் மற்றவர்களுக்கு எப்படி துணையாக இருப்பார்கள்? எனவே ஜமாஅத் முன்னேற்றத்திற்கு அமைப்பின் ஒவ்வொரு பகுதியும் இன்னும் கூறுவதென்றால் ஒவ்வொரு நபரும் தம்மைப் பற்றி ஆய்வு செய்தவாறு தன்னையும் சீர்திருத்த வேண்டிய தேவை இருக்கிறது; தனது நண்பர்கள் நெருக்கமானவர்கள் ஆகியோரையும் சீர்திருத்த வேண்டிய தேவை இருக்கிறது. அப்போதுதான் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் செயல் அளவிலான சீர்திருத்தத்தின் உயர்ந்த படித்தரத்தை சென்றடைய முடியும். இந்த வகையில் அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவராக முடியும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. ✸

(7)

## குத்பா சுருக்கம் 24 ஜனவரி 2014

### ஜமாஅத்தின் முரப்பிகள் மற்றும் அறிவுரை கூறுபவர்களின் கடமைகள்

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** நமது முரப்பிகள், நமது ஆலிம்கள், அறிவுரை வழங்கும் வாய்ப்பு கிடைக்கும் அமீர்மார்கள், பொறுப்பாளர்கள், இதில் கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் அடங்குவர், அவர்கள் அனைவரும் ஜமாஅத் உறுப்பினர்களின் செயல் அளவிலான சீர்திருத்தத்தில் தமது பங்கை முழுமையான முறையில் நிறைவேற்றுவதற்காக (நான் மேலே கூறிய) இந்த விஷயங்களை கவனத்தில் வையுங்கள். இது தொடர்பாக அவ்வப்போது பல விஷயங்களை நான் ஜமாஅத்திற்கு முன்பாக எடுத்துக் கூறி வந்திருக்கிறேன். ஜமாஅத்தின் உறுப்பினர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் **MTA** மூலமாக தொடர்பு வைக்கின்றார்கள் என்றால், அவர்கள் எனது விஷயங்களைக் கேட்டு விடுகிறார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் மீது தாக்கமும் ஏற்படுகிறது. அல்லது குறைந்த பட்சம் அதிக எண்ணிக்கையில் இந்த நல்ல தாக்கம் ஏற்படுகிறது. ஆனால் முரப்பிகள், அமீர்மார்கள், பொறுப்பாளர்களின் வேலை என்னவென்றால், அந்தத் தூதுச் செய்தி, அதை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் ஜமாஅத்திற்கு முன்னால் வரும் வகையில் உங்கள் நிகழ்ச்சிகளை வையுங்கள். ஒவ்வோர் அஹ்மதியின் மூளையிலும் அதன் செயல் வட்டம் நன்கு தெளிவாகவும் உறுதியாகவும் மாறுவதற்காக அவ்வாறு ஏற்பாடு செய்யுங்கள்.

ஆக, இது மிக முக்கியமான விஷயமாகும். எவர்கள் மீது பொறுப்பு இருக்கிறதோ அவர்கள் அனைவரும் இதை தனக்கு முன்னால் நிறுத்த வேண்டும். சீர்திருத்தத்திற்கான வழிவகைகளின் முதல் பகுதி ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, எண்ணம் அளவிலான ஆற்றலின் உறுதித்தன்மை ஆகும். அல்லது வேறு சொற்களில் கூறுவதென்றால், ஈமான் ஆகும். அதை உருவாக்குவதற்காக நபிமார்கள் உலகில் வருகின்றனர். மேலும் அந்த நபிமார்கள் புத்தம் புதிய, உயிருள்ள அற்புதங்களைக் காட்டுகின்றனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நமது ஜமாஅத்திடம் அல்லாஹ்வின் புத்தம் புதிய அடையாளங்களின் எவ்வளவு பெரும் பகுதி இருக்கின்றதென்றால்,வழிவகைகள் இருக்கின்றனவென்றால் மற்றவர்கள் அவற்றிக்கு அருகில் கூட நிற்க முடியாது. இஸ்லாத்தைத் தவிர இறைவனுடைய புத்தம் புதிய சொற்கள், அவனுடைய உயிருள்ள அற்புதங்கள், அவனது இருப்பைக் காண வைக்கும் அடையாளங்கள் இருக்கின்ற எந்த மார்க்கமும் உலகில் இல்லை. அவை மனிதனுடைய உள்ளங்களை எல்லா வகையான அழுக்கு களிலிருந்தும் தூய்மையாக்குகின்றன. மேலும் அல்லாஹ்வின் ஞானத்தைப் பற்றி, கோப்பை நிரம்ப அருந்தக் கொடுத்திருக்கின்றன. ஆனால் இந்த ஈமான் இருந்தும், புத்தம் புதிய அற்புதங்கள் இருந்தும் நமது ஜமாஅத்தின் செயல்களில் ஏன் பலவீனம் இருக்கிறது?''

இது தொடர்பாக **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்** தமது கருத்தை இப்படி வெளிப்படுத்தி இருக்கிறார்கள்:

''இதற்குக் காரணம் நமது ஜமாஅத்தின் ஆலிம்கள், முரப்பிகள், அறிவுரை கூறுபவர்கள் இதைப் பரப்புவதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்தவில்லை.''

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 75, 76 ஆண்டுகளுக்கு முன்னுள்ள இந்தக் கருத்து இன்றும் பொருந்துகிறது. இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்து தூரம் சென்று கொண்டிருக்கிறோம். எனவே நாம் முழுமையான திட்டம் தீட்டி கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. எனவே அவர்களின் இந்தக் கூற்று இன்றும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். **முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஈசா (அலை) அவர்களின் மரணம் பற்றி அதிகமாக வாதம் செய்கிறோம். அல்லது ஆட்சேபணை செய்பவர்களின் ஆட்சேபணைகளுக்கு அந்த ஆட்சேபணை செய்பவர்களின் பெரியோர்களின் சான்றுகளிலிருந்தே எடுத்து பதில் கொடுத்து அவர்களின் வாயை அடைத்து விடுகிறோம். இந்த முயற்சி ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு சரியான போதனையை எடுத்துரைப்பதில் ஏற்படவில்லையே! அல்லது குறைந்த பட்சம் ஆலிம்களிடமிருந்து ஏற்படவில்லை. இதன் பொருள், நமது ஜமாஅத்தில் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தைப் பற்றி அறிபவர்கள் கிடைக்கின்றனர். அல்லது மவ்லவிகளின் ஆட்சேபணைகளுக்கு வாயை அடைக்கும் பதிலைக் கொடுப்பவர்கள்

இருக்கின்றனர்.''

இன்றும் நீங்கள் பாருங்கள். சில தொலைக்காட்சி சேனல்களில் அல்லது இணையதளத்தில் மவ்லவிகள் எடுத்து வைக்கும் ஆட்சேபணைகளுக்கு அருமையான பதிலை ஒரு சாதாரண அஹ்மதியும் கொடுத்து விடுகிறார். எனக்கும் சிலர் தொலைக்காட்சியை ஆதாரமாக வைத்து தாம் பேசியது பற்றிய தகவல்களைத் தருகின்றனர். தமது பதில்களையும் எழுதுகிறார்கள். மேலும் அவர்களின் பதில்களும் பெரும்பாலும் நல்லவையாகவும், அறிவுப்பூர்வமானவையாகவும் இருக்கின்றன.

''ஆக, இந்த வகையில் நாம் ஆயுதம் ஏந்தியவாறு இருக்கிறோம். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வை நமக்கு முன்னல் எப்படிப்பட்ட வகையில் எடுத்து வைத்திருக்கிறார்கள்? அவர்கள் இறைஞானத்தைப் பெறுவதற்கு என்ன வழியைக் கூறியிருக்கிறார்கள்? அவனுடைய நெருக்கத்தைப் பெறுவதைப் பற்றி எந்த சொற்களில் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்கள்? இறைவனின் புதிய வார்த்தைகள், அற்புதங்கள் இறையடையாளங்கள் அவர்கள் மீது எவ்வளவு மகத்தான முறையில் வெளிப்பட்டன? ஆகியவற்றை அறிந்தவர்கள் நம்மில் மிகக் குறைவாகக் காணப்படுவர். எனவே சில நேரத்தில், ஒருவர் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை ஏற்றுக் கொள்பவராகி விடுகிறார். அதற்கான சான்றையும் தருகிறார். பெற்றோரின் வாரிசாக அவருக்கு அஹ்மதிய்யத்தும் கிடைத்து விடுகிறது. ஒரு புறம் இவையெல்லாம் தெரிந்தும் கூட மறு புறம் (செயல் அளவிலன சீர்திருத்தம் தொடர்பான) இந்த விஷயங்கள் எல்லாம் தெரியாததன் காரணமாக ஈமானில் பலவீனம் ஏற்பட்டு விடுகிறது. ஈமானும் நிலைகுலைய ஆரம்பித்து விடுகிறது. மேலும் செயல் அளவிலான பலவீனமும் உருவாகி விடுகிறது.

எனவே ஈஸா (அலை) மரணம் பற்றிய விஷயத்தில் அவர் உறுதியாக இருக்கிறார். ஆனால் அந்த விஷயங்களை தெரிவதனால் அவருடைய செயல் அளவிலான சீர்திருத்தம் ஏற்பட முடியாது. எனவே இந்த வகையில் ஜமாஅத்தில் சில இடங்களில் பலவீனங்கள் காணப்படுகின்றன. எனவே ஜமாஅத்திற்கு முன்னால் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டிய ஆலிம்கள், முரப்பிகள், எல்லா அமீர்மார்கள், பொறுப்பாளர்கள் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டிய அளவுக்கு கவனம் செலுத்துவதில்லை.மேலும் ஜமாஅதின் ஒவ்வொரு நபரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கத்துடன் இணைவதற்கான முயற்சியை அதற்குரிய

முறையில் நிறைவேற்றவில்லை. அதுவரை எண்ணம் அளவிலான ஆற்றலின் பலவீனத்தின் காரணமாக செயல் அளவிலான சீர்திருத்தம் செய்ய முடியாத ஒரு பகுதியினர் அதிகமாக இருந்து கொண்டிருப்பர். நாம் இந்த விஷயத்தைப் புரிய வேண்டும். நம்மில் எத்தனை பேருக்கு அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது? ரமலானில் ஒரு மாதம் இல்லாவிட்டாலும் ஒரு முறை இஃதிகாஃப் அமர்ந்து பிறகு வருடம் முழுக்க அல்லது பல ஆண்டுகள் வரை அதை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதற்காக அல்லாமல் அல்லாஹ்வின் நெருக்கம் நிரந்தமாகக் கிடைப்பதற்காக அந்த ஆர்வத்தை ஈடுபாட்டை நிரந்தரமாக ஆக்கிக் கொள்பவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? நம்மில் எத்தனை பேரிடம் அல்லாஹ் அன்புடன் நடந்து கொண்டவாறு துஆ கபூலாவதற்கான அடையாளத்தைக் காட்டுகிறான்? என நாம் நம்மைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இந்த தகுதியைப் பெறுவது அல்லது பெற முயற்சி செய்வது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும்.

நமது ஆலிம்கள், நமது முரப்பிகள், நமது பொறுப்பாளர்கள் தத்தமது வட்டத்திற்குள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முன்னால் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக முயற்சி செய்வதைப் பற்றி அடிக்கடி கூறுவதில்லை. அல்லது கூற வேண்டிய அளவுக்கு கூறுவதில்லை. அல்லது அவர்களைப் பார்த்து, அவர்களின் பக்கம் கவனம் திரும்பும் அளவுக்கு முன்மாதிரி இருப்பதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி அவர்களின் சஹாபிகளைப் பற்றி அடிக்கடி எடுத்துக் கூறி அந்த சான்றோர்களுடன் அல்லாஹ்வின் உதவிகள், அடையாளங்கள் ஆகியவற்றிற்கான சம்பவங்கள் அழுத்தமாக எடுத்துரைக்கப்படுவதில்லை. அல்லாஹ் தனது பண்புகளை குறிப்பிட்ட சில நேரங்களுக்காக அல்லது குறிப்பிட்ட சில நபர்களுக்காக வைக்கவில்லை; மாறாக, அல்லாஹ் இன்றும் தனது பண்புகளை வெளிப்படுத்துகிறான் என்ற நம்பிக்கையை ஊட்டுவதில்லை. இந்த விஷயங்கள் அடிக்கடி கூறப்பட்டால் இந்தத் தொடர்பை உருவாக்கும் வழிமுறை கூறப்பட்டால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகளைப் பற்றி எடுத்துக் கூறினால் பிறகு துஆ கபூல் ஆவதற்கான தத்துவமும் புரிந்து விடுகிறது. மேலும் இறையடையாளங்களும் வெளிப்படுகின்றன.

இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

உண்மையான தொண்டருடன் இணைந்து அல்லாஹ்வுடன் நெருக்கத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் என்ற விஷயத்தை பொதுவாக எடுத்துக் கூற வேண்டிய தேவை இருக்கிறது. இறையடையாளங்கள் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அல்லது அவர்களின் காலத்துடன் எல்லைக்குட்பட்டதாகவோ அல்லது அதற்கு மட்டும் உரியதாகவோ இருக்கவில்லை. மாறாக, அல்லாஹ் இப்போதும் எல்லா வல்லமைகளுடனும் தனது தோற்றத்தைக் காட்டுகிறான். எனவே நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கான துடிப்பு, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான துடிப்பு நமது ஜமாஅத்தில் பொதுவானதாகி விட்டால் பாவத்தை கணிசமான அளவுக்கு அழித்து விடும் பெரும் குழுவினர் உருவாகி விடுவர். **பாவத்தை முழுமையான முறையில் அழிப்பது கடினமானதாகும். அதற்கான வாதம் செய்ய முடியாது. ஆனால் பெருமளவுக்கு பாவத்தின் மீது வெற்றி கொள்ளலாம்.** அல்லது ஜமாஅத்தின் பெரும்பாலானவர்கள் பாவத்தின் மீது வெற்றி கொள்பவர்களாக இருப்பார்கள்.

எனவே இதற்காக முரப்பிகள், அமீர்மார்கள், பொறுப்பாளர்கள் தத்தமது வட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ், அவர்களைப் பின்பற்றுபவர்கள் இறைநெருக்கத்தைப் பெறுவார்கள்; மேலும் அப்படிப்பட்டவர்களின் அதிகமான துஆக்களை அல்லாஹ் கேட்பான் எனக் கூறியிருக்கிறான். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு எழுதவும் செய்கிறார்கள். அவர்களைப் பற்றிய சில சம்பவங்கள் சில நேரங்களில் எடுத்துக் கூறப்படுகின்றன. நான் எடுத்துக் கூறுகிறேன். எனவே அப்படிப்பட்ட சம்பவங்கள் பின்பற்ற வேண்டும் என்பதற்காக எடுத்துரைக்கப்படுகின்றன. அவற்றைக் கேட்டு அவற்றைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்க முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''உலகத்திலுள்ள எந்த சமுதாயமும் பதிலளிக்கக் கூடிய, துஆக்களைக் கேட்கக் கூடிய இறைவனை ஒப்புக் கொள்ளவில்லை. **நான் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அவர் எனது துஆவைக் கேட்கிறார்; பதில் கூறுகிறார் என எந்த கிறித்தவராவது கூற முடியுமா? ஒருபோதும் முடியாது.** பேசக் கூடிய இறைவன் ஒரே இறைவன்தான்; அது இஸ்லாத்தின் இறைவன் ஆவான். அதை

திருக்குர்ஆன் எடுத்து வைத்துள்ளது. அவன், ***உத்ஊனீ அஸ்தஜிப் லக்கும்*** நீங்கள் என்னை அழையுங்கள்; நான் உங்களுக்கு செவிகொடுப்பேன் எனக் கூறினான். ***(திருக்குர்ஆன் 40:61)*** ''

ஆக, இந்த விஷயங்கள் அடிக்கடி ஜமாஅத்திற்கு முன்னால் எடுத்துக் கூறப்பட்டால் நிச்சயமாக அதில் ஆற்றல் உருவாகலாம். அல்லது ஜமாஅத்தின் ஒரு பெரும் பகுதியினரிடம் இந்த ஆற்றல் உருவாகலாம். மேலும் ஆயிரம் பாவங்களின் மீது வெற்றி கொள்ளும் அளவுக்கு எண்ணம் அளவிலான ஆற்றல் உறுதி மிக்கதாகி விடலாம். மேலும் அவற்றிலிருந்து நிரந்தரமாக பாதுகாப்பாக இருக்கலாம். ஒருபோதும் தடுமாற்றம் அடையாத அளவிலான ஒரு தொடர்பு அல்லாஹ்வுடன் உருவாக வேண்டும். மனித குலத்தை பாவங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதும், இறைவனுடைய திருப்தி எல்லாவற்றையும் விட முன்னுரிமை பெற்றதாக இருக்க வேண்டும் என்பதுமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கமாக இருந்தது. இறைவணக்கத்திலிருந்து தப்பிப்பதற்கான சாக்குப்போக்குகளைத் தேடுவதற்கு பதிலாக அல்லது கடமை என நினைத்து சீக்கிரம் நிறைவேற்றுவதற்கு பதிலாக தலையில் ஒரு சுமை இருக்கிறது; அதை இறக்க வேண்டும் என்பது போல இறக்குவதற்கு பதிலாக ஓர் ஆர்வம் உருவாக வேண்டும்.

எனவே ஒவ்வொரு மனிதனும் தத்தமது வட்டத்திற்குள் வேலையை ஆரம்பித்தால், ஒரு தெளிவான மாற்றம் தென்பட முடியும். இந்தக் காலத்தில் அறிவு என்ற பெயரில் பல்வேறு தீமைகள் பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. நமது அமைப்பு அதிகமாக முந்தியவாறு சிறுவர்களுக்கு, இளைஞர்களுக்கு உண்மையைப் பற்றி எடுத்துக் கூற வேண்டிய தேவை இருக்கிறது. **பெற்றோர் தமது நிலைமைகளின் பக்கம் கவனம் செலுத்தியவாறு, குழந்தைகளுக்கு அறிவு பற்றிய விழிப்புணர்வு என்ற பெயரில் பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கப்படும் அந்த அறிவு பற்றிய நஷ்டங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பெற்றோருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.** அப்போதுதான் அவர்கள் தங்களையும் காப்பாற்ற முடியும். பிள்ளைகளையும் காப்பாற்ற முடியும். இங்கு சின்ன வயதிலேயே குழந்தைகளுக்கு தேவையில்லாத சில விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதற்கு சான்றாக **நல்லது எது? கெட்டது எது எனத் தெரிய வேண்டும். அதற்காகத்தான் எனக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் நல்லது கெட்டது என்ற எந்த வித்தியாசமும் இருப்பதில்லை.** மாறாக, பெரும்பாலான

குழந்தைகளின் மூளை சிறுபருவத்திலிருந்தே தவறான சிந்தனை கொண்டதாக ஆகி விடுகிறது. ஏனெனில் அவர்களுக்கு முன்னால் அவர்களுடைய தாய் தந்தையரின் முன்மாதிரியில் அல்லது சுற்றுப்புறச் சூழலின் முன்மாதிரியில் தீமைகள் அதிகமானவையாகவும், நன்மைகள் குறைவானவையாகவும் இருக்கின்றன.

எனவே முரப்பிகள், பொறுப்பாளர்கள், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்தமான முயற்சி செய்ய வேண்டியது வரும். தவறான அறிவுக்கு பதிலாக சரியான அறிவு பற்றி தெரியப்படுத்தும் ஏற்பாடு செய்ய வேண்டும். பள்ளிக்கூடங்களின் முறையை நாம் தடுக்க முடியாது; அங்கு நாம் குறுக்கிட முடியாது. ஆனால் அசுத்தம், வெட்கங்கெட்ட நிலை ஆகியவற்றின் வித்தியாசத்தைப் பற்றி எடுத்துக் கூறி குழந்தைகளின் மீது நல்ல நம்பிக்கை வைத்து நமது முன்மாதிரியைக் காட்டி சுற்றுப்புறச் சூழ்நிலையின் தாக்கத்திலிருந்து காப்பாற்ற முடியும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அழகிய முறையில் நமது கடமைகளை நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ✸

## (8)

# குத்பா சுருக்கம் 31 ஜனவரி 2014

## செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு நான்கு ஆதரவுகள் தேவை

**1 ஈமான 2 செயல் 3 கண்காணித்தல் 4கட்டுப்படுத்தி வைத்தல்**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற குத்பாவில் எண்ணம் அளவிலான ஆற்றலை உருவாக்குவது மற்றும் அறிவு அளவிலான பலவீனத்தை நீக்குவது பற்றி கூறப்பட்டது. ஆனால் இது தொடர்பாக மூன்றாவது விஷயமாகிய செயல் அளவிலான பலவீனத்தை நீக்குவதற்கான வழிமுறை என்ன? அல்லது செயல் அளவிலான ஆற்றலை எப்படி அதிகமாக்க முடியும்? என்பது பற்றிக் கூறப்படவில்லை. இது தொடர்பாக இன்று நான் கொஞ்சம் கூறுவேன். சென்ற குத்பாக்களில் குறிப்பிட்டது போன்று, அதற்கு வெளிப்புறத்திலுள்ள சிகிச்சை அல்லது உதவி தேவைப்படுகிறது. அல்லது மற்றவர்களின் ஆதரவு தேவைப்படுகிறது எனக் கூறலாம். மேலும் செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு இந்த ஆதரவு இருவகைப்படும். அல்லது இரண்டு விதமான ஆதரவுகள் தேவைப்படுகின்றன. **ஒன்று, கண்காணித்தல்;** இன்னொன்று கட்டுப்படுத்தி வைத்தல். கண்காணித்தல் என்றால், எங்கேயும் எந்தத் தீய செயலையும் செய்து விடக் கூடாது என நிரந்தரமாக கண்காணித்து வருவதாகும். இந்த மாதிரியான கண்காணித்தல் உலக விவகாரங்களிலும் இருக்கின்றது. வீடுகளில் பெற்றோர் பிள்ளைகளை கண்காணிக்கின்றனர். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பாடம் புகட்டும் விஷயத்தில் கண்காணித்து வருகின்றனர். சில நேரத்தில் அரசாங்கத்தின் பணியாளர்கள் கண்காணித்து வருகின்றனர். மேலும் நாங்கள் கண்காணிப்போம் என அறிவிக்கவும் செய்கின்றனர். கண்காணிப்பு நடந்து கொண்டிருக்கிறது என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்படுகிறது. ஆக, இவையெல்லாம் கண்காணிப்பிற்கான ஒரு செயலாகும்.

எப்படியிருந்தாலும் இந்த எல்லா கண்காணிப்பின் நோக்கம், எவற்றின் காரணமாக குழப்பம் ஏற்பட முடியுமோ அவற்றைத் தடுப்பது ஆகும். சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். எப்படி இருந்தாலும் சமூகத்தில் எல்லா சட்டங்களிலும் கண்காணிப்பு என்பது சீர்திருத்தத்திற்கான ஒரு வழிவகையாகும். மேலும் இந்தக்

கண்காணிப்பு செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு அவசியமானதாகும். மேலும் சமூகம் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்றும், பெற்றோர்கள் தன்னைக் கண்கணித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் மனிதன் உணரும்போது அதன் காரணமாக அவன் பல தவறான செயல்களிலிருந்து தப்பிக்கின்றான். **முரப்பிகள் இந்த கண்காணிப்பை செய்வது அவர்களுடைய வட்டத்திலுள்ள பணியாகும். மற்ற அமைப்புகளும் தத்தமது வட்டத்தில் கண்காணிப்பாளர்களாக மாற வேண்டியது அவசியமாகும்.** ஒவ்வொரு கண்காணிப்பாளரும் தனது கண்காணிப்பு பற்றி கேள்வி கேட்கப்படுவார் என்ற இஸ்லாமிய போதனையும் முன்னால் இருந்தால், கண்காணிக்கப்படுபவர்களுக்கு சீர்திருத்தம் ஏற்பட்டுக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், கண்காணிப்பவர்களுக்கும் சீர்திருத்தம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆக, எந்நிலையிலும் செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு கண்காணிப்பும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வழியாகும்.

**சீர்திருத்தத்திற்கு அவசியமான இரண்டாவது விஷயம் கட்டாயமாகும்.** மார்க்க விஷயத்தில் கட்டாயமில்லையே. பிறகு செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு சிகிச்சையாக கட்டாயம் எனத் தீர்மானிக்கப்படுகிறதே என எவருக்காவது கேள்வி எழலாம். எனவே இந்தக் கட்டாயம் என்பது மார்க்கத்தை ஏற்றுக் கொள்வது அல்லது விட்டு விடுவது என்பது தொடர்பாக இல்லை. ஒருவர் எந்த மார்க்கத்தை விரும்புகிறாரோ ஏற்றுக் கொள்ளலாம்; எந்த மார்க்கத்தை வெறுக்கிறாரோ வெறுக்கலாம். அனைவருக்கும் அதில் சுதந்திரம் இருக்கிறது.

இங்கு கட்டாயம் என்பதன் கருத்து, மார்க்கத்துடன் தொடர்புடையவராக இருந்து கொண்டு பிறகு அதன் விதிமுறைகளின்படி நடக்காதிருத்தல்; அதை முறித்தல் என்பதாகும். **ஒருபக்கம் தன்னை ஜமாஅத்தின் அமைப்பைச் சேர்ந்தவராகக் கூறுவது; மறுபக்கம் ஜமாஅத்தின் சட்டங்களை மீறுவது. இவ்வாறு செய்தால் பிறகு எந்நிலையிலும் கடுமை காட்டப்படும்.** இங்கு கட்டாயம் என்பதன் கருத்து இதுதான். ஜமாஅத் அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்றால் பிறகு ஜமாஅத்தின் போதனைகளின்படி செயல்படவும் வேண்டியது வரும். இல்லையென்றால் தண்டனை கிடைக்கலாம். அபராதமும் விதிக்கப்படலாம். சில வகையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். இந்த அனைத்து விஷயங்களின் நோக்கம் செயல் அளவிலான ஆற்றலின் பலவீனத்தை நீக்கும் வகையில் சீர்திருத்தம்

செய்வதேயாகும். **ஜமாஅத்திலும் ஜமாஅத் அமைப்பு தண்டனை வழங்குகிறது என்றால் அதன் உண்மையான நோக்கம் செயல் அளவிலான சீர்திருத்தமேயாகும்.** ஒருவரை அவமானப்படுத்துவதோ அல்லது தேவையில்லாமல் துன்பத்தில் ஆழ்த்துவதோ நோக்கமல்ல.

இந்த கட்டாயம் என்பது அரசாங்கத்தின் சட்டத்திலும் நடைமுறையில் இருக்கிறது. தண்டனையும் வழங்கப்படுகிறது. சிறைச்சாலையிலும் அடைக்கப்படுகின்றனர். அபராதமும் விதிக்கப்படுகிறது. சில நேரத்தில் அடிக்கப்படவும் செய்கின்றனர். ஆக, இதன் நோக்கமெல்லாம் சமூகத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதும் நஷ்டமிழைப்பவர்கள் அந்த வேலையைச் செய்யாதிருக்க வேண்டும் என்பதும்தான். இன்னும் கூறுவதென்றால், சில நேரத்தில் ஒருவர் தனக்கே இழைக்கும் நஷ்டத்திற்காகக் கூட தண்டனை கிடைக்கிறது. ஆனால் அந்தத் தண்டனையின்போது சந்தர்ப்பங்களில் சீர்திருத்தம் செய்வதற்கான பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு கொலைகாரருக்கும் தூக்குத் தண்டனை ஏன் கொடுக்கப்படுகிறதென்றால் அவர் ஒருவரின் உயிரை எடுத்து விட்டார். கொலையாளிகளுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டால் பிறகு சமூகத்தில் அமைதி சீர்குலைந்து போய்விடும்; பல கொலையாளிகள் உருவாகி விடுவார்கள். எனவே கொலைக்கான தண்டனை கொலை என்று நிர்ணயிப்பதால் அப்படிப்பட்ட பலருக்கு அதிலிருந்து சீர்திருத்தம் கிடைத்து விடுகிறது. அல்லது கொலை செய்யும் எண்ணம் கொண்டவர்கள், அதிக ஆவேசம் கொண்டவர்கள் அதிலிருந்து விலகி விடுகிறார்கள்.

ஆக, **இந்த பலவந்தம் என்பது உலகத்திலும் நடைமுறையில் இருக்கும் சீர்திருத்தத்திற்கான ஓர் அம்சமாகும்.** உலகவாதிகளின் கட்டாயத்திற்கு அல்லது உலகத்தில் தண்டனை கொடுக்கும் விஷயத்திலுள்ள கட்டாயத்திற்கு ஈமானுடன் எந்தத் தொடர்புமில்லை. ஆனால் ஒரு மார்க்கத்தை சேர்ந்தவர் மீது கட்டாயம் செய்யும்போது மார்க்க அமைப்பின்படி அவருக்கு தண்டனை வழங்கும்போது அல்லது எந்தவிதமான தண்டனையாக இருந்தாலும், அல்லது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. ஜமாஅத்தில் சந்தா வாங்க வேண்டாம் என கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அப்போது சந்தேகமின்றி வலுக்கட்டாயமாக அவர்கள் அதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். ஆனால் அத்துடன் தண்டனையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக, கலீஃபாவின் கோபத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக அல்லது அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக நல்ல செயல்கள் எனும் சாலிஹான அமல்களின் பக்கம்

அவர்களுக்கு கவனமூட்டப்படுகிறதென்றால், அப்போது படிப்படியாக உள்ளத்தில் ஈமான் உருவாக ஆரம்பித்து விடுகிறது. பிறகு அது அதிகரிக்க ஆரம்பித்து விடுகிறது. மேலும் அப்படிப்பட்ட மக்கள் பிறகு மகிழ்ச்சியுடன் நல்ல செயல்களை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். எனவே நல்ல செயல்களை செய்யும் பழக்கத்தை உருவாக்குவதற்கு பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அந்த வழிமுறைகளை பயன்படுத்தாமல் வெற்றி கிடைக்க முடியாது. எனவே அந்த வழிமுறைகளை பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

எனவே இந்த நான்கு வழிமுறைகளை ஜமாஅத்தின் சீர்திருத்தத்திற்காகவும் மேற்கொள்வது அவசியமாகும். ஒவ்வொருவருடைய நோயிற்கு அவருடைய நோயின் வகைக்கேற்ப சிகிச்சை செய்வது அவசியமாகும். மேலும் மார்க்கத்திடம் அரசோ அல்லது வாளோ இல்லாத அந்த காலத்தில் இந்த நான்கு சிகிச்சையும் அவசியமாக இருக்கின்றன.

**முதல் சிகிச்சையாக,** தர்பிய்யத் செய்து ஈமானில் உறுதித்தன்மையைஉருவாக்குவது அவசியமானதாகும். மேலும் அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளங்கள், அவர்களுக்கு வந்த வஹி, அவர்களுக்கு அல்லாஹ்வுடன் இருந்த தொடர்பு, அவர்களை ஏற்றுக் கொள்பவர்களிடம் ஏற்பட்ட ஆன்மீகப் புரட்சி ஆகியவற்றை எடுத்துக் கூற வேண்டும். இது தொடர்ந்து அடிக்கடி செய்து கொண்டிருக்க வேண்டும். இறையன்பு மனிதனுக்கு எப்படிக் கிடைக்க முடியும்? ஒரு மனிதனுடன் இறைவனுக்கு அன்பு உருவாகி விடும்போது அவன் எப்படி மனிதனுடன் வித்தியாசமாக நடந்து கொள்கிறான்? இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு எப்படி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்? என்பதைப் பற்றிக் கூற வேண்டிய தேவை இருக்கிறது.

**பல்வேறு சமுதாயங்களிலிருந்து அஹ்மதியாகின்ற புது அஹ்மதிகள் ஆப்பிரிக்காவிலிருந்து, அதிகமாக அரேபியர்களிலிருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய நூல்களைப் படித்த பிறகு அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களைப் பற்றியும் அவர்களின் ஈமான் எப்படி அதிகமானது என்பது பற்றியும் சம்பவங்களை எழுதுகின்றனர்.** சந்தேகமின்றி அவர்களின் கொள்கை அளவிலான தவறுகளும் நீங்கின. மேலும் கொள்கையளவில் அவர்களின் அறிவு அதிகமாகி அவர்களுக்கு ஈமானின் புதிய வழிகள் தென்பட்டன. ஆயினும் அவர்களிடம்

ஈமானின் உறுதித்தன்மை என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளங்களைப் பார்த்தல், அவர்களுடைய வஹியின் உண்மைத்தன்மையை புரிதல், அல்லாஹ்வுடன் அவர்களுக்குள்ள தொடர்பின் காரணமாக அவர்களிடம் ஏற்பட்டது. பிறகு அல்லாஹ் அந்த மக்களுக்கும் சில அடையாளங்களைக் காட்டி தனது நெருக்கத்திற்கான காட்சியைக் காண வைத்து விட்டான்.

உள்ளங்களிலும் ஈமானின் ஒளிக்கதிரை உருவாக்கக் கூடிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளம், வஹி, இல்ஹாம், அல்லாஹ்வுடனுள்ள தொடர்பு ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் **முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது கோணத்தில் விளக்கிக் கூறியவாறு இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:**

**ஈஸா உயிருடன் வானத்தில் அமர்ந்திருந்தாலும், அவர் வானத்தில் உயிருடன் அமர்ந்திருப்பது கூட நமது உள்ளத்தில் இறைவன் மரணித்திருப்பது நஷ்டமிழைக்கும் அளவுக்கு நஷ்டமிழைக்கக் கூடியது அல்ல.** நீங்கள் இறைவனை மக்களுடைய உள்ளத்தில் மரணிக்கச் செய்யும்போது அவனை உயிரூட்ட முயற்சி செய்யாதிருக்கும்போது ஈஸா (அலை) அவர்களின் மரணம் பற்றி இவ்வளவு வலுவாக நீங்கள் எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? இறைவன் ஹய்யுல் கய்யூம் ஆவான்; அவன் ஒருபோதும் மரணிக்கவில்லை. ஆனால் சில மனிதர்களைப் பொருத்தவரை அவன் மரணித்தும் விடுகிறான். எனவே அவனை மறந்து விடும்போது அந்த வகையில் அவன் மரணித்து விடுகிறான்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், நமது ஆலிம்கள் ஈஸா (அலை) அவர்களை மரணிக்கச் செய்ய முயற்சி செகின்றனர். ஆனால் அத்துடன் அல்லாஹ்வை உயிரூட்டுவதற்கு முயற்சி செய்வதில்லை. எந்த ஆன்மாவின் மூலமாக அல்லாஹ்வைப் பற்றிய அறிவு ஞானம் கிடைக்க முடியுமோ அதை உருவாக்குவதில்லை. நமது உண்மையான முயற்சியெல்லாம் இறைவனை உயிரூட்டுவதற்காகவும், அவனுடன் அதிகமாக தொடர்பை உருவாக்குவதற்காகவும் இருக்க வேண்டும். **நமக்கு இறைவனுடன் உண்மையான தொடர்பு இருக்கிறதென்றால், ஈஸா (அலை) அவர்களை உயிருடன் இருப்பதாகக் கருதுபவர்கள் எவ்வளவுதான் கூக்குரலிட்டாலும் நமது ஈமானில் ஒருபோதும் சீர்குலைவு ஏற்படாது.** ஏனெனில் இறைவன் ஒவ்வோர் அடியிலும் நம்மைக் காப்பாற்றுபவனாக இருப்பான்.

எனவே சந்தேகமின்றி, கொள்கையுடன் தொடர்புடைய ஈசாவின்

மரணம், கத்மே நுபுவ்வத் அல்லது மற்ற என்ன விவகாரங்கள் இருக்கின்றனவோ அவற்றைப் பற்றி தெரிந்திருப்பது மிக அவசியமானதாகும். அவற்றிற்கும் சான்றுகள் இருக்கின்றன; மாறாக, சான்றுகளின் அடிப்படையில் நிலைபெற்றிருப்பது அவசியமானதாகும். ஆனால் செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு நாம் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டியது வரும். மேலும் அதற்கென்று இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காட்டித் தந்திருக்கின்ற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியது வரும். நாம் நமது சொல்லிலும் செயலிலும் உள்ள முரண்பாட்டை நீக்க வேண்டியது வரும். மற்றவர்களுக்கு நாம் என்ன கூறுகிறோமோ அதன்படி நாமும் எந்த அளவுக்கு செயல்படுகிறோம் எனவும் ஆய்வு செய்யுங்கள்.

எனக்கு காதியானிலிருந்து ஓர்ஆலிம் எழுதினார்: இந்தியாவில் எதிரிகளுக்கு பதில் கூறுவதற்காக ஆரம்பத்தில் நடைபெற்று வந்த கூட்டங்கள் தற்போது நடைபெறுவதில்லை. நாங்கள் அந்தக் கூட்டங்களில் நமது எதிரிகளுக்கு வாயை அடைக்கும் வகையில் ஒன்றுக்கு அடுத்த படியாக இன்னோர் ஆதாரத்தை எடுத்து வைத்துக் கொண்டிருந்தோம்.

செய்து வந்தது நல்ல விஷயம்தான். எதிரிகளுக்கு பதில் கொடுக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், அந்த விஷயங்களுக்கான மறுப்பே சான்றுகளுடன் அவர்களின் மீது எறிய வேண்டும். ஆனால் அதைவிட மிக முக்கியமானதும் அவசியமானதும் என்னவென்றால், நமது முஅல்லிமீன், முபல்லிகீன், மற்றும் முரப்பியான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் நோக்கத்தைப் புரிந்தவாறு தமது ஆன்மீக நிலையிலும் ஒவ்வொருவரும் ஓர் அடையாளமாக இருக்கும் வகையில் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும்.மேலும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். மேலும் இந்த முன்மாதிரியைப் பார்த்தே மக்கள் ஜமாஅத்தில் இணைய வேண்டும். **ஆனால் இந்தத் தகுதி உருவாகவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியதிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவில் பல முஅல்லிம்களை வேலை நீக்கம் செய்யப்பட வேண்டியது வந்தது.** சிலர் மீது உலகாதாயம் மேலோங்கி விட்டதாகத் தெரிகிறது. எனவே இந்தக் கடிதம் எழுதுபவரும், நாமும் நமது பொறுப்புகள் என்ன? என ஆய்வு செய்ய வேண்டும். முஅல்லிம்களும், முபல்லிகுகளும் உள்ளங்களில் ஈமானை உருவாக்குவதற்கு எவ்வளவு முயற்சி செய்தனர் எனப் பார்க்க வேண்டும். வெறும் சான்றுகளால் மட்டும்

மக்களின் உள்ளங்களில் தாக்கத்தை உருவாக்குவதையும், அஹ்மதியல்லாத மவ்லவிகளிடம் பதற்றத்தை உருவாக்குவதையும் மட்டுமே நாம் போதுமானதாகக் கொள்ளக் கூடாது; அதிலேயே நாம் மகிழ்ச்சியடைந்து விடக் கூடாது. மாறாக, நம்மிடம் இருக்கின்ற இறைவனுடைய உயிருள்ள அடையாளங்கள், அற்புதங்கள் ஆகியவற்றால் இறையிருப்பை உலகிற்குக் காட்டுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இருக்கும் அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சியின் மூலமாக மக்களின் உள்ளங்களை ஒப்புக்கொள்ள வையுங்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓர் உதாரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.** சூரியன் உதித்திருக்கிறது. ஆனால் ஒருவர் உங்களிடம் சூரியன் உதித்திருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது எனக் கேட்டால், அதற்கு மற்றவர், சூரியன் உதிக்கும் நேரம் இதுவாகும். இந்த நேரம் மறைகிறது. அறிவியல் இதைத்தான் கூறுகிறது என சான்றுகளை எடுத்துக் கூறத் தொடங்குவது போன்றதாகும். எனவே சான்றுகளைக் கூறக்கூடியவர் அறிவீனர் ஆவார். அதற்கான சாதாரணமான சிகிச்சை, சூரியன் உதித்திருக்கிறது என்பதற்கு என்ன சான்று எனக் கேட்பவரின் நாடியைப் பிடித்து உயர்த்தி, இதோ பார். சூரியன் இருக்கிறது எனக் கூறுவதேயாகும். சான்றுகளைக் கூற வேண்டிய தேவையில்லை. இப்போது சூரியன் உதித்திருக்கிறது என்பதுதான் உனது முட்டாள்தனமான கூற்றுக்கு பதிலாகும் எனக் கூற வேண்டும்.

எனவே அறிவுரை கூறுபவர்களின் கடமை என்னவென்றால், சூரியன் இருக்கிறது என்பதற்கான சான்றுகளை வழங்கும் அறிவிலிகளாக மாறுவதற்கு பதிலாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக வெளிப்படுகின்ற புத்தம் புதிய அடையாளங்கள், எல்லா நேரமும் நம்முடன் இருக்கின்ற அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சி ஆகியவற்றின் மூலமாக இந்த உண்மையை நிரூபிப்பதாகும். ஆனால் நமது நிலைமைகளையும் இறைவனின் திருப்திக்கேற்ப உருவாக்க வேண்டும் என்பதுதான் விஷயமாகும். ஜமாஅத்தின் செயல் அளவிலான ஆற்றலை உறுதியாக்க வேண்டும். ஜமாஅத்தின் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் ஆகியவர்களுக்கு முன்னால் இந்த விஷயங்களை எடுத்து வைக்க வேண்டும். நான் கூறியது போன்று, அடிக்கடி எடுத்துக் கூறுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக எவ்வாறு அல்லாஹ்வின் கம்பீரம் வெளிப்பட்டது? என்பதை எடுத்துரையுங்கள். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு என்ன

வழிமுறைகள் இருக்கின்றன? அல்லாஹ்வின் அன்பு எவ்வாறு கிடைக்க முடியும்? என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். அப்போது எந்த இளைஞர்கள் உலக விவகாரங்களின் பக்கம் சாய்ந்திருக்கின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் குனிபவர்களாகி விடுவார்கள். பிறகு, சில முரப்பிகள் அல்லது ஆலிம்கள் ஜமாஅத் அல்லாத மவ்லவிகளை விரட்டியடிப்பவர்களாக மட்டும் இருக்க மட்டார்கள். மாறாக, இந்த முன்மாதிரிகளை நமது ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் நிலைநாட்டுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் உலகத்தை தன் பக்கம் ஈர்ப்பவர்களாக இருப்பார்கள். எனவே முதலில் உங்கள் செயல் அளவிலான நிலைமைகளை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இணைத்து, பிறகு கிலாஃபத்துடன் முழுமையாக கட்டுப்படுவது அதிகமாக தேவை இருக்கிறது. இதுவே ஜமாஅத்தில் உறுதித்தன்மைக்கும், ஆன்மீகத்தில் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமையும். கிலாஃபத்தைப் பற்றி புரியும்தன்மையும் அது பற்றிய சரியான ஞானமும் அறிவும் எந்த அளவுக்கு ஜமாஅத்தில் உருவாக வேண்டுமென்றால், **காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு தீர்ப்பையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். உள்ளத்தில் எந்த விதமான தடையும் உருவாகக் கூடாது. எந்த விஷயத்தைக் கேட்டும் மன இறுக்கம் ஏற்படக் கூடாது.**

**கிலாஃபத்தைப் பற்றிய சரியான அறிவையும், ஞானத்தையும் உருவாக்குவது முரப்பிகளின் பணிகளில் முக்கியமான பணியாகும். பிறகு பொறுப்பாளர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவர்களின் பணியாகும்.** சில உதாரணங்கள் இப்படியும் சில நேரத்தில் வருகின்றன. காலத்தின் கலீஃபா அவர்கள் இந்த தவறான செயலைச் செய்து விட்டார். தவறான தீர்ப்பு வழங்கி விட்டார். அல்லது இந்தத் தீர்ப்பு இப்படி இருக்க வேண்டும். கஸாவின் சில தீர்ப்புகளின் மீது ஆட்சேபணை நடந்து கொண்டிருக்கிறது. அல்லது இவரை இன்ன வேலைக்காக ஏன் நியமிக்கப்பட்டிருக்கிறது? அந்த இடத்தில் இவர் இருந்திருக்க வேண்டும். காலத்தின் கலீஃபாவுக்கு இவரைப் பற்றி பல விஷயங்கள் தெரியும். அவரை பற்றி கலீஃபா அவர்கள் அறிவார்கள். இன்ன நபரைப் பற்றி அறிந்தும் அவர் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்.

ஆக, இவ்வாறான விஷயங்களைப் பேசுபவர்கள் ஒரு சிலர்தான். ஆனால் அவர்கள் சுற்றுப்புறத்தை நாசமாக்கி விடுகிறார்கள். முரப்பிகள்,

பொறுப்பாளர்கள், எல்லா மட்டத்திலுள்ள பொறுப்பாளர்கள் முன்னரும் நான் கூறியிருக்கிறேன். ஒவ்வொரு கிளைஅமைப்பின் பொறுப்பாளர்களும், ஜமாஅத் அளவிலான பொறுப்பாளர்களும் தமது பொறுப்புகளைப் புரியுங்கள். சில உள்ளங்களில் சந்தேகங்கள், ஐயங்கள் இருக்கின்றன. சில நேரத்தில் உருவாகாவிட்டாலும் முரப்பிகள் எல்லா அருள்களும் ஜமாஅத் அமைப்பில் இருக்கின்றன என அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் மீது சாபத்தை ஏற்படுத்த விரும்பும்போது அமைப்பை எடுத்து விடுகிறான். எனவே இந்த விஷயம் எல்லாருக்கும் தெரிந்து விட்டால் தடுமாற்றமடைகின்ற சிலர் தடுமாற்றம் அடைவதிலிருந்து தப்பித்து விடுவர். மேலும் அப்படிப்பட்டவர்கள் கொஞ்ச பேராக இருந்தாலும் எப்போதும் இருக்கின்றனர். அவர்கள் தன்னை எல்லாம் தெரிந்தவர்களாகவும் நினைக்கின்றனர். அவர்கள் இங்கு மங்கும் உட்கார்ந்துகொண்டு கலீஃபா இறைவன் ஒன்றும் இல்லையே! பொதுவான மனிதன் தவறிழைப்பது போன்று அவரும் தவறிழைக்கலாம். (ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:) சரிதான். ஆனால் **ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதற்கு மிக அருமையான பதிலைக் கூறியிருக்கிறார்கள்.**

கிலாஃபத் உண்மை என்றால் எல்லா நேரத்திலும் எல்லா காலத்திலும் உண்மையானதாகும். கிலாஃபத்தைப் பற்றி, இந்த அருள் அல்லாஹ்விடமிருந்து தரப்பட்டிருக்கிறது என்ற ஈமான் இருக்குமென்றால், கலீஃபாக்கள் எந்த விஷயங்களைப் பற்றி முடிவெடுக்கிறார்களோ நாம் அந்த விஷயங்களை நிலைநாட்டி விடுகிறோம் என்று இறைவன் கூறுகிறான். ***வலயுமக்கினன்ன லஹும் தீனஹுமுல்லதிர்தழா லஹும்*** அதாவது கலீஃபா உலகில் நிலைநாட்ட விரும்பும் மார்க்கத்தை, கொள்கையை நாம் உலகில் நிலைநாட்டியே தீருவோம் என நாம் எம் மீதே ஆணையிட்டுக் கூறுகிறோம்.

எனவே இந்த விஷயங்கள் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரின் உள்ளத்தில் குடிகொள்ள வேண்டும். மேலும் இது முரப்பிகள், அறிவுள்ளவர்களின் பணியாகும். அவர்கள் இதை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உருவாக்க வேண்டும். எனவே இந்தப் பொறுப்பைப் புரியுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருள்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதில் குறியாக இருங்கள். இறைவனுடைய உயிருள்ள அடையாளங்களை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுங்கள். இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள் என்ன? மேலும் காலத்தின் கலீஃபாவுக்கு எந்நிலையிலும் கட்டுப்படுவது மற்றும் அமைப்புக்கு கீழ்ப்படிவதன் முக்கியத்துவம்

என்ன என்பதைப் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

எனவே இது இருக்கும்போது உள்ளங்களின் தீய எண்ணங்களும் நீங்கும். மேலும் இந்த வழிமுறையினால் தீய எண்ணங்களை நீக்குகின்றவர்களின் எண்ணிக்கையும் நீங்கும். ஒவ்வொரு குழப்பமும் தானாகவே அழிந்து விடும் அளவுக்கு அந்த எண்ணிக்கை அதிகமாகி விடும். ஜமாஅத்தில் எல்லா வகையிலும் செயல் அளவிலான சீர்திருத்தத்தின் ஒவ்வோர் அம்சமும் தென்படத் தொடங்கும். மேலும் இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் பெரிய நோக்கமாகும். **நமக்கு கத்மே நுபுவ்வத் மற்றும் ஈசா மரணம் பற்றிய சான்றுகளை அறிந்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது. இது எதிரிகளுக்கு பதில் கொடுப்பதற்குத் தேவை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஆனால் செயல் மற்றும் இறைஞானத்தையும் நமது ஜமாஅத்தில் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முயற்சி தேவை.** எனவே நாம் எந்த அளவுக்கு வெளியிலுள்ள களத்திற்கு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு இன்னும் கூறுவதென்றால் அதை விட அதிகமாக உட்புறமான களத்திற்கும் நாம் கவனம் செலுத்த வேண்டியது வரும். இது, தப்லீகை விட நமது ஆன்மீக தூய்மை, நமது செயல் அளவிலான சீர்திருத்தம் மிகப் பெரிய புரட்சி ஆகியவற்றை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும். இன்ஷா அல்லாஹ்.

## ஆலிம்கள் மற்றும் முரப்பிகள் உள்ளங்களை சீர்திருத்துங்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் இந்த வழிகாட்டல் நிச்சயமாக மிகவும் முக்கியமானதாகும். அதாவது, ஆலிம்கள், முரப்பிகள் உள்ளங்களை சீர்திருத்தி விட்டால் மக்களின் உள்ளங்களில் இறைஞனம் மற்றும் அல்லாஹ்வின் அன்பை உருவாக்கினால் கோடிக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து விடுவார்கள். அல்லாஹ்வே கூறுகிறான்: ***இஸா ஜாஅ நஸ்ருல்லாஹி வல் ஃபத்ஹ். வரஅய்த்தன்னாஸ யத்குலூன ஃபீ தீனில்லாஹி அஃப்வாஜா. ஃபஸப்பிஹ் பிஹம்தி ரப்பிக்க வஸ்தக்ஃபிர்ஹ்.*** அதாவது, தப்லீகின் மூலமாக நீங்கள் உங்கள் மார்க்கத்தைப் பரப்பினால் ஒருவர் இருவர் என மக்கள் உங்களிடம் வந்து கொண்டிருப்பர். ஆனால் நீங்கள் இஸ்திக்ஃபார் தஸ்பீஹ் செய்வீர்கள் என்றால் உங்களிடமிருந்து பாவங்களை நீக்கி விட்டால் பிறகு கூட்டங்கூட்டமாக மக்கள் வந்து உங்களிடம் சேர்ந்து கொள்வார்கள்.

எனவே நாம் மற்றவர்களை வாயடைக்கச் செய்தோம் என எனக்கு

எழுதுகின்ற ஆலிமிடம் நான் கூறுகிறேன்: அவ்வாறு செய்வதால், செயல் அளவிலான சீர்திருத்தத்தினால் ஏற்படுகின்ற அந்த நோக்கம் கிடைக்காது. எனவே செயல் அளவிலான சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். கிலாஃபத்தின் பிரதிநிதிகளாக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். காலத்தின் கலீஃபாவுக்கு உதவி செய்பவர்களைச் சேர்ந்தவர்களாக ஆகுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஆண்டாண்டு காலமாக நாம் அறிவுப்பூர்வமான வாதங்களில் மட்டுமே சிக்கிக் கொண்டிருக்க முடியாது. மாறாக, நாம் ஜமாஅத்தை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்ல வேண்டுமென்றால்-இன்ஷா அல்லாஹ் கொண்டு செல்ல வேண்டும். அப்போது நாம் வேறு வழிமுறையைக் கையாள வேண்டியது வரும். அது நான் தற்போது கூறியது போன்று, செயல் அளவிலான சீர்திருத்தமாகும். எனவே நாம் நமது செயல்களை நல்லவையாக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது நேர்மை, அமானத் ஆகியவற்றின் தகுதிகளை உயர்த்த வேண்டிய தேவை இருக்கிறது. நாம் வருவாயை ஹலாலான வழிகளில் சம்பாதிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

## பெரிய ஆயுதம் துஆவாகும்

எனவே முரப்பிகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்ற அதே நேரத்தில் ஜமாஅத்தின் ஒவ்வோர் அஹ்மதியும் தன்னைப் பற்றி ஆய்வு செய்து சீர்திருத்தம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அத்துடன் மிகப் பெரிய ஆயுதம் துஆவாகும். அதை எல்லா நேரமும் நாம் கண் முன்னால் வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. மேலும் அதை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு, அதிலிருந்து சரியான முறையில் பயன்பெறுவதற்கு ஈமானில் முன்னேற்றம் அடையுங்கள்; நல்ல செயல்களைச் செய்வதற்கு நான் கொடுத்துள்ள செயல் திட்டத்தின்படி செயல்படுங்கள் என்ற அல்லாஹ்வின் கூற்றை முன்னால் வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே துஆ, செயல் ஆகிய இரண்டுடனும் செல்வீர்கள் என்றால் உண்மையான சீர்திருத்தம் ஏற்பட முடியும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதனைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ✸

## (9)

# குத்பா சுருக்கம் 7 பிப்ரவரி 2014

## செயல் அளவிலான சீர்திருத்தம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவுரைகள்:

ஹுஸூர் அக்தஸ் அய்யத்ஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் செயல் அளவிலான சீர்திருத்தம் பற்றி இந்தக் கருத்தாழம் மிக்க தமது குத்பாவில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களையும் எடுத்துரைத்தார்கள். அவை கீழே தரப்படுகின்றன. **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருள் இருக்கிறது. காலத்தின் கலீஃபாவுக்கு ஒரு விஷயத்தின் பக்கம் கவனம் ஏற்படும்போது அது சீர்திருத்தம் தொடர்பானதாக இருக்குமென்றால் ஜமாஅத்தின் பெரும் பகுதி சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தி விடுகிறது. மேலும் அது பற்றிய கணிப்பு எனக்கு கடிதங்களின் மூலமாகவும் தெரிகிறது. கிலாஃபத்திற்கு அல்லாஹ் வழங்கியுள்ள சில உதவியாளர்களும் தனது நினைவில் இருப்பதற்கேற்ப சில சான்றுகளை எடுத்து அனுப்புகின்றனர். அந்த சான்றுகள் முன்னால் படித்தவையாக இருந்தாலும் சரியே. ஆனால் பார்வையிலிருந்து விலகி விடுகின்றதுன. ஆக, வாழ்க்கை வரலாறு பற்றி நான் சான்று எடுத்துரைப்பேன். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது கவலையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இதுவும் நமது ஒரு முரப்பி சாஹிப் எனக்கு அனுப்பியிருக்கிறார். தாங்கள் செயல் அளவிலான சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் பற்றி குத்பாக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கவலையை வெளிப்படுத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளையும் நான் அனுப்புகிறேன் என அனுப்பி வைத்திருக்கிறார். அல்லாஹ் அவருக்கும் நற்கூலி வழங்குவானாக. வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சான்று இதுவாகும்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

''என்னிடம் மவ்லவி முஹம்மது சர்வர் ஷாஹ் சாஹிப் அவர்கள்

கூறினார்கள். ஒருமுறை ஒரு வேலை பற்றி மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களுக்கும் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. மீர் சாஹிப் கோபமடைந்து ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் சென்று இவ்வாறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது எனக் கூறி கோபத்தை வெளிப்படுத்தினார்கள். மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களுக்கு இது பற்றித் தெரிய வந்தபோது அவர்கள், ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம், நாங்கள் இங்கு ஹுஸூர் அவர்களுக்காக வந்திருக்கின்றோம். ஹுஸூர் அவர்களுக்கு ஏதாவது மார்க்கத் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்பதற்காக வந்துள்ளோம். ஆனால் எங்களைப் பற்றிய முறையீடுகள் இவ்வாறு ஹுஸூர் அவர்கள் வரை வந்து கொண்டிருந்தால் ஹுஸூர் அவர்களும் மனிதர்தான்; ஏதாவதொரு நேரத்தில் ஹுஸூர் அவர்களின் உள்ளத்தில் எங்களைப் பற்றி ஏதாவதொரு கருத்து ஏற்பட்டு விட்டால் பிறகு நாங்கள் காதியானுக்கு வந்ததால் பயன் பெறுவதற்கு பதிலாக நஷ்டம் அடைந்து விடலாம் எனக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறினார்கள்: மீர் சாஹிப் என்னிடம் ஏதோ கூறினார்தான். ஆனால் அவர் என்ன கூறினார்? என்ன கூறவில்லை என்பது எனக்குத் தெரியாது என இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். பிறகு கூறினார்கள்: சில நாட்களாக எனது மூளையில் ஒரு சிந்தனை எவ்வளவு அழுத்தமாக உருவாகிறதென்றால் அது மற்ற அனைத்து விஷயங்களை விட்டும் என்னை நீக்கி அதிலேயே மூழ்கடித்து விட்டது.''

(இது மிகவும் கவனமாகக் கேட்க வேண்டிய விஷயமாகும்).

''எழும்போதும் அமரும்போதும் ஒரே சிந்தனைதான் என் முன்னால் இருக்கிறது. நான் வெளியே மக்களுடன் அமர்ந்திருக்கிறேன். ஒருவர் என்னிடம் ஏதோ ஒரு விஷயத்தைக் கூறுகிறார். அப்போதும் என்னுடைய மூளையில் அதே சிந்தனைதான் சுழன்று கொண்டிருக்கிறது. நான் அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பதாக அவர் கருதுகிறார். ஆனால் நான் இந்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறேன். நான் வீட்டுற்கு செல்லும்போதும் அதே சிந்தனை என்னுடன் இருக்கிறது. சுருக்கமாக இந்த நாட்களில் இந்த சிந்தனை எவ்வளவு அதிகமாக எனது மூளையில் மேலோங்கியிருக்கிறது என்றால் அதில் வேறு எந்த சிந்தனைக்கும் இடமில்லை. அந்த சிந்தனை என்ன? அது என்னவென்றால், எனது வருகையின், உண்மையான நோக்கம் என்ன? உண்மையான நம்பிக்கையாளர்களாக இருக்கின்ற, இறைவன் மீது உண்மையான ஈமான் கொள்கின்ற, அவனுடன் உண்மையான

தொடர்பு கொள்கின்ற, இஸ்லாத்தை தனது வாழ்வியலாகக் கொள்கின்ற, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படி செயல்படக் கூடிய, சீர்திருத்தம் மற்றும் இறையச்சத்தின் வழியில் செல்லக் கூடிய, நல்லொழுக்கத்தின் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டக் கூடிய ஒரு ஜமாஅத் ஆயத்தமாக வேண்டும். அந்த ஜமாஅத்தின் மூலமாக உலகத்திற்கு நேர்வழி கிடைக்க வேண்டும்; இறைவனுடைய நோக்கம் நிறைவேற வேண்டும்.

ஆக, இந்த நோக்கம் நிறைவேறவில்லை என்றால், சான்றுகள் ஆதாரங்கள் மூலமாக நாம் எதிரிகளை வெற்றி கொண்டு விட்டாலும், அவர்களை முற்றிலும் கீழே வீழ்த்தி விட்டாலும் அதாவது வெற்றி பெற்று விட்டாலும், நமது வெற்றி ஒன்றும் வெற்றி அல்ல. ஏனெனில் நமது தோற்றத்தின் குறிக்கோள் நிறைவேறவில்லை என்றால், நமது எல்லா வேலையும் வீணாகி விடுகிறது. ஆனால் சான்றுகள் ஆதாரங்கள் என்ற வெற்றியின் அடையாளங்கள் பகிரங்கமான முறையில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எதிரிகளும் தமது பலவீனத்தை உணரத் தொடங்கி விட்டனர். ஆயினும் நமது தோற்றத்தின் உண்மையான குறிக்கோள் பற்றி நமது ஜமாஅத்தில் இன்னும் குறைவு இருக்கிறது. மேலும் மிகவும் கவனம் தேவைப்படுகிறது. எனவே இந்த சிந்தனை இன்றைய காலத்தில் என்னை தின்று கொண்டிருக்கிறது. இது என்னை எந்த நேரத்திலும் என்னை விட்டு விடாத அளவுக்கு என் மீது மேலோங்கி இருக்கிறது.''

ஆக, இந்த வேதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நிம்மதியிழக்கச் செய்தது. பல்வேறு நேரங்களில் அஹ்மதிகள் எப்படி இருக்க வேண்டும்? என்பதைப் பற்றி அவர்கள் ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். மற்ற நூல்கள் மட்டுமின்றி, அவர்களின் கூட்டங்களில் நடந்த அறிக்கைகள் விளக்கமாக இல்லாவிட்டாலும் சுருக்கமாக இருக்கின்றன. அவை மல்ஃபூஸாத் என்ற பெயரில் 10 தொகுதிகளில் இருக்கின்றன. அவற்றில் எந்த ஒரு தொகுதியை நீங்கள் எடுத்தாலும் அவர்கள் ஜமாஅத்திடம் வைத்திருந்த நம்பிக்கை, ஜமாஅத்துக்கு வழங்கிய அறிவுரைகள், செயல் அளவிலான நிலைமைகளின் மாற்றம் தொடர்பான கட்டுரைஆகியவற்றை எல்லா இடத்திலும் எல்லா கூட்டத்திலும் பல்வேறு கோணங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றிலிருந்து சிலவற்றை இப்போது நான் எடுத்துக் கூறுகிறேன். **அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''ஜமாஅத் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும் அன்புடனும் இருப்பது பற்றி நான் முதலில் பலமுறை கூறியிருக்கிறேன். நீங்கள் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டிருங்கள். **ஒன்றாக இருங்கள்.** நீங்கள் இணைந்திருங்கள்; **இல்லையென்றால் நீங்கள் உறுதித்தன்மையை இழந்து விடுவீர்கள்.** ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே தொழுகையில் ஒருவர் மற்றவருடன் இணைந்து நிற்க வேண்டும் என்ற கட்டளை இருக்கிறது. அப்போதுதான் ஒருவரைப் பற்றிய செய்தி மின்னல் ஆற்றலைப் போன்று இன்னொருவருக்குள் நுழையும். கருத்து வேறுபாடு இருந்தால், **ஒற்றுமை இல்லாவிட்டால் பிறகு பேறிழந்தவர்களாகி விடுவீர்கள்.** ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்; ஒருவர் மற்றவருக்காக மறைமுகமான முறையில் துஆ செய்யுங்கள்.''

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இப்போது, இங்கே ஒருவர் மற்றவருக்காக மறைமுகமான முறையில் துஆ செய்பவர்கள் நம்மில் எத்தனை பேர் இருக்கின்றனர் என நாம் பார்க்க வேண்டும்; ஆய்வு செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''ஒருவர் மறைமுகமான முறையில் துஆ செய்கின்றார் என்றால் மலக்கு உமக்காகவும் அவ்வாறே உண்டாவதாக எனக் கூறுகிறார். எவ்வளவு உயர்ந்த விஷயமாகும். மனிதனின் துஆ ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் மலக்கின் துஆ ஒப்புக்கொள்ளப்படுமல்லவா?** ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என நான் உங்களுக்கு அறிவுரை கூற விரும்புகிறேன்.''

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நான் இரண்டு விஷயங்களையே கொண்டு வந்திருக்கிறேன். ஒன்று, இறைவனின் தவ்ஹீதை மேற்கொள்ளுங்கள். இரண்டாவது ஒருவருக்கொருவர் அன்பையும் அநுதாபத்தையும் வெளிப்படுத்துங்கள். மற்றவர்களுக்கு அற்புதமாக இருக்கும் முன்மாதிரியைக் காட்டுங்கள். இந்த சான்றே சஹாபிகளிடம் உருவானது. ***குன்த்தும் அஃதாஅன் ஃபஅல்லஃப பைன குலூபிக்கும்*** (அதாவது நீங்கள் பகைவர்களாக இருந்தீர்கள்; அவன் உங்கள் உள்ளங்களில் அன்பை உருவாக்கினான். திருக்குர்ஆன் 3:104). நினைவிற் கொள்ளுங்கள். உள்ளங்களை ஒன்றுபடுத்துதல் ஓர் அற்புதமாகும். உங்களில் ஒருவர் தனக்காக விரும்புவதையே தனது

சகோதரருக்காகவும் விரும்பாதவரை அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். **அவர் துன்பமும் சோதனையுமாவார். அவருடைய முடிவு நல்லதன்று.''**
**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' வெறுப்பு நீங்குவது மஹ்தியின் அடையாளமாகும். அந்த அடையாளம் நிறைவேறாதா என்ன? அது கண்டிப்பாக நிறைவேறும். நீங்கள் ஏன் பொறுமை செய்வதில்லை? இது மருத்துவத்தைப் போன்றுதான். சில நோய்களில் சில விஷயங்கள் நீக்கப்படாதவரை நோய் நீங்குவதில்லை. என் மூலமாக ஒரு சாலிஹான ஜமாஅத் உருவாகும். இன்ஷா அல்லாஹ். ஒருவருக்கொருவருடனான பகைமைக்குக் காரணம் என்ன? கருமித்தனம், ஆணவம், தன்னலம், ஆவேசம் ஆகியவைதான். தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத, ஒருவருக்கொருவர் அன்புடனும் சகோதரத்துவத்துடனும் இருக்க முடியாத அப்படிப்பட்ட அனைவரையும் நான் ஜமாஅத்திலிருந்து தனியாக்கி விடுவேன். **அப்படிப்பட்டவர்கள் நல்ல முன்மாதிரியைக் காட்டாதவரை சில நாள் விருந்தினர்களாவர் என்பதை நினைவிற் கொள்ளட்டும்.** நான் யாருக்காகவும் என் மீது ஆட்சேபணையை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருந்து எனது குறிக்கோளுக்கேற்ப இல்லாவிட்டால் அவர் காய்ந்த கிளையாவார். அதை தோட்டக்காரர் வெட்டாமல் என்ன செய்வார்? காய்ந்த கிளை பசுமையான மற்ற கிளையுடன் இருந்து தண்ணீரை உறுஞ்சுகிறது. ஆனால் அது தன்னை பசுமையாக ஆக்க முடியாது. மாறாக, அந்தக் கிளை மற்றவற்றையும் விழுங்கி விடுகிறது. எனவே அஞ்சுங்கள். தனக்கு சிகிச்சை அளிக்காதவர் என்னுடன் இருக்க முடியாது.''

இந்த மேற்கோளை நாம் முன்னரும் பலமுறை கேட்டிருக்கிறோம்; படிக்கிறோம். ஆனால் ஜமாஅத்தின் செயல் அளவிலான சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த விஷயம் பற்றியும் தனக்கு உணர்வே இருப்பதில்லை என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளிப்படுத்திய அந்த வேதனையுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிறகு குறிப்பிட்ட கவலை உருவாகிறது.

பிறகு எப்போது ஒரு மனிதன் உண்மையான நம்பிக்கையாளர் என அழைக்கப்படுகிறார்? என்பதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எல்லா விஷயத்திலும் அல்லாஹ் முதன்மையாகாதவரை,

அவன் என்னுடையவன்தான் என்பதை அவர் உள்ளத்தில் பார்த்து புரிந்து கொள்ளாதவரை எவரும் உண்மையான நம்பிக்கையாளராகக் கருதப்பட முடியாது. அப்படிப்பட்டவர் பொதுவான இலக்கணத்தின்படி, நம்பிக்கையாளர், முஸ்லிம் எனக் கருதப்படுவார். உதாரணமாக, தோட்டியும் முஸல்லி (தொழுகையாளி) ஆகவும், முஃமின் (நம்பிக்கையாளர்) ஆகவும் ஆக முடியும். முஸ்லிம் என்பவர் ***அஸ்லம வஜ்ஹஹூ லில்லாஹ்*** (தனது விருப்பத்தை அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்துவிட்டவர்) என்பதற்கு பொருத்தமானவராக இருக்க வேண்டும். (விருப்பம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ள) ***வஜ்ஹுன்*** என்பது முகத்திற்குக் கூறப்படும். ஆனால் இது ஒருவருடைய இருப்புக்கும் கூறப்படும். எனவே எவர் தன்னை முழுவதுமாக அல்லாஹ்வுக்கு முன்னால் வைத்து விட்டாரோ அவர் உண்மையான முஸ்லிம் என அழைக்கப்படுவதற்கு உரிமை பெற்றவராவார். எனக்கு நினைவிருக்கிறது. ஒரு முஸ்லிம் ஒரு யூதருக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார். (அதாவது இஸ்லாத்தின் பக்கம் அழைத்தவர் முஸ்லிமாக இருந்தார்). அவர் தீமைகளிலும் தீயவற்றிலும் மூழ்கியிருந்தார். யூதர் அந்த தீய செயலைக் கொண்ட முஸ்லிமிடம், முதலில் உன்னைப் பார்; முஸ்லிம் என்பதில் நீ பெருமைப் படாதே என்றார். இறைவன் இஸ்லாம் என்பதன் கருத்தை விரும்புகிறான்; பெயரையோ சொல்லையோ அல்ல.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''செயல் இல்லாதவரை வெறும் சொல் மற்றும் வாய்ப்பேச்சு எதற்கும் உதவாது. வெறும் பேச்சுகளுக்கு அல்லாஹ்விடம் எந்த மதிப்புமில்லை. இறைவன் கூறுகிறான்: ***கபுர மக்த்தன் இந்தல்லாஹி அன் தகூலூ மாலா தஃப்அலூன்.*** (நீங்கள் செய்யாத ஒன்றை மற்றவர்களுக்கு செய்யுமாறு கூறுவது அல்லாஹ்விடம் வெறுக்கத் தக்கதாகும்.). பிறகு கூறினார்கள்: நீங்கள் இஸ்லாத்திற்கு தொண்டு செய்ய விரும்பினால் முதலில் இறையச்சத்தையும் தூய்மையையும் மேற்கொள்ளுங்கள். ***சாபிரூ வராபிதூ.*** இது சூரா ஆல இம்ரானின் ஆயத் ஆகும்.

எவ்வாறு எதிரிகள் எல்லையைக் கடந்து வந்து விடக் கூடாது என்பதற்காக எதிரிகளை எதிர்த்து நிற்க எல்லையில் குதிரைகளைக் கட்டுவது அவசியமோ அவ்வாறே எதிரிகள் எல்லையைக் கடந்து வெளியே வந்து இஸ்லாத்திற்கு துன்பத்தைத் தந்து விடக் கூடாது. நான் முன்னரும் கூறியிருக்கிறேன். நீங்கள் இஸ்லாத்திற்கு உதவியும்

தொண்டும் செய்ய விரும்புகிறீர்கள் என்றால் முதலில் நீங்கள் இறையச்சம் மற்றும் தூய்மையை மேற்கொள்ளுங்கள்; அதனால் நீங்கள் இறைவனின் பாதுகாப்புக் கோட்டைக்குள் வந்துவிட முடியும். பிறகு இந்தத் தொண்டிற்கான சிறப்பும் உரிமையும் கிடைக்கும். முஸ்லிம்களின் வெளிப்புறமான ஆற்றல் எவ்வாறு பலவீனமாகி இருக்கிறது என்பதை நீங்கள் காண்கிறீர்கள். சமுதாயங்கள் இதை வெறுப்புடனும், ஏளனத்துடனும் பார்க்கின்றன.''

( ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: மேலும் இன்று நாம் பார்க்கின்றபோது முன்னரை விட அதிகமாக மோசமாகி இருக்கிறது.)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''உங்களுடைய உட்புறமான, உள்ளத்தின் ஆற்றலும் பலவீனமாகி விட்டால் பிறகு முடிந்து போயிற்று என்றே கருத்துங்கள். நீங்கள் உங்கள் உள்ளங்களில் தூய ஆற்றல் நுழையும் அளவுக்கு தூய்மையாக்குங்கள். மேலும் அவை எல்லைப் புறங்களில் கட்டப்பட்ட குதிரைகளைப் போன்று உறுதியானதானவையாகவும், பாதுகாப்பானவையாகவும் இருக்கட்டும். அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சமுடையவர்கள், நேர்வழிபெற்றவர்கள் ஆகியோருடனேயே இருக்கிறது. இஸ்லாத்திற்கு கறையை ஏற்படுத்தும் அளவுக்கு உங்களுடைய ஒழுக்கத்தையும் நடத்தையையும் ஆக்காதீர்கள். தீயவர்கள், இஸ்லாத்தின் போதனைப்படி நடக்காதவர்கள் ஆகியவர்களால் இஸ்லாத்திற்கு களங்கம் ஏற்படுகிறது. ஏதாவதொரு முஸ்லிம் மது அருந்துகிறார் என்றால், அவர் வாந்தி எடுத்துக் கொண்டு திரிகிறார். தலையில் தலைப்பாகை இருக்கிறது. அசுத்தமான சாக்கடையில் வீழ்ந்து கிடக்கிறார். காவல்துறையினர் காலால் உதைக்கின்றனர். இந்துக்களும், கிறித்தவர்களும் சிரிக்கின்றனர். ஷரீஅத்திற்கு மாற்றமான அவருடைய செயல் அவருடைய ஏளனத்திற்கு மட்டும் காரணமாக இருக்காமல், திரைக்குப் பின்னால் அதன் பாதிப்பு இஸ்லாம் வரை நடக்கிறது. எனக்கு அப்படிப்பட்ட செய்திகளை அல்லது சிறைச்சாலை சம்பவங்கள் பற்றிய அறிக்கைகளைப் படித்து மிகவும் துக்கம் ஏற்படுகிறது. இத்தனை முஸ்லிம்கள் தீய செயல்களை செய்ததன் காரணமாக தண்டனைக்குரியவர்களாகி இருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு எனக்கு மிகுந்த வருத்தம் ஏற்படுகிறது. நேரான வழியைக் கொண்டிருக்கும் இவர்கள் தமது தீய செயல்களின் காரணமாக தமக்கு மட்டுமின்றி இஸ்லாத்தையும் ஏளனம் செய்ய வைக்கின்றனர்.

இதனால் நான் கூற வந்த கருத்து, முஸ்லிம்கள் முஸ்லிம் என

அழைக்கப்பட்டு அவர்களுக்கு மட்டுமின்றி இஸ்லாத்தையும் சந்தேகத்திற் குரியதாக்கும் அளவிலான, தடை செய்யப்பட்டுள்ள விஷயங்களின் பக்கம் செல்கின்றனர். எதிரிகளுக்கும் உங்கள் மீது ஆட்சேபணை செய்ய - உண்மையில் அது இஸ்லாத்தின் மீதான ஆட்சேபணை செய்யும் சந்தர்ப்பம்தான் - அது ஏற்படாத அளவுக்கு உங்கள் நல்லொழுக்கத்தை நடத்தைகளை உருவாக்குங்கள்.''

ஆக, இதைத்தான் நாம் அனைவரும் பெற முயற்சி செய்ய வேண்டியதிருக்கிறது; செய்யவும் வேண்டும். இறையச்சத்தின்படி நடக்க வேண்டும். நமது செயல்களை சீர்திருத்த வேண்டும். நமது ஈமானின் தரத்தை உயர்த்த வேண்டும். இவை சாதாரண விஷயங்கள் அல்ல. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப முழுமையாக செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு சின்னச் சின்ன நன்மையையும் நாம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு தீமையையும் நாம் முழுமையாக வெறுக்க வேண்டும். அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை அதிகமாக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. நாம் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்பவர்களாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. அப்போதுதான் நாம் நமது பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாவோம். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. ✸